பக்கங்கள்: 20

விலை:20 ரூபா

# காலைக்கதிர்

Kalàikkathir

விழயல் 01 | வள்ளுவர் ஆண்டு 2047 | மார்கழி 23, சனிக்கிழமை 07.01.2017 | கதிர் 63

மீண்டும் புதுப் பொலிவுடன்
சாறிகளின் சாம்ராஜ்ஜியம்
சரவணா
ரெக்ஸ்
இல.526,529 பருத்தித்துறை வீதி,
நல்லூர்,யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0778448045
இல.171, பிரதான வீதி,
நெல்லியடி.
தொ.பே.: 021 226 2992

# தமிழர்களுக்கு திருப்தி தராத தீர்வை ஏற்கவே மாட்டோம்!

## சம்பந்தன் திட்டவட்டமாகத் தெரிவிப்பு கூட்டமைப்புக் கூட்டத்தில் அறிவிப்பு



கொழும்பு, ஜனவரி 07

**"நமது தமிழ் மக்களுக்கு திருப்தி தராத எந்தத் தீர்வுக்கும் நாம் இணங்கவே மாட்டோம்."**

**- இவ்வாறு திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கின்றார் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன்.**

**நேற்று மாலை நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே இந்த அறிவிப்பை அவர் தெளிவாக வெளிப்படுத்தினார்.**

இந்தக் கூட்டம் எதிர்க்கட்சித் தலைவரின் கொழும்பு உத்தியோகபூர்வ அலுவலகத்தில் நேற்று மாலை 4.45 மணி முதல் 8 மணிவரை கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் அதன்தலைவர்மாவைசேனாதிராஜா எம்.பி, அதன் துணைச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. ஆகியோரும் -

பக்கம் 19 >>>

## இறந்தவர்களை நினைவுகூர்வதற்கு உறவினர்களுக்கு உரிமை உண்டு

### கிளிநொச்சி நீதிமன்றம் தெரிவிப்பு

பயங்கரவாதத் தடைச்சட்டம் அமுலில் உள்ள நிலையில், மாவீரர் துயிலும் இல்லங்களுக்குள் எவரும் செல்ல அனுமதிக்கக் கூடாது என்று கிளிநொச்சிப் பொலிஸார் கிளிநொச்சி நீதிமன்றிடம் விடுத்த கோரிக்கையை மன்று நிராகரித்துள்ளது.

இறந்தவர்களை நினைவு கூர அவர்களின் உறவினர்களுக்கு உரிமை உண்டு என்று நீதிமன்று சுட்டிக்காட்டியது.

கிளிநொச்சி - கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லம் தொடர்பான வழக்கு நேற்று கிளிநொச்சி நீதிமன்றில் இடம் பெற்றபோதே நீதிவான் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

துயிலும் இல்லத்தில் கட்டு

பக்கம் 19 >>>

## நாட்டைப் பிளவுபடுத்துமாயின் அரசமைப்பைத் தோற்கடிப்போம்!

### பௌத்த மதத் தலைவர்கள் ஒன்றிணைந்து சூளுரை

கொழும்பு, ஜன.07

மைத்திரி - ரணில் தலைமையிலானநல்லாட்சிஅரசால்உருவாக்கப்படும் புதிய அரசமைப்பின் ஊடாக நாட்டைப் பிளவுபடுத்துவதற்கு முயற்சித்தால் புதிய அரசமைப்பைத் தோற்கடித்தேதீருவோம்என்றுபௌத்த மதத் தலைவர்கள் இணைந்து சூளுரைத்துள்ள னர்.

வெளிநாட்டுக்குத் தேவையான சட்டங்களை இலங்கையில் உருவாக்குவதற்கு அரசசார்பற்ற நிறுவனங்கள் முயற்சித்து வருகின்றன எனக்குற்றம் சாட்டிய பௌத்த தலைவர்கள், பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை புதிய அரசமைப்பின்

பக்கம் 20 >>>

## இறக்குமதியாகும் அரிசிக்கு ஒரேயடியாக வரிக் குறைப்பு

### கிலோவுக்கு ஆக ரூ.15 பண்டவரி மட்டும்

கொழும்பு, ஜன.07

இறக்குமதி செய்யப்படும் அரிசிக்கான வரி நேற்று நள்ளிரவுமுதல்குறைக்கப்பட்டுள்ளது.

இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ அரிசிக்கு இதுவரை அறவிடப்பட்டு வந்த 50 ரூபா சுங்கவரி, 15 வீதம் வற்வரி, 7.5 வீதம் துறைமுக மற்றும் விமான நிலைய வரி, 2வீதம் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி ஆகிய அனைத்து வரிகளும் நீக்கப்பட்டு ஆக 15ரூபா விசேட பண்ட வரி மட்டுமே அறவிடப்படவுள்ளது என நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

இதன்படி இறக்குமதி செய்

பக்கம் 20 >>>

## மாவீரர் சமாதி அமைப்பதைத் தடுக்க

## எம்.பியின் ஊடக உதவியாளர் ஒருவரை கூட்டிச் சென்ற பிரதேச சபை செயலர்!

### தவறைச் சுட்டிக்காட்டியது நீதிமன்றம்

கிளிநொச்சி, ஜன.07

கிளிநொச்சிமாவீரர் துயிலும் இல்லத்தில் இடம்பெற்றபொதுச் சமாதி அமைக்கும் பணியைத் தடுப்பதற்காகச் சென்ற கரைச்சி பிரதேச சபைச் செயலாளர் க.கம்சநாதன் அதற்கு எம்.பி. ஒருவரின் ஊடக உதவியாளரை தனது வாகனத்தில் கையோடு அழைத்துச் சென்றமைக்கு கிளிநொச்சி நீதிமன்று அவரைக் கடுமையாகச் சாடியது.

அலுவலக நேரத்தில் அலுவலக வாகனத்தில் ஊடகவியலாளரை அழைத்துச் சென்றமை தவறு என்றும் நீதிமன்று சுட்டிக்காட்டியுள்ளது.

பக்கம் 19 >>>

அளப்பு அருணாசலம்



வரி குறைஞ்சாலும்... விலை குறைப்பீனமோ...?

## 51 தமிழக மீனவர்கள் விடுதலை

யாழ்ப்பாணம், ஜன.07

இலங்கைக்கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து கடற்றொழிலில் ஈடுபட்டிருந்தனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு, இலங்கைச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்த மொத்தம் 51 மீனவர்கள் இலங்கைநீதிமன்றங்களினால் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

மன்னார் நீதிமன்றம் 12 இந்திய மீனவர்களையும், ஊர்காவற்றுறைநீதிமன்றம் 39 இந்தியமீனவர்களையும்விடுதலை செய்து நேற்று உத்தரவிட்டன.

இலங்கை - இந்திய தரப்புகளுக்கு இடையில் கடந்த 2 ஆம் திகதி கொழும்பில் இடம் பெற்ற பேச்சுக்களை அடுத்து இவர்களை விடுதலை செய்ய இணக்கம் காணப்பட்டிருந்தது.

பக்கம் 19 >>>

## கனகபுரம் துயிலும் இல்லக் காணி பிரதேச சபைக்கு சொந்தமானதா?

### ஆவணங்களைச் சமர்ப்பிக்க நீதிமன்று உத்தரவு

கிளிநொச்சி, ஜன.07

கிளிநொச்சி - கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லக் காணி, கரைச்சிப் பிரதேச சபையின் பராமரிப்பில் உள்ள சுடலையாயின், அதற்கான ஆவணங்களை அடுத்த வழக்குத் தவணையின்போது மன்றுக்கு சமர்ப்பிக்கவேண்டும் என்று, கிளிநொச்சி நீதிமன்று கரைச்சி பிரதேச சபைச் செயலாளருக்கு உத்தரவிட்டுள்ளது.

மேற்படி மாவீரர் துயிலும் இல்லத்தில் பொதுச் சமாதி அமைப்பதற்கு நேற்று முந்தினம் வியாழக்கிழமை அடிக்கல் நடப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில், அங்கு சென்ற கரைச்சிப் பிரதேச சபைச் செயலாளர் பொலிஸாரின் உதவியுடன் அந்தச்

பக்கம் 19 >>>

# வசிம் தாஜுதீனின் வாகனத்தில் பின் ஆசனத்தில் மர்ம மனிதர்!

## கண்காணிப்புக் கமராவில் பதிவாகியுள்ளதாம்

கொழும்பு, ஜன.07

படுகொலை செய்யப்பட்ட பிரபல றக்பி வீரர் வசிம் தாஜுதீனின் வாகனத்தின் பின் இருக்கையில் அமர்ந்து சம்பவம் நடந்த அன்று அடையாளம் தெரியாத நபர் ஒருவர் பயணித்திருந்தமை தெரிய வந்துள்ளது.

ரக்பி வீரர் வசிம் தாஜுதீனின் கொலை வழக்கு நேற்று கொழும்பு நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

வசிம் தாஜுதீன் படுகொலை செய்யப்பட்டதினத்தன்றுஅவருடையவாகனத்தின்பின்ஆசனத்தில் அமர்ந்து அடையாளம் தெரியாத நபர் ஒருவர் பய்ணித்திருந்தமைதொடர்பாகத்தெரிய வந்துள்ளது என்று சட்டமா அதிபர் சார்பாக மன்றில் ஆஜராகியிருந்த பிரதி சொலிஸிட்டர் நேற்று நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

இந்தக் கொலை இடம்பெற்ற போதுபதிவாகியகண்காணிப்புக் கமராப் பதிவுகளை வைத்தே அடையாளம் தெரியாத நபர் ஒருவர் தாஜுதீனின் வாகனத்தின்பின் இருக்கையில் அமர்ந்து சென்றுள்ளமையைக் கண்டு கொள்ள முடிந்துள்ளது என குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் தெரிவித்தனர்.

இந்தப் படுகொலை தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் பிரதிப் பொலிஸ்மாஅதிபர்அநுரசேன நாயக்க மற்றும் நாரஹேன்பிட்டி பொலிஸ் நிலைய குற்றப் பிரிவின் முன்னாள் பொறுப்பதிகாரி சுமித் பெரேரா ஆகிய இருவரையும் இந்த மாதம் 19ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதிவான் ஜெயராம் ட்ரொக்சி உத்தரவிட்டுள்ளார்.

இந்தக் கொலை தொடர்பான விசாரணையின் முன்னேற்ற அறிக்கை ஒன்றை எதிர்வரும் 19ஆம் திகதி நீதிமன்றத்துக்குச் சமர்பிக்குமாறும் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு மேலதிகநீதிவான்உத்தரவிட்டுள்ளார்.

# இங்கு வாங்கிய நெல்லை இங்கேயே வழங்குங்கள்!

## யாழ். வணிகர் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன.07

“வடமாகாணத்தில் கொள்வனவு செய்யப்பட்ட நெல்லை பிற மாவட்டங்களுக்கு விநியோகிப்பதை தடுத்தல்'' என்ற தலைப்பில் யாழ்.வணிகர் கழகம் நேற்று அறிக்கை ஒன்றை விடுத்தது. அதன் முழு விவரம் வருமாறு :-

நாட்டில்நிலவும்வறட்சியான காலநிலை காரணமாக அரிசி விலைகளில் பாரியளவிலான ஏற்றங்கள் ஏற்பட்டு வருகின்றமையை மக்கள் கவலையுடன் அவதா னித்து வருகின்றனர். நாட்டில் அரிசிக்குப் பற்றாக்குறை ஏற்ப டுகையில் அதனை நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் ஒரே வகையில் சீர்செய்யும் கடப்பாடு அரசுக்கு உண்டு என்பதனை நாம் அறிவோம். எனவே நெல் மிக அதிகமாக விளையும் இடங்களிலிருந்து நெல் குறைவாக உள்ள இடங்களுக்கு விநியோகித்து சம நிலையைப் பேண நெல் சந்தைப்படுத்தும் சபை முயற்சிஎடுத்துவருவதை நாம் நிராகரிக்கவும் இல்லை. ஆனால் பிரதேசங்களில் நிலவக்கூடிய தனித்துவமான அம்சங்களையும் நெல் சந்தைப்படுத்தும்சபைகவனிக்க வேண்டும் என்றே நாம் வலியுறுத்த விரும்புகின்றோம்.

நாட்டின் வடமாகாணத்தில் உள்ளவர்களே சிவப்பரிசியை உணவுக்காக பயன்படுத்தி வருகின்றனர். இந் நிலையில் இப்பகுதியில் விளையும் சிவப்பரிசிக்கான நெல்லை பிற மாவட்டங்களுக்கு விற்பனைசெய்வது வடமாகாணத்தில் சிவப்பரிசிக்கான தட்டுப்பாட்டை மேலும் அதிகரிக்கும். இந்நிலை மோசமானால் வெளிநாடுகளில் இருந்துசிவப்பரிசியைக்கூடுதல் விலைக்கே இறக்குமதி செய்ய வேண்டியேற்படும். ஏனெனில் சிவப்பரிசியை உணவுக்காக பயன்படுத்துபவர்கள் இலங்கையில் வடமாகாணத்தவர்கள் மட்டுமே என்பதுடன் ஏனைய நாடுகளைப் பொறுத்தவரை கேரளாவில் இருந்து மட்டுமே இந்த அரிசியை இலங்கை அரசாங்கம் இறக்குமதி செய்ய வேண்டியிருக்கும். இதனால் விலை அதிகம் செலுத்தவேண்டிய நிலை அரசுக்கு ஏற்படலாம். இதனைத் தவிர்க்க வடமாகாணகளஞ் சியசாலையில் தற்சமயம் கையிருப்பில் இருக்கும் நெல்லை வடமாகாண மக்களுக்கு மட்டுமே விநியோகிப்பின் அரசுக்கு அது இலாபகரமானதாக அமையும் என்பதை அழுத் தமாகச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

மேலும் எதிர்வரும் தைப் பொங்கல் மற்றும் வருடப்பிறப்பு நாள்களில் வட.மாகாண மக்களின் அரிசிக்கான தேவை மிக அதிகமாக இருக்கும் என்பதையும் இந் நிலையில் சிவப் பரிசிக்கான தட்டுப்பாடு மக்கள் மத்தியில் பெரிதும் அதிருப்தியை ஏற்படுத்தும்என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும் என நெல் சந்தைப் படுத்தும் சபைத் தலைவரை யாழ். வணிகர் கழகம் கேட்டுக்கொள்கின்றது – என்று உள்ளது.

# அம்பாந்தோட்டையில் ஆர்ப்பாட்டம் நடத்தத் தடை விதித்தது நீதிமன்றம்

அம்பாந்தோட்டையின் குறிப்பிட்டசிலபிரதேசங்களில்இன்று ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட முடியாது என்று அம்பாந்தோட்டை நீதிமன்றம் தடை யுத்தரவு பிறப்பித்துள்ளது.

முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் இன்று அம்பாந்தோட்டையில் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட இருந்த நிலையிலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நேற்று முதல் 14 நாள்களுக்கு இந்தத் தடையுத்தரவு அமுலில் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஆர்ப்பாட்டத்துடன் தொடர்புடைய 26 பேருக்கு இது தொடர்பில் தனிப்பட்ட முறையில் அறிவிக்குமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் பதவி விலகல்!

கொழும்பு, ஜன.07

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவராகப் பணியாற்றி வந்த பேராசிரியர், சிறி ஹெற்றிகே ஆணைக்குழுவின் தலைமைப் பதவியிலிருந்து இராஜினாமாச் செய்கிறார் என்றும், எனினும்அவர் ஆணைக்குழுவின் உறுப்பினராகத் தொடர்ந்தும் செயற்படுவார் என்றும்தெரிவிக்கப்படுகின்றது. ஜேர்மன் பல்கலைக்கழகம் ஒன்றில் விரிவுரையாளர் நியமனம் கிடைத்தமையாலேயே இந்த முடிவை அவர் எடுத்தார் என்றும் –

தனது வெளிநாட்டுப் பணியை முடித்துக்கொண்டு பெப்ரவரியில் அவர் நாடு திரும்புவார் என எதிர்பார்க்கப்படுகின்றது என்றும் –

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின்செயலாளர்ஆரியதாஸ குரே தெரிவித்தார். (உ)

# வவுனியா மூன்றுமுறிப்பு சந்தியில் நேற்று விபத்து, ஒருவர் காயம்

வவுனியா– ஏ9 வீதி மூன்றுமுறிப்பு சந்தியில் நேற்று வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணியளவில் பட்டா ரக வாகனமும் முச்சக்கரவண்டியும் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் காயமடைந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

வவுனியாவிலிருந்து மதகுவைத்தகுளம் நோக்கிப் பயணித்த முச்சக்கரவண்டி, வீதியின் குறுக்கே வழித்தடம் மாறுவதற்கு முற்பட்டபோது அதே வீதி வழியாக பட்டா ரக வாகனத்தை ஓட்டிச் சென்ற சாரதி தடுமாறி வாகனத்தை சடுதியாகதிருப்பமுயன்றார்என்றும் இதன் போது இரு வாகனங்களும் மோதி விபத்துக்குள்ளாகின என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

விபத்தின்போது, பட்டா வாகனம் வீதியை விட்டு விலகி அருகில் இருந்த மின்கம்பத்துடனும் மோதி, பக்கத்தில் இருந்த வீட்டு வேலியின் கம்பிக் கட்டைகளை உடைத்துக்கொண்டு சென்றது. இதனால் விபத்தில் பட்டாரக வாகனத்தில் பயணித்தவர் காயமடைந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம–100)

# புத்தூரில் இன்று மின்னொளியில் கரப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஜன.07

புத்தூர் மேற்கு கலையரசி விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியும் பரிசளிப்புநிகழ்வும் இன்று சனிக்கிழமை இரவு 7மணி முதல் விளையாட்டுக் கழக மைதானத்தில் கழகத் தலைவர் செல்வம் கதிர்காமநாதன் தலைமையில் நடைபெறும்.

வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் புத்தூர் உப அலுவலகப் பொறுப்பதிகாரி செ.தயாபரக்குருக்கள், யாழ்.மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத் தலைவர் மு.மனோகரன், புத்தூர் ப.நோ.கூ.சங்கத் தலைவர் தி.தாமரைச்செல்வன், ஆசிரிய ஆலோசகர் வ.செந்தூரன், புத்தூர் மேற்கு கிராம அலுவலர் எஸ்.சிவாநந்தன், சட்டத்தரணி சோ.தேவராசா, கலைமதி சன சமூக நிலையத் தலைவர் ச.தவராசா, ஆசிரியர் த.சிறிப்பிரகாஷ், கலைமதி சனசமூக நிலையச் செயலாளர் நா.ஆனந்தஜெயராசா, நிலையத்தின் உபதலைவர் இ.றதீபன், கோப்பாய்த் தொகுதி இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் ரவீந்திரன் பகீரதன் ஆகியோர் இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொள்வர். (உ)

## ‘சிரிக்கவும் சிந்திக்கவும்’ நூல் வெளியீடு

இணுவையூர் கலாபூசணம் ஆ.இரகுபதி பாலஸ்ரீதரனின் ‘சிரிக்கவும் சிந்திக்கவும்’ நூல் வெளியீட்டுவிழாவும் தில்லைச் சிரிப்புநிகழ்வும் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணிக்கு கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் முன்னாள் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் க.அரசரட்ணம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் சூரியன் எவ்.எம்.பணிப்பாளர் ஏ.ஆர்.வி. லோஷன் வரவேற்புரையையும் கொழும்பு தமிழ்ச் சங்கத் தலைவர் தம்பு சிவசுப்பிரமணியம், நூல் வெளியீட்டுரையையும் வழங்குவர்.

டாக்டர் சங்கரப்பிள்ளை மனோகர் முதற் பிரதியையும், புரவலர் ஹாஷிம் உமர், தொழிலதிபர் குகநேசன்குகன் , நாவலர் நற்பணிமன்றத்தலைவர் ந.கருணை ஆனந்தன், சட்ட ஆலோசகர் கு.மு.தர்மராசன் ஆகியோர் சிறப்புப்பிரதிகளையும் பெறுவர்.

நூலாசிரியர் ஏற்புரையைத் தொடர்ந்து உடுவை எஸ்.தில்லைநடராஜாவின் ‘தில்லைச் சிரிப்பு’ நிகழ்ச்சி இடம்பெறும். (உ)

# ஊர்காவற்றுறையில் தெரிவுசெய்யப்பட்ட பொது அமைப்புக்களுக்கு உபகரணங்கள்

## ஈ.பி.டி.பி. ஏற்பாட்டில் வழங்கப்பட்டது



ஊர்காவற்றுறை, ஜன.07

ஊர்காவற்றுறை பிரதேசத்தில்தெரிவுசெய்யப்பட்டபொது அமைப்புகளுக்கு ஈழமக்கள் ஜனநாயக கட்சியினரால் தளபாடங்கள் மற்றும் வாத்தியக் கருவிகள் வழங்கப்பட்டன.

மேற்படி பகுதியில் உள்ள இருதய ஆண்டவர் கற்றல் பிரிவின் நிர்வாகம், சென்.செபஸ்ரியார் முன்பள்ளி மற்றும் எழுவைதீவு தோமையார் முன்பள்ளி ஆகியன ஈ.பி.டி.பியிடம் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக நாடாளுமன்ற உறுப்பினரும் கட்சியின் செயலாளருமான டக்ளஸ் தேவானந்தாவின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கிட்டின் மூலம் அவற்றுக்கு உதவிப் பொருட்கள் வழங்கப்பட்டன.

ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தில், பிரதேச செயலாளர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின்யாழ்.மாவட்டநிர்வாகச் செயலாளருமான வே.குகேந்திரன் (ஜெகன்) சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உபகரணங்களை வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் கட்சியின் ஊர்காவற்றுறைப்பிரதேசநிர்வாகச் செயலாளர்ம.ஜெயகாந்தன்மற்றும் பயனாளிகள் பலரும் கலந்துகொண்டனர். (ம)

# நம்பிக்கை நிதியக் கொடுப்பனவு தனியார் துறையினருக்குக் கிட்டுமா?

கொழும்பு, ஜன.07

தனியார் துறைப்பணியாளர்களின் நம்பிக்கை நிதியக் கொடுப்பனவு (E.T.F), அவர்களுக்கு கிடைக்க வாய்ப்பு உண்டா என்பது சந்தேகத்துக்கு உரியதாக மாறி உள்ளது.

அது குறித்து, மத்திய வங்கியின் ஆளுநர் இந்திரஜித் குமாரசாமிக்குத் தாம் அனுப்பிய கடிதத்துக்கு எந்த விதமான பதிலும் கிடைக்கவில்லை என்று கொம்பனிகள், அலுவலகங்கள் சங்கத்தின் தலைவர் வசந்த சமரசிங்க தகவல் வெளியிட்டுள்ளார்.

மிகக் குறுகிய நாள்களில், இந்த விவகாரம் தீர்க்கப்பட வேண்டும் எனக் கோரித் தாம் மூன்று தடவைகள் அனுப்பிய கடிதங்களுக்கு பதில் அனுப்பப்படவில்லை என்று சங்கத் தலைவர் மிகுந்த வருத்தத்தைத் தெரிவித்திருக்கிறார்.

தமது கடிதங்களில், பணியாளர்களின் நம்பிக்கை நிதியக் கணக்குகளில் இருந்து அரசு தனக்கு எந்தளவு பணத்தைப் பயன்படுத்தி உள்ளது என்பதைத் தாம் கேட்டிருந்தார் என அவர் தகவல் வெளியிட்டு இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. ஆகப் பிந்தி அனுப்பிய வேண்டுதல் கடிதத்திற்கு இம் மாதம் பதினெட்டாம் திகதிக்கு முன்னர் பதில் தருமாறும் தாம் விநயமாக கேட்டிருக்கிறார் எனவும் சமரசிங்க தகவல் வெளியிட்டுள்ளார்.

தனியார்துறைப் பணியாளர்களுக்கு கிடைக்க வேண்டிய நிதி வழங்கப்படும் வரை தமது போராட்டம் நீடிக்கும் என்றும் வசந்த சமரசிங்க மேலும் தெரிவித்துள்ளார். (அ)

# இலங்கைக்கு ஜி.எஸ்.பி. வரிச்சலுகை அடுத்தவாரம் நிரந்தரமாகக் கிடைக்கிறது

## தகவல் கிடைத்துள்ளது என்று ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, ஜன.07

எமதுநாட்டின்கைத்தொழில் மற்றும் ஏற்றுமதித் துறைகளின் முக்கிய திருப்பு முனையாக அமையக்கூடிய ஜி.எஸ்.பி. சலுகை எதிர்வரும் வாரத்திலிருந்து நிரந்தரமாக இலங்கைக்குக் கிடைக்கவுள்ளது.

இவ்வாறு தகவல்கள் கிடைத்துள்ளன என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை கண்டி, கல்ஒலுவ, தொடங்வல பிரதேசத்தில் அமைக்கப்பட்ட பாலத்தை மக்கள் பாவனைக்குக் கையளிக்கும் நிகழ்வில் பங்குபற்றி உரையாற்றிய போதே ஜனாதிபதி இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாடு என்ற வகையில் முன்னோக்கி செல்வதற்குக் காணப்பட்ட அனைத்து தடைகளையும் நீக்கி, அனைத்து நாடுகளுடனும் நட்புறவை ஏற்படுத்திக்கொள்வதற்கு கடந்த இரு வருடங்களில் அரசால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளின் அனுகூலங்கள் தற்போது நாட்டுக்குக் கிடைக்க ஆரம்பித்துள்ளன.

அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வது போலவே அதனுடன் நாட்டுக்குக் கிடைத்துள்ள கடன் சுமை தொடர்பாகவும் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

பெரியளவான கடன் உதவிகளைப் பெற்று பெரிய அபிவிருத்திக் கருத்திட்டங்களை செயற்படுத்தி பிரபல்யமடைவதற்குத் தற்போதைய அரசாலும் முடியும். ஆனால் அதனூடாகப் பெரிய கடன் சுமையை நாட்டுக்கு உரித்தாக்கி நாட்டின் எதிர்காலத்தை இருளாக்குவதற்கு எனது அரசு ஒரு போதும் தயாராக இல்லை.

பெரியளவான கடன் சுமையால் உலகின் ஏனைய சில நாடுகள் எதிர்கொள்ளும் சிக்கல்களையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

அம்பாந்தோட்டைத் துறைமுகம் மற்றும் கைத்தொழில் பேட்டை தொடர்பாக ஒரு சிலரால் தவறான பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த நாட்டின் ஓர் அங்குல நிலத்தையேனும் உலகின் வேறு எந்தவொரு நாட்டுக்கும் தாரைவார்த்துக் கொடுப்பதற்கு அரசு தயாராக இல்லை.

கைத்தொழில் மற்றும் புதிய முதலீடுகள் நாட்டுக்கு அவசியமானபோதிலும் கூட இலங்கையின் அரசமைப்புக்கும் சட்டதிட்டங்களுக்கும் உட்பட்டே வெளிநாடுகளுக்குக் காணிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.



ஒரு சிலர் குறிப்பிடுவதைப் போல மக்களை அவர்களது வசிப்பிடங்களிலிருந்து வெளியேற்றுவதற்கோ அல்லது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வணக்கஸ்தலங்களை உடைத்தெறியும் முறையற்ற செயல்களுக்கோ அரசு ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை.

வெளிப்படைத் தன்மையான உடன்படிக்கைகளே வெளிநாடுகள், வர்த்தகர்கள், முதலீட்டாளர்கள் மற்றும் சர்வதேச நிறுவனங்களுடன் ஏற்படுத்திக் கொள்ளப்படும்.

நாட்டின் அபிவிருத்திக்காக தற்போதைய அரசு உண்மையான அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது.

தற்போதைய அரசைக் கவிழ்க்கப்போவதாக சிலர் அறிக்கைகளை வெளியிட்டனர். இருந்த போதும் எமது அரசைக் கவிழ்ப்பதற்கு யாராலும் முடியாது.

2020 ஆம் ஆண்டில் நடக்கும் தேர்தலில் வெற்றி பெற்று புதிய அரசை அமைத்தாலொழிய அதற்கு முன்னர் அரசைக் கவிழ்ப்பதற்கு யாருக்கும் எந்தவித வாய்ப்பும் இல்லை. -என்றார். (ஐ)


## அறநெறிப் பெருவிழா

யாழ்ப்பாணம், ஜன.07

காரை திரு திருமதி சண்முகம் மனோன்மணி ஞாபகார்த்த சங்கற்ப சபையும் காரைநகர் கிழவன் காடு கலாமன்றமும் இணைந்து நடத்தும் அறநெறி எழுச்சிப் பெருவிழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு காரைநகர் கிழவன் காடு கலாமன்றத்தின் மனோன்மணி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

அமைப்பாளர் செல்வ சண்முகரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட இந்து ஆலயங்களின் ஒன்றியத் தலைவர் வைத்தியக் கலாநிதி மு.கதிர்காமநாதன் பிரதம விருந்தினராகவும் திரு.திருமதி சண்முகம் மனோன்மணி ஞாபகார்த்த சற்சங்க சபையின் ஸ்தாபகர் சண்முகம் சிவஞானம் முதன்மை விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

வவுனியா வாழும் கலை அமைப்பின் தலைவர் சி.விவேகானந்தன், டென்மார்க் அபிராமி அம்மன் உபாசகி இலங்கை கிளைகளின் நிர்வாகி உதயகுமார் காஞ்சன மாலா தம்பதிகள், காரைநகர் கிழவன் காடு கலாமன்றத் தலைவர் ந.சோதிநாதன் ஞாபகார்த்த சங்கற்ப சபைத் தலைவர் மார்கண்டு சிவஞானம் ஆகியோர் விசேட விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர். (ஐ)



மாமனிதர் குமார் பொன்னம்பலம் மறைவு தினம் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தில் அவருடைய ஞாபகார்த்த உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் போட்டி ஆரம்பிக்கும் முன்னர் விளக்கேற்றி மௌன வணக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டது.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் உப தலைவர் வின்சன் டிப்போல் மற்றும் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகச் செயலாளர் ப.சுரேஸ் ஆகியோர் உருவப்படத்துக்கு மலர்மாலை அணிவித்தனர். பருத்தி நகரில் வர்த்தகர்கள் மற்றும் மூத்த உறுப்பினர்கள், விளையாட்டுக்கழக உறுப்பினர்கள் மற்றும் மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து விளக்கேற்றி இரு நிமிடம் மௌன வணக்கத்துடன் அஞ்சலி செலுத்தினர். (ஐ-30)

## மண்டைதீவு களப்புப் பகுதிகளில் கண்டல் காடுகள் வளர்க்கத் திட்டம்

மண்டைதீவு, ஜன.07

மண்டைதீவு களப்புப் பகுதிகள் மற்றும் ஓடைக் கடல் சூழ்ந்த சதுப்பு நிலங்களில் கண்டல் மரங்கள், சதுப்பு நிலத் தாவரங்களை நட்டு வளர்க்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மண்டைதீவு கடற்படையினரால் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்த நடுகைக்குரிய தாவரங்கள் நீர் நிரம்பிய பகுதியிலேயே பெருமளவில் நடுகை செய்யப்பட்டுள்ளன.

மூன்றடி நீளமான வைரமான தடிகள் இவற்றுக்குத் துணையாக நடப்பட்டுள்ளன.

இதேவேளை-

மண்டைதீவு தெற்குப் பகுதி இளைஞர்கள் வழியில் பிள்ளையார் கோவில் சுற்றாடலிலும், கடல் அணைக் கட்டுப் பகுதியிலும் பனம் விதைகளை நடுகை செய்யவுள்ளனர்.

இந்தச் சதுப்பு நிலத்தில் ஏற்கனவே சிறிய இலைகளைக் கொண்ட கண்ணாப் பற்றைகளும், தாழை மரங்களும், ஈச்சம் பற்றைகளும் யுத்த காலத்தில் அடியோடு வெட்டி அகற்றப்பட்டன. யுத்தம் முடிந்த பின் இவை அடர்ந்து வளர்ந்துள்ளன .இவை இல்லாத இடங்களில் புதிய மரங்கள் நடப்படுகின்றன. (ஐ-20)

## நாளை மின்தடை இடம்பெறும் பகுதிகள்

யாழ்ப்பாணம், ஜன.07

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை மின்சாரம் தடைப்படும் என்று அறிவிக்கப்படுகிறது.

அதன்படி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை தோப்பு, அச்சுவேலி ஆஸ்பத்திரி, அச்சுவேலி நகர் , பத்தமேனி, கதிரிப்பாய், இடைக்காடு, தம்பாலை, செல்வநாகபுரம், யாழ். ஆஸ்பத்திரி வீதியில் வேம்படிச் சந்தியில் இருந்து சத்திரச் சந்தி வரை, கந்தப்பசேகரம் வீதி, மகாத்மா காந்தி வீதி,னீஸ்வரன் வீதி, கஸ்தூரியார்வீதி, ஆஸ்பத்திரி வீதிச் சந்தியில் இருந்து வின்சர் சந்தி வரை, மின்சார நிலைய வீதி,பெரிய கடை வீதி, தலங்காவில், திருநெல்வேலிப் பிரதேசம், கந்தர்மடம் சந்தி, இலுப்பையடி, பருத்தித்துறை வீதி, கஸ்தூரியார் வீதியின் ஒரு பகுதி, விக்டோரியா வீதி, யாழ். 1ஆம், 2ஆம், 3ஆம் குறுக்குத் தெருக்கள், புகையிரத நிலையப் பிரதேசம், சுப்பிரமணியம் வீதி ஆகிய பகுதிகளிலும்-

கந்தரோடை, ஊரி, களபூமி, காரைநகர் இ.போ.ச பிரதேசம், தோப்புக்காடு, காரைநகர் கடற்படைமுகாம், காரைநகர் ஜெற்றி, யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விஞ்ஞான பீடம்,றக்கா வீதி, நாவலர் வீதி, யாழ். பல்கலைக்கழக ஆண்கள் விடுதி, நொதோண் வைத்தியசாலை, கிறின் கிறாஸ் வீதி, மொபிற்றல்,லிங்கம் கிறீம் ஹவுஸ், மக்கள் வங்கி ஆகிய பகுதிகளிலும்-

கரணவாய்,இலகாமம், நாவலர் மடம், நெல்லியடி,காடிகாமம் வீதி, சாமியன் அரசடி, தின்னாலை, தாமரைக்குளத்தடி, இந்திர அம்மன் கோயிலடி, வதிரி காளி கோயிலடி, தேவரையாளி, அல்வாய், வியாபாரி மூலை, இன்பர்சிட்டி, இலகடி, காந்தியூர், மந்திகை, கப்பூது, பருத்தித்துறை ரெலிக்கொம் ஆகிய இடங்களிலும்-

இறுப்பிட்டி, கழுதைப்பிட்டி, கேரதீவு ஆகிய இடங்களிலும்-

வவுனியா தெற்கு இலுப்பைக்குளம், வவுனியா நகரம், சூசைப்பிள்ளையார் குளம் ஆகிய இடங்களிலும் மின்தடை ஏற்படும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ஐ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, editor@kalaikkathir.lk
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## மாறான நிலைப்பாடு எதற்காக?

**பெரும் பரபரப்போடு எதிர்பார்க்கப்பட்ட அரசமைப்புச் சபையின் 9,10,11 ஆம் திகதிய அமர்வுகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.**

**பிறந்த புத்தாண்டில் நாடாளுமன்றத்தின் முதற் கூட்டமாக - நாடாளுமன்றம் அரசமைப்புச் சபையாகக் கூடுவதே - இடம் பெறும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், முதற்கூட்டமே பயனின்றித் தள்ளிப் போடும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.**

**பிறந்த புத்தாண்டில் நாடாளுமன்றத்தின் செயற்பாடு 'முதற் கோணல் முற்றிலும் கோணலாகி விடுமோ' என்ற அச்சத்தைத் தருவதாகத்தான் ஆரம்பமாகியிருக்கின்றது. அதுவே, நாடாளுமன்றச் செயற்பாடுகளில் அதீத நம்பிக்கை கொண்ட ஆர்வலர்களின் மனதில் அவநம்பிக்கையை ஏற்படுத்துவதாகவும் அமைந்துவிட்டது.**

**புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் அரசமைப்புச் சபையின் தெரிவுக்குழுவாக இயங்கும் 'அரசமைப்புக்கான வழிகாட்டல் குழுவில்', உத்தேச நகல் வரைவு தொடர்பான இடைக்கால அறிக்கை குறித்து இணக்கம் காணப்படாமையே இந்த மூன்று முழு நாள் விவாதம் கைவிடப்பட்ட சூழல் உருவாகப் பிரதான காரணம் என்று கூறப்படுகின்றது.**

**உத்தேச இடைக்கால அறிக்கை தொடர்பில் தங்களின் அவதானிப்புக்கள் குறித்து கவனம் செலுத்துவதற்கு மேலும் கால அவகாசம் தேவை என்று அந்த வழிகாட்டல் குழுவில் அங்கம்பெறும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் ஒருங்கு சேரக் குரல் கொடுத்தமையால், 9,10,11 ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த அரசமைப்புச் சபையின் கூட்டத்தைத் தள்ளிப் போடுவதைத் தவிர வேறு மார்க்கம் எதுவும் அந்த வழிகாட்டல் குழுவின் தலைவரும் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்கவுக்கு இல்லாமல் போய் விட்டது. அதனால் கூட்டம் ஒத்திவைக்கப்படுகின்றது.**

**கூட்டு எதிரணியில் இருக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் மட்டுமல்லர், நல்லாட்சி அரசில் அங்கம் வகிக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் எம்.பிக்களும், அமைச்சர்களும் கூட அதே நிலைப்பாட்டை எடுத்திருக்கின்றமை எல்லோருக்கும் அதிர்ச்சி தருவதாக அமைந்திருக்கின்றது.**

**விடுதலைப் புலிகள் அமைப்பின் சிதைவுக்குப் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மஹிந்த ராஜபக்ஷ அரசுடனும் அமைதிப் பேச்சுகள் நடத்தியிருந்தது. ஒரு தடவையல்ல, இரண்டு தடவைகள் அல்ல. பதினெட்டுச் சுற்றுப்பேச்சுகள் நடந்தன.**

**அந்தப் பேச்சுகளில் பங்குபற்றிய தமிழ்க் கூட்டமைப்பின் குழுவுக்கும் இரா. சம்பந்தனே தலைமை வகித்தார். சுமந்திரனே முக்கிய பங்காற்றினார்.**

**அப்போது தான் விடாப்பிடியாக இருந்த ஒரு விவகாரத்தில் கூட்டமைப்பு இப்போது விலகி நிற்பது ஏன் என்ற ஒரு நியாயமான கேள்வி, உயர்ந்து எழுந்து நிற்கிறது!**

**மஹிந்த அரசுடன் கூட்டமைப்பு நேரடிப் பேச்சு நடத்திய 2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான வழிவகைகளைக் காணுதல் என்ற பெயரில் ஒரு தெரிவுக்குழுக் கூட்டத் தொடரை மஹிந்த ராஜபக்ஷ அரசு முன்னெடுத்தது.**

**ஆனால், அந்தத் தெரிவுக் குழுவில் பங்குபற்ற மாட்டோம் - அதற்குத் தமது பிரதிநிதிகளை நியமிக்க மாட்டோம் - என்று அப்போது சம்பந்தன், சுமந்திரனும் கூட்டமைப்பினரும் அடம்பிடித்தனர்; ஒற்றைக் காலில் நின்றனர்.**

**"முதலில் மஹிந்த அரசுடன் நேரடிப் பேச்சு. இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அடிப்படை விடயங்களில் அரசுடன் முதலில் திட்டவட்டமான ஒரு கொள்கை நிலைப்பாட்டு இணக்கத்துக்கு வருதல். அந்த இணக்கத்தின் அடிப்படையில் தீர்வை உருவாக்கி, நடைமுறைப்படுத்துவதற்கான வழிகளை ஆராய்வதற்காகப் பின்னர் தெரிவுக் குழுவில் பங்குபற்றுதல்" - இதுதான் தங்களின் அசைக்க முடியாத நிலைப்பாடு என்று அப்போது பிடிவாதம் பிடித்தது கூட்டமைப்பு.**


**ஆனால், இந்த நல்லாட்சி அரசுடன் அமைதி முயற்சிகளை ஆரம்பித்த நாள் முதல், அந்தப் பழைய கோட்பாட்டை - கொள்கையை - கோட்டைவிட்டு முற்றாக மறந்துபோய் விட்டது கூட்டமைப்பு.**

**அரசுத் தலைமையுடன் முதலில் தீர்வுக்கான அடிப்படைகளை அடையாளம் காணும் திட்டவட்டமான பேச்சுகளை நடத்தி, தீர்க்கமான முடிவுகளை எட்டுவதை விடுத்து, இப்போது அரசமைப்புச் சபையின் இழுபாடுகளின் பின்னால் இழுபறிப்படுகின்றது அது.**

**மஹிந்த அரசுடன் பேச்சு விடயத்தில் பின்பற்றிய நிலைப்பாட்டையே நல்லாட்சி அரசுடனும் பின்பற்றுங்கள் என்பதைத் தானே ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் திரும்பத் திரும்ப வலியுறுத்தி வருகின்றார்.**

**அப்போது மஹிந்த அரசுடன் பேசும்போது கடைப்பிடித்த அதே கோட்பாட்டை இப்போதும் பின்பற்றியிருந்தால், இப்போது அரசமைப்புச் சபை காட்டும் இழுபறிகள் குறித்து பயப்படத் தேவையில்லை என்ற நிலைமை இருந்திருக்கும்.**

**அரசமைப்புச் சபையின் இழுபறிப்போக்கைப் பார்க்கும்போது சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறுபவை சரி போலவே தோன்றுகின்றனவே....! கூட்டமைப்புத் தலைமை என்ன தான்செய்யப் போகின்றது?**




# இலங்கையின் நீதித்துறை நம்பகத்தன்மை அற்றது

**அரசு நியமித்த செயலணியின் அறிக்கை எடுத்துக்காட்டுவதாக மனித உரிமை ஆர்வலர்கள் சுட்டிக்காட்டு**

கொழும்பு, ஜன.07

நல்லிணக்க பொறி முறை குறித்து அரசால் நியமிக்கப்பட்ட செயலணியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள், நாட்டின் நீதித்துறை நம்பகத்தன்மை அற்றது என்பதைத் தெளிவாக எடுத்துக்காட்டுவதாக சிவில் சமூக மற்றும் மனித உரிமை ஆர்வலர்கள் சுட் டிக்காட்டியுள்ளனர்.

பிரதமர் ரணிலின் நேரடி ஆலோசனையின் பேரில் நியமிக்கப்பட்ட குறித்த செயலணியின் அறிக்கை கடந்த செவ்வாயன்று ஜனாதிபதி செயலகத்தில் வெளியிடப்பட்டது.

அதில், சுவதேசநீதிபதிகளை உள்ளடக்கிய கலப்பு நீதிமன்றத்தின் தேவை, பாதிக்கப்பட்டோருக்கு நீதி மற்றும் இழப்பீடு என்பவற்றை வழங்குவ தற்கு முன்னெடுக்கப்பட வேண்டிய பல்வேறு விடயங்கள் பரிந்துரைக்கப்பட்டிருந்தன.

இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ளபோதே சிவில் சமூக மற்றும் மனித உரிமை ஆர்வலர்கள் இவ்வாறு குறிப்பிட்டுள்ளனர்.

அந்தச் செயலணியில் மூவினப் பிரதிநிதிகளும் உள்ளடக்கப்பட்டுள்ளனர் என்பதோடு, அதிலுள்ள பரிந்துரைகளைச் செயலணியின் மூவினப் பிரதிநிதிகளும் ஏற்றுக் கொண்டு தமது கருத்துக்களையும் முன்வைத்துள்ளனர். அந்த வகையில் அந்த அறிக்கை காத்திரமானது என்றும் அதிலுள்ள பரிந்துரைகளை அரசு உள்வாங்க வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

எனினும், அரசால் நியமிக்கப்பட்ட பல ஆணைக் குழுக்கள் மற்றும் செயலணிகளின் அறிக்கைகளும் இதுவும் ஒன்று என்று குறிப்பிட்டுள்ள அரசு, பரிந்துரைகளை ஆராய்ந்து முடியுமான விடயங்களை மாத்திரமே செயற்படுத்துவோம் என்று தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

# ஜனாதிபதியின் தீர்மானத்தால் வில்பத்தில் மீள்குடியேற்றத்துக்கு எவ்வித தடையில்லை

**வர்த்தக அமைச்சர் றிசாட் பதியுதீன் கூறுகிறார்**

கொழும்பு, ஜன.07

வில்பத்து வனவிலங்குகள் சரணாலயம் தொடர்பாக ஜனாதிபதி அண்மையில் மேற்கொண்ட தீர்மானம் போரில் பாதிக்கப்பட்ட மக்களை அங்கு குடியேற்றுவதில் எந்தத் தடையையும் ஏற்படுத் தாது என்று வர்த்தக மற்றும் கைத்தொழில் அமைச்சர் றிசாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு;

''வில்பத்து வன விலங்குகள் சரணாலயத்தை விரிவுபடுத்தி சரணாலயத்தை மீண்டும் வர்த்தமானியில் வெளியிடுமாறு ஜனாதிபதி அண்மையில் அதிகாரிகளுக்கு உத்தர விட்டிருந்தார்.

வில்பத்து வனப் பகுதியில் எவரையும் குடியமர்த்தவோ எதிர்காலத்தில் குடியேற்றவோ எண்ணவில்லை.

போர்க்காலத்தில் வில்பத்துக்கு அருகில் இருக்கும் பிரதேசத்தில் வாழ்ந்து, போரால் இடம் பெயர்ந்தவர்களை மீண்டும் அங்கு மீள் குடியேற்றும் போது சிலர் பொய்ப் பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

மக்கள் இடம்பெயர்ந்து சென்றிருந்ததால், அந்த இடங்கள் காடாக மாறியிருந்தன. மக்கள் முன்னர் வாழ்ந்த பகுதியிலேயே குடியேற்றப்படுகின்றனர்.

வில்பத்து சரணாலயம் தொடர்பில் தம்மீது குற்றம் சுமத்தினாலும் அரசை விட்டுச் செல்ல போவதில்லை.''- என்றார் அவர். (எ)

# கச்சதீவை மீண்டும் உரிமைகோரும் எதிர்பார்ப்பும் இந்தியாவுக்கு இல்லை

**யாழ்.வருகைதந்த இந்திய வெளிவிவகாரச் செயலர் தெரிவிப்பு**

யாழ்ப்பாணம், ஜன.C7

கச்சதீவை மீண்டும் உரிமை கோரும் எந்த எதிர்பார்ப்பும் இந்தியாவுக்கு இல்லை என்று இந்திய வெளி விவகார செயலாளர் சஞ்சய் பாண்டே தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்தபோது ஊடகங்களிடம் அவர் இதனை கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

''இந்திய மீனவர்கள் இலங்கையின் வட கடல் பகுதிக்குள் வருவதைத் தடுக்க துரித நடவடிக்கை எடுக்க இந்தியா இணங்கியுள்ளது.

''இதனடிப்படையில், இந்திய மீனவர்களுக்கு வசதிகளை வழங்கும் வேலைத்திட்டம் எதிர் காலத்தில் செயற்படுத்தப் படும் என்பதால், இந்திய மீனவர்கள் பொறுப்புடன் செயற்படுவார்கள்.''-என்றார். (எ)

## நாளை

08.01.2017
ஞாயிற்றுக்கிழமை
நட்சத்திரம்: பரணி மு.ப. 10.30 வரை
திதி: ஏகாதசி பி.இ. 2.24 வரை
சுபநேரம் : 9.32 - 11.02
இராகுகாலம் : 5.02 - 6.32

# பொறுப்பற்ற கருத்துகளால் அரசமைப்பு குறித்துச் சந்தேகம்

## இது தமிழ்த் தலைவர்களுக்கு வேதனை தருகின்றது என்கிறார் வேலாயுதம்

கொழும்பு, ஜன.07

''இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு புதிய அரசமைப்பு நிறைவேறுமா என்ற சந்தேகம் தற்போது வலுப்பெறத் தொடங்கியுள்ளது. இது தொடர்பாக அரசியல் வட்டாரத்தில் பொறுப்பற்ற கருத்துக்கள் பரப்புரை செய்யப்படுகின்றன.


''இது தமிழர்களுடைய நிரந்தரத் தீர்வுக்காகவும் நிம்மதியான வாழ்வுக்காகவும் ஒரே எதிர்பார்ப்புடன் தம் கோரிக்கைகளை முன்வைத்துச் செயற்படும் தமிழ்த் தலைவர்களுக்கு மிகவும் வேதனை தரும் விடயங்களாகவும் விரக்தி தரும் நடவடிக்கை களாகவும் அமைந்துள்ளன.''

- இவ்வாறு ரெலோ இயக்கத்தின் கொள்கைப் பரப்புச் செயலாளர் கணேஷ்வரன் வேலாயுதம் தெரிவித்துள்ளார்.

புதிய அரசமைப்பு நகல் விவகாரம் தொடர்பாகக் கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நிலைவரங்களின் படி புதிய அரசமைப்பு



விவகாரம் என்பவற்றை நசுக்கும் கைங்கரியங்களும் பேச்சுக்களும் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

கண்டியில் மல்வத்த, அஸ்கிரிய பீடங்களின் மாநாயக்கர் தேரர்களை ஜனாதிபதி சந்தித்த போது அங்கு தெரிவித்த உறுதி மொழிகள், அதனைத் தொடர்ந்து பொது மக்கள் கருத்தறியும் குழு அறிக்கை தொடர்பில் இடம்பெற்ற சில சம்பவங்கள் என்பவற்றை அடுத்து இந்தப் புதிய அரசமைப்பு விவகாரம் சேதனைக்குஉள்ளாகியுள்ளது.

அத்துடன், அதில் வைத்துள்ள நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் விழலுக்கு இறைத்த நீராகவே அமைந்துள்ளன.

கூட்டு எதிரணியினரின் பெரிய முட்டுக்கட்டை ஒருபுறம் இருந்த போதிலும் மறுபுறம் உறுதியளித்த வகையில் நல்லாட்சியாளர்களாலும் இடை நடுவைத் தாண்டி முன்னெடுத்துச் செல்ல முடியாத நிலையில் கடும் போக்குச் சக்திகளின் எதிர்ப்பு அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.

தமிழ் மக்களின் நீண்டகாலப் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுத்து நல்லாட்சிக்கு உரிய பெயரைப் பெற்றுக் கொள்ள வேண்டிய அரசியல் தலைமைகள் மாறாக இனவாதத்துக்கு விலைபோனவர்களாக நல்லாட்சியாளர்களும் காணப்படுகின்றனர் என்று நாம் நோக்கவேண்டியுள்ளது.

சிறுபான்மையின மக்களுக்கு நிரந்தரத் தீர்வுக்கான அரசமைப்பு உருவாக்கத்தை விரும்பாதவர்களின் நிகழ்ச்சி நிரலுக்கு அமையப் பாதகமான செயற்பாடுகள் இந்த ஓரிரு நாள்களில் இடம்பெற்றுள்ளன.

இனவாதிகளின் வாய்க்குள் பொரி போடுவதிலும் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் வகையிலும் புதிய அரசமைப்பில் பிரிவினைக்கு இடம் இல்லை, சமஷ்டி முறைக்கு அடியொட்டிதாக இருக்க மாட்டாது, பௌத்த மதத்துக்கு வழங்கப்பட்ட முன்னுரிமையில் மாற்றம் இல்லை, பௌத்த சமயத் தலைவர்களின் ஆசீர்வாதம் இன்றி புதிய அரசமைப்பு வரையப்படாது என்று பலகோசங்கள் எழுந்துள்ளமை நல்லாட்சிக்கு ஆதரவு வழங்கிய மக்களுக்குப் பெரும் விரக்தியை எற்படுத்தியுள்ளன.

ஜனாதிபதி மைத்திரி பாலசிறிசேனமற்றும்பிரதமர் ரணில் விக்கிரமங்க ஆரம்பத்தில்உறுதியளித்தமை போன்று அரசமைப்பு விவகாரம் தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டும்.

தமிழ் மக்களுடைய அடிப்படைப் பிரச்சினைகளை நன்கு அறிந்த அரசியல் தலைவர்கள், உயரிய பண்புடையவர்கள் என்ற வகையில் புதிய அரசமைப்பு விடயமாகத் தாம் எடுத்துள்ள நிலைப்பாடுகளை மீள் பரிசீலனை செய்து இனவாதத்துக்கு விலைபோகாது தமிழ் மக்களுக்கு நிரந்தரத் தீர்வு இதய சுத்தியுடன் செயற்பட வேண்டும்.- என்றார். (ஐ)

# இலக்கிய விழா இன்று

சுன்னாகம், ஜன.07

தெல்லிப்பழை கலை இலக்கியக் கழகத்தின் இலக்கிய விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இணுவில் மத்திய கல்லூரி மண்டபத்தில் கலை இலக்கியக் காப்பாளர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் கோகிலா மகேந்திரனின் 'கதைகளும் விமர்சனமும் வரிக்குயில்' நூல் வெளியீடும் இடம்பெறும்.

பிரதம விருந்தினர்களாக வடமாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராஜா தம்பதியினரும் விசேட விருந்தினர்களாக வடமாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் தம்பதியினரும் சிறப்பு விருந்தினர்களாக பேராசிரியர் அ.சன்முகதாஸ் தம்பதியினரும் கலந்து கொள்வர். (ஐ-54)



யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் யாழ். கனகரத்தினம் மகா வித்தியாலய அதிபரின் வேண்டுகோளுக்கு இணங்க பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் பாடசாலைகளுக்கு மேலைத்தேய வாத்தியக் கருவிகளை வழங்கியுள்ளார். (ஐ-21)

# தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை அபிவிருத்திக்கு உதவுமாறு கோரிக்கை!

தெல்லிப்பழை ஜன.7

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் அபிவிருத்திக்கு உதவுமாறு வைத்தியசாலை அத்தியட்சகர் யோ.திவாகர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை வலி. வடக்கின் மீள்குடியேற்றப் பிரதேசத்தில் அமைந்து அபிவிருத்தி அடைந்துவரும் வைத்தியசாலையாகும்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அடுத்த படியாக - வடமாகாணத்துக்கு உட்பட்ட வைத்தியசாலைகளில் யாழ்.மாவட்டத்தில் முதல் நிலையில் - உள்ளது தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை.

யாழ்போதனா வைத்தியசாலையில் இல்லாத அதிசிறப்புப் பிரிவுகளான புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு உளநலச் சிகிச்சைப் பிரிவு ஆகிய இரு விசேட சிகிச்சைப் பிரிவுகள் இங்கு உள்ளன.

யாழ்.பல்கலைக்களக மருத்துவபீட மாணவர்களின் புற்றுநோய், உளவியல் கற்கைக்குப் போதனா வைத்தியசாலையாகவும் இது விளங்குகின்றது.

தற்போது மத்திய அரசால் ஆயிரம் மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவுகளுக்குப் பல புதிய கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றனன.

அதேநேரம், ஏனைய சகல பிரிவுகளையும் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவின் தரத்துக்கு அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகளை வைத்தியசாலை நிர் வாகமும் வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கமும் பல்வேறு உதவிகளைப் பெற்று மேற்கொண்டு வருகின்றனர்.

அந்தவகையில், வெளிமாவட்டங்களிலிருந்து வருகைதரும் புற்றுநோயாளர்களின் உறவினர்கள் தங்குவதற்கு வைத்தியசாலைக்கு அருகில் விடுதி ஒன்றை அமைத்துத் தருவதற்கு ஒரு நல்லுள்ளம் படைத்த



அன்பர் முன்வந்துள்ளார்.

ஆனால், வைத்தியசாலை வளாகத்தில் அந்த விடுதியை அமைப்பதற்கு இடம் பற்றாக்குறையாக உள்ளது.

ஆகவே, தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு அருகில் காணி உள்ளவர்கள் வைத்தியசாலையினதும் நோயாளர்களினதும் நலன் கருதி நன்கொடையாகவோ அல்லது விலையாகவோ தந்துதவுமாறும் வேண்டப்படுகின்றனர்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட விடுதிகளைப் புனரமைப்புச் செய்தல், விடுதிகளுக்கு வர்ணம் பூசுதல் எனப் பல்வேறு வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளமையால் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், பொது நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் ஆகிய தரப்புக்களிடமிருந்து உதவிகளை எதிர்பார்க்கின்றோம்.

அவ்வாறு உதவிகளை வழங்க முன்வருவோர் வைத்தியசாலை நிர்வாகத்துடனோ அல்லது நோயாளர் நலன்புரிச்சங்கத்துடனோ தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளலாம்.- என்றார். (ஐ)

# மண்டைதீவில் தென்னைகளை நாசமாக்கும் கட்டாக்காலிகள்

மண்டைதீவு, ஜன.07

மண்டைதீவு உதய சூரியன் சனசமூகச் சூழலில் புதியதாக நடப்பட்டுள்ள தென்னம்பிள்ளைகளைக் கட்டாக்காலிகள் நாசம் பண்ணி வருகின்றன என்று விசனம் தெரிவிக்கப்படுகிறது.

பனை மட்டைகளால் அடைக்கப்பட்ட வேலிகளை வீழ்த்தி தென்னம்பிள்ளைகளைக் கட்டாக்காலிகள் அழித்து வருகின்றன.

இதேவேளை அப்பகுதிகளில் நெற்செய்கை மற்றும் புகையிலைச் செய்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த நிலையில், கட்டாக்காலிகளைக் கட்டுப்படுத்தாது விட்டால் இவற்றையும் அவை அழித்து விடும் என்று விவசாயிகள் விசனம் தெரிவித்துள்ளார். (ஐ-20)

## மாலைதீவு கடற்படையால் மீட்கப்பட்ட 2 இலங்கை மீனவரையும் கூட்டிவர முயற்சி

கொழும்பு,ஜன,07

மாலைதீவுக் கடற்படையால் பாதுகாப்பாக படகுடன் மீட்கப்பட்ட 2 இலங்கை மீனவர்களையும் இலங்கைக்கு அழைத்து வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்ட ஆழ்கடல் இயந்திரப் படகு மீன்பிடி சங்கத் தலைவர் எம்.நசீர், சங்கப் பிரதிநிதிகள் மற்றும் காணாமல் போன இயந்திரப் படகு உரிமையாளர், காணாமற் போனவர்களின் உறவினர்கள் ஆகியோர் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் மற்றும் பிரதி அமைச்சர் எச்.எம்.எம். ஹரீஸை நேற்று முன்தினம் வியாழக்கிழமை கொழும்பில் சந்தித்துக் கலந்துரையாடினர். இதன்போதே இந்த நடவடிக்கை எடுக்கத் தீர்மானிக்கப்பட்டதாக அறிய வந்துள்ளது.

கடந்த டிசெம்பர் மாதம் 24 ஆம் திகதி கல்முனையைச் சேர்ந்த 6 மீனவர்களுடன் மீன்பிடித் தொழிலுக்காக ஒலுவில் துறைமுகத்திலிருந்து கடலுக்குச் சென்ற நிலையில் 2 இயந்திரப் படகுகள் காணாமல் போயிருந்தன. அவற்றில் ஒன்று 2 மீனவர்களுடன் மாலைதீவுக் கடற்படையினரால் பாதுகாப்பாக மீட்கப்பட்டதுடன், அவ்விரு மீனவர்களும் மாலைதீவுத் துறைமுகத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்றும் தகவல் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, மற்றைய படகுடன் காணாமற் போன ஏனைய 4 மீனவர்கள் தத்தளித்துக் கொண்டிருக்கும் இடம்பற்றிய தகவல் கிடைக் கப்பெற்றுள்ளது என சில செய்திகள் வெளிவந்துள்ளன. (ச)

## பேரவை மக்கள் நலன் கொண்டமைந்தமையால் கூட்டமைப்பில் இருந்து ஆதரவு வழங்குகிறோம்

### இப்படிக் கூறுகிறார் மாகாணசபை உறுப்பினர் துரைரெட்ணம்

மட்டக்களப்பு,ஜன07

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் நாம் உறுப்பினராக இருந்தாலும், தமிழ் மக்கள் உரிமை தொடர்பில் அதிக சரத்துக்களை உள்ளடக்கி தமிழ் மக்கள் பேரவை உருவாக்கப்பட்டிருப்பதால் கூட்டமைப்பில் இருந்து அதற்கு ஆதரவு வழங்குகிறோம். மக்கள் நலன் கொண்ட அந்த அமைப்பை எதிர்ப்பது தமிழ் மக்களுக்கு நாம் செய்யும் துரோகமாகும்.

-இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் இரா.துரைரெட்ணம் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை மட்டக்களப்பு கூட்டுறவு நிலையத்தில் தமிழ் மக்கள் பேரவையின் ஊடகவியலாளர் சந்திப்பு நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தமிழ் மக்கள் பேரவை வடக்கு, கிழக்கில் வாழும் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக பொதுவான வேலைத்திட்டங்கள் பலவற்றை மேற்கொண்டு வருகிறது. கூட்டமைப்பு என்பது பல கட்சிகள் இணைந்த ஒரு தலைமையாகும். அந்தக் கட்சி தமிழ் மக்களின் நலன்கள் தொடர்பாகப் பல செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. செயற்பாடுகளை அது முன்னெடுக்கின்றது என்பதற்காகப் பேரவை முன்னெடுக்கக்கூடாது என்பது சட்டமல்ல. இரண்டுமே முன்னெடுத்தால் அவற்றிக்கு ஆதரவு வழங்கவேண்டிய பொறுப்பு எமக்கு இருக்கின்றது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கும் தமிழ் மக்கள் பேரவைக்கும் இடையில் கொள்கை ரீதியான முரண்பாடுகள் இல்லை. தமிழ் மக்கள் பேரவை என்பது ஒரு ஸ்தாபனம். தமிழ் மக்களின் உரிமை தொடர்பில் தலைமை தாங்கும் ஓர் அமைப்பு. இரண்டு அமைப்புகளும் ஒரே கொள்கையுடன் இருப்பதன் காரணமாக முரண்படவேண்டிய அவசியம் இல்லை. ஆனால், இதனைப் பார்க்கின்ற பார்வைகளிலும் கையாளும் விதங்களிலும் முரண்பாடுகள் உள்ளன. இருதரப்பினரும் அவற்றைத் திருத்திக்கொள்ள வேண்டும்.

நாங்கள் மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை வெளிக்கொண்டு வருவதற்காக வரும் 21 ஆம் திகதி 'எழுக தமிழ்' சம்பந்தப்பட்ட சகல விடயங்களிலும் ஒன்றிணைந்து செயற்படுவதற்கு தீர்மானித்திருக்கின்றோம். அதன் அடிப்படையில் அறிக்கையில் சொல்லப்பட்ட விடயங்களுக்கு அப்பால் மட்டக்களப்பு மாவட்டத்தில் பல தூப்பட்ட பிரச்சினைகள் இருக்கின்றன.

இராணுவ முகாம்கள் அகற்றப்படவில்லை, பட்டதாரிகளுக்கான தொழில் வாய்ப்புகள் மற்றும் மேய்ச்சல் தரைக் காணிகள் விடுவிக்கப்படவில்லை, கைதிகளின் விடுதலை, தொடர்ச்சியாக போராளிகளுக்கு நெருக்கடி கொடுத்தல் ஆகிய பிரச்சினைகள் இன்னும் மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து வருகின்றன. அந்தப் பிரச்சினைகளை சர்வதேசத்துக்கு வெளிக்கொண்டு வரவேண்டிய பொறுப்பு தமிழ் மக்களைத் தலைமை தாங்குகின்ற அரசியற் கட்சிகளுக்கு இருக்கிறது. -என்றார். (ச)

## நாவலடியில் பிள்ளையார் விக்கிரகம் திருட்டு



வாழைச்சேனை நாவலடிப் பகுதியிலுள்ள பிள்ளையார் கோவிலின் மூலஸ்தானத்திலிருந்த விக்கிரகம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை திருட்டுப் போயுள்ளது.

சம்பவ தினத்தன்று முற்பகல் பூஜைக்கு சென்ற பூசகர், மூலஸ்தானத்தில் விக்கிரகம் இல்லாததைக் கண்ணுற்று, ஆலயநிர்வாகத்துக்குத் தெரியப்படுத்தினார்.

இதனை அடுத்து இந்த விடயம் தொடர்பில் வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. இந்த திருட்டுச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை, சம்பவ இடத்துக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன் நேரில் சென்று பார்வையிட்டுள்ளார். (ச)

## நிரந்தர வைத்தியர் இன்மை; சிரமத்தில் மண்டூர் மக்கள்

மண்டூர்,ஜன.07

போரதீவுப்பற்று பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மண்டூர் வைத்தியசாலை கடந்த 20 வருடங்களுக்கு முன் நிர்மாணிக்கப்பட்ட போதிலும், கடந்த அரசின் திட்டமிடப்படாத அபிவிருத்தி செயற்பாட்டால் போதிய பராமரிப்பு வசதியின்றி உள்ளது. குறிப்பாக இந்த வைத்தியசாலையில் நிரந்தர வைத்தியர் இல்லை. இதனால் இங்குள்ள மக்கள் பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இங்குள்ள வறிய மக்கள் விவசாயம், கால்நடை மற்றும் மீன்பிடி கூலித்தொழில் ஆகியவற்றை வாழ்வாதாரத் தொழிலாகக் கொண்டுள்ளனர். இவர்களுக்கான மருத்துவத் தேவையை நிறைவேற்றும் ஒரேயொரு வைத்தியசாலை இதுவேயாகும். நோயாளர் விடுதி, மகப்பேற்று விடுதி மற்றும் வெளிநோயாளர் பிரிவு, மருந்தகம், வைத்தியர் விடுதி, அம்புலன்ஸ் வசதி போன்றவற்றை இந்த வைத்திய சாலை கொண்டுள்ள போதிலும் பிற்பகல் வேளைகளிலிருந்து மறுநாள் வைத்தியர் கடமைக்கு வரும்வரை இங்குள்ள மக்களின் அவசர மருத்துவ சேவை கேள்விக்குறியாக உள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

சின்னவத்தை, மருங்கையடிப்பூவல் மற்றும் பாலமுனை, தம்பலவத்தை மண்டூர் ஆகிய பல கிராமங்களிலுள்ள ஆயிரத்துக்கும் இற்கு மேற் பட்ட குடும்பங்களுக்கு இந்த வைத்தியசாலையின் சேவை முக்கியமான ஒன்றாகும். இது காடு சார்ந்த பகுதி என்பதால் காட்டு யானை தாக்கம், விச ஜந்துக்களின் தாக்கம் மற்றும் திடீர் விபத்துக்கள் போன்ற சந்தர்ப்பங்களில் இந்த வைத்தியசாலையில் நிரந்தர வைத்தியர் இன்மையால் நோயாளிகள் தூர இடங்களிலுள்ள வைத்தியசாலைகளுக்குச் செல்ல வேண்டி உள்ளது. இதனால் உயிரிழப்புச் சம்பவங்கள் பல ஏற்பட்டுள்ளன என மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

தற்போது முதல் நியமனம் பெறும் புதிய வைத்தியர்கள் குறுகிய காலம் பணியாற்றிவிட்டு இடமாற்றம் பெற்றுச் செல்கின்றனர். இது தொடர்பில் முதலமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்ட போதிலும் இதுவரை நிரந்தரத் தீர்வு எதுவும் கிடைக்கவில்லை.

அடைமழை காலத்தில் ஏற்படும் வெள்ள நீரோட்டத்தால் மண்டூர் பகுதியில் போக்குவரத்துக்கள் துண்டிக்கப்படுகின்றன. எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக இந்தப் பிரச்சினைக்குத் நிரந்தர தீர்வைப் பெற்றுத் தர வேண்டும் என்று இப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ச)

## முறையற்ற இடமாற்றம் அதிபர்கள் பெரும் பாதிப்பு!

கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தில் முறையான அதிபர் இடமாற்றக் கொள்கை நடைமுறைப் படுத்தப்படாமையால், சில அதிபர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று சில பொதுநல அமைப்புகள், மாகாண ஆளுநர் ஒஸ்டின் பெர்னாண்டோவின் கவனத்துக்குச் கொண்டுவந்துள்ளன.

சில அதிபர்கள் அடிக்கடி இடமாற்றப்படும் அதேவேளை, சிலர் மிக நீண்டகாலமாக தங்களுக்கு வசதியான பாடசாலைகளில் கடமை புரிய அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று இந்த அமைப்புகள் மேலும் தெரிவித்துள்ளன.

கிண்ணியாக் கல்வி வலயத்தில் ஓர் அதிபர் ஒரே பாடசாலையில் தொடர்ந்து 22 வருடங்கள் கடமை புரிந்து வருகின்ற போதிலும், கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் இந்த விடயத்தைக் கண்டுகொள்ளவில்லை என்று குற்றஞ்சாட்டியுள்ளனர்.

எனவே, முறையான அதிபர் இடமாற்றக் கொள்கை கிழக்கு மாகாணத்தில் அமுல்படுத்தப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும் என்று ஆளுநரிடம் மேற்படி அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன. (ச)




கந்தளாய் குளத்து நீரை விவசாயத்துக்கு வழங்க வேண்டும் என வலியுறுத்தி கந்தளாய் பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

கந்தளாய் பிரதேச செயலகத்துக்கு முன்பாக இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர். பருவமழை ஒழுங்கின்மையால் தற்போது விவசாயச் செய்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் குளத்து நீரை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். (ச)

## கதிரவெளி பொது நூலகத்துக்கு தேசியவிருது

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு தேசிய ரீதியாக நூலகங்களுக்கிடையே நடத்தப்பட்ட போட்டியில், வாகரைப் பிரதேசபைக்குட்பட்ட கதிரவெளி பொது நூலகம் கடந்த ஆண்டு அகில இலங்கை ரீதியில் 3 ஆம் இடத்தை பெற்றுக் கொண்டது.

வருடா வருடம் தேசிய நூலக ஆவணாக்கல்கள் சபை நூலகங்களுக்கிடையேயான போட்டி நிகழ்சிகளை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கலப்பு விசாரணைக்கு பரிந்துரை செய்தது ஏன்?

## நல்லிணக்கப் பொறிமுறைக்கான கலந்தாய்வு செயலணி விளக்கம்

கொழும்பு, ஜன.07

பாதிக்கப்பட்ட மக்கள் உள்நாட்டு விசாரணை மீது நம்பிக்கை கொள்ளவில்லை என்பதாலும், போர்க்குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரணைகளை முன்னெடுப்பதற்கான நிபுணத்துவம் உள்நாட்டில் இல்லை என்பதாலுமே, கலப்பு நீதிமன்ற விசாரணைக்குப் பரிந்துரைத்துள்ளோம் என்று நல்லிணக்கப் பொறிமுறைக்கான கலந்தாய்வு செயலணி தெரிவித்துள்ளது.




மனோரி முத்தெட்டுவேகம தலைமையிலான 11 பேர் கொண்ட நல்லிணக்கப் பொறிமுறைக்கான கலந்தாய்வு செயலணியின் அறிக்கை அரசாங்கத்திடம் கடந்த 3ஆம் திகதி கையளிக்கப்பட்டது.

இந்நிலையில், இது தொடர்பாக விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்றது.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில், செயலணியின் தலைவர் மனோரி முத்தெட்டுவேகம, செயலர் கலாநிதி பாக்கிய சோதி சரவணமுத்து, பேராசிரியர் சித்திரலேகா மௌன குரு, கலாநிதி கமீலா சமரசிங்க, கலாநிதி பர்ஸானா ஹனீபா, மீராக் ரஹீம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே செயலணியின் உறுப்பினர்கள் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பாதிக்கப்பட்ட மக்கள் உள்நாட்டு விசாரணை மீது நம்பிக்கை கொள்ளாமையாலும், குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரணைகளை முன்னெடுப்பதற்கான நிபுணத்துவம் உள்நாட்டில் இல்லை என்பதாலுமே, கலப்பு நீதிமன்ற விசாரணைக்கு பரிந்துரைத்துள்ளோம்.

வடக்கு, கிழக்கில் போரினால் பாதிக்கப்பட்டவர்கள் மாத்திரமன்றி, தெற்கில் பல்வேறு வன்முறைகளால் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் கூட, தடயவியல் விசாரணை போன்றவற்றில் சர்வதேச நிபுணர்கள் அல்லது விசாரணையாளர்கள் இடம்பெறுவதை விரும்புகின்றனர்.- என்று செயலணி உறுப்பினர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

# வெளிநாட்டு நீதிபதிகள் தேவையில்லை!

## *நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ கூறுகிறார்*

கொழும்பு, ஜன.07

எமது பிரச்சினைகளுக்கு தீர்வு காண வெளிநாட்டு நீதிபதிகள் தேவையில்லை என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நல்லிணக்கப் பொறிமுறைக்கான செயலணியினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை தொடர்பில் கருத்து வெளியிடும்போதே நீதி அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்த நாட்டின் பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ள வெளிநாட்டு நீதிபதிகளின் ஒத்துழைப்பு அவசியமில்லை.



அவ்வாறு வரும் வெளிநாட்டு நீதிபதிகளை ஏற்றுக் கொள்ளப் போவதுமில்லை.

இந்தச் நல்லிணக்க செயலணியின் அறிக்கை இதுவரையில் ஆராயப்படவில்லை.


எவ்வாறாயினும், சர்வதேச நீதிபதிகளை பங்கேற்கச் செய்வதில்லை என்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடாக அமைந்துள்ளது. எமது அரசமைப்பில் அதற்கான சந்தர்ப்பமும் கிடையாது.

எமது நாட்டின் நீதிமன்றை இழிவுபடுத்தவோ, குறைத்து மதிப்பிடவோ முடியாது. உலகின் எந்தவொரு நாட்டைச் சேர்ந்த நீதிபதிகளுக்கும் தரம் குறைந்து போகாத சிறந்த நீதிபதிகள் இலங்கையில் இருக்கின்றார்கள்.

எனவே, எமது நாட்டு பிரச்சினைகளுக்கு தீர்வு காண வெளிநாட்டு நீதிபதிகளின் ஒத்துழைப்பு அவசியமில்லை. அதற்கு நாம் இடமளிக்கப் போவதும் இல்லலை.-என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# சீனாவுடனான உடன்பாடுகளின் பிரதிகள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்!

## *பிரதமர் ரணில் உறுதி*



கொழும்பு, ஜன.07

அம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் கைத்தொழில் வலயம் தொடர்பாக சீனாவுடன் செய்து கொள்ளவுள்ள உடன்பாடுகளின் பிரதிகள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஹொரணவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றும்போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாடாளுமன்றத்தில் விரைவில் அறிக்கையை வெளியிட்ட பின்னர், அம்பாந்தோட்டை தொடர்பான அனைத்து உடன்பாடுகளின் பிரதிகளையும் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் மலிக் சமரவிக்கிரம சமர்ப்பிப்பார்.

அம்பாந்தோட்டை கைத்தொழில் வலயத்துக்கு தனியார் காணிகள் சுவீகரிக்கப்படாது. அரச காணிகள் மாத்திரம் ஒதுக்கீடு செய்யப்படும்.

வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்காகவே அரச காணிகளை தொழில்களைத் தொடங்குவதற்காக வழங்குகிறோம்.

இந்தியாவிலும் தாய்லாந்திலும் உள்ளது போல், கைத்தொழில் வலயங்களுக்கான காணிகளை இனம்காண்பதற்கும், அவற்றை முகாமைத்துவம் செய்வதற்கும் அதிகார சபை ஒன்று உருவாக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

# அபிவிருத்தி வலயத்துக்காக தனியாரின் 5 வீத காணிகூட சுவீரிகப்படவில்லை!

## *சர்வதேச வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்கிரம தெரிவிப்பு*

கொழும்பு, ஜன.07

ருஹுணு அபிவிருத்தி வலயத்துக்காக தனியாரின் 5 வீத காணிகள்கூட சுவீரிகப்படவில்லை என்று மூலோபாய அபிவிருத்தி மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்கிரம தெரிவித்துள்ளார்.

மேலும், ஜனாதிபதி தலைமையில் ருஹுணு அபிவிருத்தி வலயம் இன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படும் என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

கொழும்பில் உள்ள நிதி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின்போதே அமைச்சர் மலிக் சமரவிக்கிரம இந்த விடயங்களை தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-



ருஹுணு அபிவிருத்தி வலய ஒப்பந்தம் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள உபகுழு துறைமுக அதிகார சபையின் அதிகாரிகளுடன் தொடர்ந்தும் கலந்துரையாடலில் ஈடுபட்டு வருகிறது.

இதனால், ஒப்பந்தத்தை பூர்த்தி செய்வதற்கு 10 நாட்களாவது தேவைப்படும்.

தேவை ஏற்படின் உரிமையாளரின் இணக்கத்துடன் முறையாக நஷ்டஈடு வழங்கியே காணியை பெற்றுக்கொள்வோம்.

சீன நிறுவனத்துக்கு காணி விற்கப்படுவதாக தெரிவிக்கப்படும் கூற்றில் எவ்வித உண்மையும் இல்லை. அம்பாந்தோட்டை துறைமுகத்தினால் இலங்கைக்கு 1.3 பில்லியன் அமெரிக்க டொலர் நட்டம் ஏற்பட்டுள்ளது.

கடந்த அரசாங்கம் எவ்வித திட்டமும் இன்றி இதனை முன்னெடுத்துள்ளது. இந்த கடனைத் திருப்பிச் செலுத்துவதற்காகத்தான் தற்போதைய அரசாங்கம் பொதுமக்களிடம் 'வற்' வரியினை அறவிட நேர்ந்துள்ளது.- என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# அரசாங்கத்தை கவிழ்க்கவும் தயார்!

## *ஜே.வி.பி. கூறுகிறது*

அம்பாந்தோட்டை, ஜன.07

அரசாங்கத்தை கவிழ்க்கவும் நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் குழு உறுப்பினர் கே.டி. லால்காந்த தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீன நிறுவனத்துக்கு வழங்குவதற்கும், அந்த பிரதேசங்களில் உள்ள காணிகள் சுவீகரிக்கப்படுவதற்கும் எதிர்ப்புத் தெரிவித்து மக்கள் விடுதலை முன்னணி ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தது.

நேற்று முன்தினம அம்பலந்தோட்டைநகரில் இடம்பெற்ற இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின்போதே கே.டி. லால்காந்த மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திஸாநாக்க,

காணி மற்றும் சொத்துக்களை வெளிநாட்டவருக்கு விற்கும் யோசனையை அரசாங்கம் அண்மைக்காலத்தில் மேற்கொள்ளவில்லை. அதனை நீண்டகால கொள்கையாகவே இந்த அரசு கொண்டிருக்கிறது.- என்று தெரிவித்துள்ளார்.

# பிரம்படி கிராமத்து மக்கள் வாழ்வாதாரம் இன்றி அவலம்

முல்லைத்தீவு, ஜன.07

மீள்குடியமர்ந்துள்ள பிரம்படிக் கிராமத்து மக்கள் வாழ்வாதாரம் இன்றிப் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

முல்லைத்தீவு, கேப்பாபுலவில் விவசாயத்தை அடிப்படையாக கொண்ட பிரம்படி கிராமத்தில் 2016 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் மீள்குடியேற்றம் செய்யப்பட்டபோதும் இதுவரை எந்தவோர் அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்கப்படவில்லை என்று கிராம மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு, கரைதுறைபற்று பிரதேச செயலத்துக்கு உட்பட்ட கேப்பாபுலவு - பிரம்படி கிராமத்தில் வாழ்ந்துவந்த மக்கள், 2008 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்தனர்.

பின்னர் 2012 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் மாதிரிக் கிராமத்தில் குடியேற்றப்பட்ட இந்த மக்கள் தொடர்ச்சியாகப் போராட்டங்களை முன்னெடுத்த நிலையில் 2016 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் மீண்டும் மீள்குடியேற்றப்பட்டனர்.

2012 ஆம் ஆண்டு கேப்பாபுலவில் மீள்குடியேற்றம் செய்வதாகத் தெரிவித்துத் தம்மை அழைத்து வந்து சூரிபுரம் மாதிரிக் கிராமத்தில் மீள்குடியேற்றினர் என்றும் அங்கு தாம் பல்வேறு துன்பங்களை அனுபவித்தனர் என்றும் பிரம்படி மக்கள் தெரிவிக்கின்றனர்.

பிரம்படிக் கிராமத்தில் உள்ள தோட்டக் கிணறுகளை இராணுவத்தினர் இடித்துத் தரைமட்டமாக்கியுள்ளனர். குடிதண்ணீரை பெற்றுக்கொள்வதிலும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது என்றும் அந்தமக்கள்கூறுகின்றனர்.

இதேவேளை, இந்தக் கிராமத்தில் 16 குடும்பங்களில் 5 குடும்பங்கள் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களாக உள்ளன. தற்காலிக வீடுகள் கூட இதுவரை வழங்கப்படவில்லை என்றும் போக்குவரத்து வசதிகள் கூட இல்லை என்றும் கூறுகின்றனர்.

இந்த விடயங்களில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரம்படி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-81)

## நந்தமித்தகம மக்களுக்கு வாழ்வாதார உதவிகள்

### இராணுவத்தினர் வழங்கினர்






வவுனியா, ஜன.07

வவுனியா, நந்தமித்தகம பகுதியிலுள்ள வசதியற்ற குடும்பங்களுக்கு இராணுவத்தால் வாழ்வாதார உதவிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்தப் பகுதியில் கடந்த கால யுத்த காலத்தில் இடம்பெற்ற இடப்பெயர்வின் பின்னர் திரும்பவும் வந்து மீள்குடியேறிய மக்களுக்கே இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

வவுனியா மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் றுவான் குலதுங்க தலைமையில் 10 குடும்பங்களைத் தெரிவு செய்து அவற்றின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் நல்லின மாடுகள் வழங்கப்பட்டன. இதற்கான நிதியுதவியை நுகே கொட ஸ்ரீ தம்மாராம விகாராதிபதி யூ.கே. போகம்பே வழங்கி வைத்தார். (ஐ-100)

## கிளிநொச்சி பகுதிகளில் வீசப்பட்ட 'போர் வெடிக்கும்' துண்டுப் பிரசுரங்கள்



தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பூர்வீக இடங்களைத் துண்டு போடுவதற்கு வாக்களிக்ககூடாது. அவ்வாறு வாக்களித்தால் போர்ச் சூழல் உருவாகும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்ட துண்டுப் பிரசுரங்கள் கிளிநொச்சியின் பல பாகங்களிலும் வீசப்பட்டுள்ளன.

இந்தத் துண்டுப் பிரசுரங்கள் கிளிநொச்சி நகரின் பல இடங்களிலும் நேற்று முன்தினம் இரவுவேளை இனம் தெரியாத நபர்களால் வீசப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியத்துக்கு எதிராகச் செயற்படும் அரசியல் தலைமைகளை எச்சரித்து இந்தத் துண்டுப் பிரசுரங்கள் வீசப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-70)

## பயன்படுத்த முடியாத பஸ் தரிப்பிடம்



வவுனியா, ஜன.07

வவுனியா மாவட்டத்திலுள்ள செட்டிக்குளம் பகுதியிலிருந்து மெனிக்பாம் செல்லும் பிரதான வீதியிலிருக்கும், அருவித்தோட்டம் சிவானந்தா வித்தியாலயம் பாடசாலைப் பகுதியிலுள்ள பஸ்தரிப்பிடம் கடந்த ஒரு வருடத்துக்கு மேலாகப் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது.

இந்த வீதியைப் பயன்படுத்திச் செட்டிகுளம் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் சென்று வருகின்றார்கள். அருவித் தோட்டப் பாடசாலையில் கற்கும் மாணவர்கள் சென்று வருகின்றார்கள்.

இந்த நிலையில் பயன்படுத்த முடியாது பஸ்தரிப்பிடம் உள்ளது. இதனால் மழை, வெயில் நேரங்களில் பயணிகள் பெரும்சிரமம் அடைய வேண்டியுள்ளது.

பலரிடம் இது தொடர்பில் முறையிட்டும் இதுவரையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்று இந்தப் பகுதியிலுள்ள கிராம மக்கள் தெரிவித்துள்ளனர். (ஐ)

## வவுனியாவில் கஞ்சாவுடன் ஒருவர் கைது!

வவுனியா, ஜன.07

வவுனியா, ஏ 9 வீதி, மூன்று முறிப்பு சந்தியில் நேற்று முன்தினம் இரவு கேரள கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா பிரதி பொலிஸ் மா அதிபர் அலுவலகத்துக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது 300 மில்லி கிராம் கேரள கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தத் தாங்கள் நடவடிக்கை எடுத் துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-100)





வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சரின் மன்னார் மாவட்ட உப அலுவலகத்தில் நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர்கள் மற்றும் ஓட்டோ உரிமையாளர்கள் ஆகியோருக்கான விசேட ஒன்று கூடல் இடம் பெற்றது. இந்த ஒன்று கூடல் வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனிஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் காணப்படும் போக்குவரத்துச் சம்பந்தமான பிரசினைகள் தொடர்பில் பஸ் உரிமையாா்கள் சிலரும், ஓட்டோ உரிமையாளர்கள் சிலரும் அமைச்சருக்கு எடுத்துக் கூறினர். (ஐ)

## இருவேறு இடங்களில் வாராந்தச் சந்தை; முல்லைத்தீவில் வியாபாரிகள் பாதிப்பு

### ஒருங்கிணைக்கக் கோரிக்கை

முல்லைத்தீவு ஜன.7

வெளி மாவட்டங்களில் இருந்து முல்லைத்தீவுக்கு பொருள்களை கொண்டு வருகின்ற வியாபாரிகள் வாராந்த சந்தை என்ற பெயரில் மாஞ்சோலை வைத்தியசாலைக்கு அருகே வீதிகளில் வைத்து அவற்றை விற்பனை செய்கின்றனர். இதனால் உள்ளூர் வியாபாரிகள் பாதிக்கப்பட்டுள்ளனர் எனக் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக உள்ளூர் வியாபாரிகள் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடுகையில்

முள்ளியவளை தண்ணீரூற்று பகுதியில் காணப்படும் பொதுச் சந்தையில் 42 வியாபாரிகள் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். அதில் அதிகமானவர்கள் பெண் தலைமைத்துவக் குடும்பங்களாவர்.

இந்தநிலையில் வாராந்த சந்தை ஒன்று அமைக்கப்பட்டு உள்ளூர் உற்பத்திகளை மாத்திரம் விற்பதற்கு உற்பத்தியாளர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆனால், வெளி மாவட்டங்களிலிருந்து பொருள்களைஎடுத்துவரும் வியாபாரிகள் மாஞ்சோலை பகுதியில் வைத்து மலிவு விலைக்கு விற்கின்றனர்.

மேற்படி வியாபாரிகளும் வாராந்தச் சந்தைக்கு வந்து வியாபாரத்தை மேற்கொள்வதில் எங்களுக்கு எந்தவித ஆட் சேபனைகளும் இல்லை. அவர்கள் இங்கு வந்து வியாபாரத்தை மேற்கொள்ள முடியும். இதற்கு ஏற்ற ஒழுங்குகளை மேற்கொள்ளுங்கள் என அதிகாரிகளைக் கேட்டுக்கொள்கின்றோம்.

பெண் தலைமைத்துவக் குடும் பங்கள்தமது அன்றாட வாழ்வாதாரத்துக்காக இந்தச் சந்தையையே நம்பி இருக்கின்றனர். இந்த நிலையில், வெளியிடத்தில் வியாபாரம் இடம்பெறுவதால் அவர்கள் பாதிக்கப்படுகின்றனர்.

இறுதியாக இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில், வாராந்த சந்தை முள்ளியவளையில் அமைக்கப்பட்டுள்ள இடத்திலே தான் இயங்கும் என தீர்மானம் எடுக்கப்பட்டி ருந்தது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை-

வெளியிலிருந்து பொருள்களை எடுத்துவந்து விற்பனை செய்யும் வியாரிகள் தைப்பொங்கலுக்குப் பின்னர் மாஞ்சோலையில் வாராந்தச் சந்தை நடத்த அனுமதி வழங்க வேண்டும் எனக்கோரிக்கை விடுத்து அண்மையில் ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ம-81)

# இனவாதிகளின் பின்னால் இருப்பது நல்லாட்சி அரசா மஹிந்த தரப்பா?

நன்றி- 'மடவலநியூஸ்' இணையம்



அளுத்கம இனக் கலவரத்தை கோட்டாபய தான் தூண்டினார் என்று ராஜித சேனாரத்தின கூறியமை மட்டுமல்ல அதற்குரிய ஆதாரங்களும் தன்னிடம் இருக்கின்றன எனவும் பத்திரிகையாளர்களின் கேள்விக்குப் பதிலளிக்கும் போது கூறியுள்ளார்.

அவர், அந்த ஆதாரங்களைத் தன்னுடைய அரசியல் நலனுக்குப் பாவிக்கின்றாரா? அல்லது முஸ்லிம்களை உசுப்பேற்றப் பாவிக்கின்றாரா? அல்லது அவ்வப்போது மஹிந்தவை மிரட்டுவதற்குப் பாவிக்கின்றாரா? - இது ராஜிதவுக்கும் படைத்த இறைவனுக்கும்தான் வெளிச்சம்.

அதே நேரம் , இந்தக் கலவரத் தைப் பின்னால் இருந்து இயக் கியவர்கள் முன்னாள் ஆட்சி யாளர்கள்தான் என்றுபொதுபல சேனாக்காரர்களும் இப்போது கூறுகின்றார்கள். அவர்களின் இந்தக் கூற்றைப் பார்க்கும் போது, தங்களுடைய உண்மையான நண்பர்கள் இவர்கள்தான் என்று காட்டுகின்றமை போலவே உள்ளது.

அதேபோன்று, இந்த இன வாதத்தின் சூத்திரதாரிகள் சம்பிக்க ரணவக்கவும், பொது பலசேனாவும்தான் என்று மஹிந்த ராஜபக்ஷவும், கோட்டாபய ராஜபக்ஷவும் பகிரங்கமாகவே கூறியுள்ளனர்.

அதனைக் கண்டு கொள்ளாமல் விட்டமை நாங்கள் செய்த தவறுதான் என்றும் மிகப் பகிரங்கமாகவே அறிவித்துள்ள கோட்டாபய, பொது பலசேனா என்ற இனவாதிகளுக்கும் தனக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றும், அப்படித் தொடர்பிருந்தால் விசாரணை செய்து நிரூபியுங்கள் என்றும் கோட்டாபய சவால் வேறு விட்டுள்ளார்.

மேலும் முஸ்லிம்களையும் தங்களையும் பிரிப் பதற்கு மேற்குல குடன் சேர்ந்து சம்பிக்க ரணவக்க, பொதுபல சேனாவைச் சேர்ந்த ஞான சார தேரர் போன்றவர்கள் செயல்பட்டு வந்துள்ளார்கள் என்றும் கோட்டாபய கூறியுள்ளார்.

இப்போது சம்பிக்க ரணவக்க, பொதுபல சேன, சிங்க லே, ராஜித போன்ற வர்கள் எங்கே தஞ்சம் அடைந்துள்ளார்கள் என்பதை மக்கள் அறியவில்லையா என்றும் கேள்வி எழுப்பி உள்ளார்.

நாடாளுமன்ற வீதியில் ஒரு வருடத்துக்கு மஹிந்தர் தலை கீழாக நின்றாலும், முஸ்லிம் மக்கள் மஹிந்தருக்கு வாக்களிக்கமாட்டார்களென்று அவ்வளவு உறுதிப்பாட்டோடு, அதே நேரம் பொதுபலசேனாவைச் சேர்ந்த பிக்கு ஒருவர் கூறுகின்றார். முஸ்லிம் மக்களை அந்தளவுக்குத் தாங்கள் மஹிந்தவுக்கு எதிராக மாற்றியுள்ளோம் என்று கூறுகின்றமை போன்று உள்ளது அவ ரின் கூற்று.

இப்போது மஹிந்தவும், இன வாதிகளும் , ஒருவரை ஒருவர் குற்றஞ் சாட்டிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில், இன வாதிகளைத் தன்பக்கம் வைத் திருக்கும் நல்லரசாங்கம் மஹிந்தவுக்கு எதிராக ஏன் இதைப் பயன்படுத்தத் தயங்குகின்றது?

அப்படியானால் இந்த நல்லரசாங்கம் இது சம்பந்தமாக விசாரணை நடத்தி, குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்கு ஏன் பின்னிற்க வேண்டும்?

இந்த இனவாதிகளை இயக்கியவர் மஹிந்தர் என்பது உண்மையானால்,விசாரணை நடத்தி அவரைக் குற்றவாளியாக்க இந்த அரசாங்கம் பின் நிற்பதன் நோக்கம் என்ன வென்றும் புரியாமல் உள்ளது.



மஹிந்தவை ஏதாவது ஒன்றில் மாட்ட வைத்து, அரசியலில் இருந்து அவரை ஓரங்கட்டத் துடித்துக் கொண்டிருக்கும் இந்த நல்லரசாங்கம், இச்சந்தர்ப்பத்தை ஏன் இன்னும் பயன்படுத்தாமல் இருக்கின்றது?

மஹிந்தவை ஏதாவது ஒன்றில் மாட்டவைத்து, அரசியலில் இருந்து அவரை ஓரங்கட்டத் துடித்துக் கொண்டிருக்கும் இந்த நல்லரசாங்கம், அதனை ஏன் இன்னும் பயன்படுத்தாமல் இருக்கின்றது?

ராஜித சேனாரத்ன அது சம்பந்தமான ஆதாரங்கள் தன்னிடம் உள்ளன என்று கூறுகின்றார். அப்படி அவரிடம் ஆதாரங்கள் இருந்தால் அவற்றை வைத்தே மஹிந்த மீது நடவடிக்கை எடுக்க எத்தனை நேரம் எடுக்கும்?



இப்போது நல்லரசாங்கத்தின் செல்லப் பிள்ளைகளாக இருக்கும் சம்பிக்க ரணவக்க, பொது பலசேனா, சிங்கலே போன்றவை அரச சாட்சியாக மாற்றி மஹிந்தவையும், கோட்டாபயவையும் சட்டத்தின் முன் குற்றவாளிகளாக்கி, முஸ்லிம்களிடமிருந்து நிரந்தரமாக அவர்களைப் பிரித்து விடுவதற்கு இது ஒரு நல்ல சந்தர்ப்பமாக இருந்தும்,இந்த நல்லாட்சி இந்த விடயத்தில் மௌன மாக இருப்பதன் நோக்கம் என்ன வென்று புரியாத புதிராகவே உள்ளது.

மஹிந்தவைப் பழி வாங்கிவிட வேண்டும் என்ற ஒரே காரணத்துக்காக, தாஜுடீன் கொலை வழக்குக்கு இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கும் இவர்கள், பல உயிர்களுக்கும், உடைமைகளுக்கும் பலத்த சேதத்தை விளைவித்த இந்த விடயத்துக்கான ஆதாரங்களையும், சாட்சிகளையும் கைவசம் வைத்திருக்கின்றோம் எனக் கூறும் இந்த நல்லரசாங்கம், ஏன் மஹிந்தவுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்குத் தயங்குகின்றது.

இப்படியான சந்தர்ப்பங்கள் அவர்களுக்குச் சார்பாக இருந்தும், அத்தனை இனவாதிகளும் தங்கள் பக்கம் இருந்தும், இந்த நல்லரசாங்கம் அளுத்கம கலவரத்துக்கு நடவடிக்கை எடுத்து உண்மையை வெளிக் கொண்டு வந்து வெளிக் காட்டாது விட்டால், இந்த இனவாதிகளை பின்னாலிருந்து இயக்குவது மேற்குலகமும், அதன் ஏஜண்டான சம்பிக்க போன்றவர்களுமேஎன்று,மஹிந்த சொல்லும் விடயம் உண்மை என்றே ஆகிவிடும்.

மஹிந்த குறிப்பிடும் அத்தனைஇனவாதிகளும் நல் லாட்சியின் அரவணைப்பிலேயே இப்போதும் இருந்து வருகின்றார்கள் என்பது எல்லோரும் அறிந்த விடயமாகும்.

உண்மையில் விசாரணை ஒன்று நடைபெற்றால் இந்த இனவாதிகளுக்குப் பின்னால் இருப் பது தாங்கள்தான் என்ற உண்மை வெளியாகிவிடும் என்ற பயமும் இவர்களுக்குள் இருக்கலாம்.



ஆகவே, இனவாதிகளின் பின்னால் இருப்பது நல்லரசாங்கமா? அல்லது மஹிந்தவா? என்பதைக் கண்டறியக் கூடிய அளுத்கம விசாரணைக்கு இவர்கள் ஆர்வம்காட்டாமல் இருக்கின்றமையைக் கொண்டே புரிந்து கொள்ளலாம்- இவர்களும் அதற்குத் துணை போகின்றவர்கள்தான் என்று.

ஆட்சியையும், அதிகாரத்தையும், சாட்சிகளையும், இனவாதிகளையும் கையில் வைத்திருக்கும் இந்த நல்லரசாங்கத்துக்கு அதில் உண்மைகள் இருக்கின்றன எனத் தெரிந்திருந்தால் இந்த நேரம் அவர்களே அதனைப் பூதாகரமாக்கி மஹிந்தவை பழி வாங்கி இருப்பார்கள்.

ஆகவே, உண்மையான எண்ணம் இதில் அவர்களுக்கு இருக்குமாக இருந்தால் அவர்கள் விசாரணை நடத்தி உண்மையை உலகுக்குக் காட்ட வேண்டும்.

அப்படி நடக்கவில்லையானால்...?

இந்த நல்லரசாங்கமே இந்த இனவாதிகளின் பின்னால் இருக்கும் சதிகாரர்கள் என்பது ஊர்ஜிதமாகும். ★★




பொன்.வேணு கிருஷ்ணா

### சிரியாவின் ஆளும் வர்க்கத்தின் பின்னணி

இவ்விடத்தில் சிரியாவின் ஆளும் வர்க்கத்தின் பின்னணியை அலசுவது முக்கியமானது. ஏனெனில் அதிபர் பஷார் அல் ஆசாத் உட்பட அரசாங்கத்தை அலங்கரிக்கும் முக்கிய புள்ளிகள் சிறுபான்மை அலாவி சமூகத்தை




சேர்ந்தவர்கள். சிரியாவில் ஒரு மில்லியன் அலாவிக்கள் (மொத்த சனத்தொகையில் 12%) வாழ்கின்றனர். இஸ்லாமிய மதத்தில் ஷியா பிரிவைச் சேர்ந்தவர்களாக அலாவி கூறிக் கொள்கின்றனர். வரலாற்றில் ஷியா இஸ்லாமில், மேலும் பல கிளைகள் பிரிந்து சென்றன. இமாம் நுசாயிரியின் போதனைகளை பின்பற்றும் அலாவி (அலியை பின்பற்றுபவர்கள்) அவற்றில் ஒன்று. ஆயினும், பிற முஸ்லிம்கள் அலாவிக்களை இஸ்லாமியராக கருதுவதில்லை. அலாவிக்கள் இஸ்லாமியரின் மதக் கடமைகளைப் பின்பற்றுவதில்லை. ஷரியா சட்டத்தை ஏற்றுக் கொள்வதில்லை.

அலாவிக்களின் வழிபாட்டு முறைகள், மதச் சடங்குகள், புனித நூல் ஆகியன வித்தியாசமானவை. அவர்கள் கிறிஸ்தவர்களின் பண்டிகை நாட்களையும் கொண்டாடுகின்றனர். கிறிஸ்தவ புனிதர்களையும் போற்றுகின்றனர். சுருக்கமாக, இஸ்லாமுக்கும், கிறிஸ்தவத்திற்கும் இடையிலான மதத்தைச் சேர்ந்தவர்கள் போன்று காணப்படுகின்றனர்.

பல நூறாண்டுகளாக, சிரியாவில் அலாவிக்கள் ஒதுக்கி வைக்கப்பட்ட சமூகமாக வாழ்ந்து வந்தனர். அதாவது, இந்தியாவில் தாழ்த்தப்பட்ட சாதிகளைப் போன்று நடத்தப்பட்டனர். ஆசாத் ஆட்சிக் காலத்தில் தான், பொருளாதாரத்தில் பின்தங்கியிருந்த, வறுமைக்குள் வாடிய அலாவி சமூகத்தில் மாற்றம் ஏற்பட்டது. இராணுவ சதிப்புரட்சி மூலம் ஆசாத் ஆட்சியைப் பிடித்தமை, சிரியாவில் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. இந்தியாவில் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த ஒருவர் பிரதமரானால், அரசை நடத்துவதும் அந்தச் சாதியினராக இருந்தால், பிற சாதியினர் எவ்வாறு எதிர்வினையாற்றுவார்கள்? அன்று சிரியாவில் ஏற்பட்ட சமூக மாற்றமும் அது போன்றது. ஆசாத் ஆட்சியில் தான் அலாவிக்கள் உயர் பதவிகளைப் பெற்றுப் பணக்காரரானார்கள். இன்றைய குழப்பகரமான சூழ்நிலையில், சிரியாவின் மேற்குக் கரையோர லடாக்கியா பகுதியில் செறிந்து வாழும் அலாவி சமூகம், அரசு ஆதரவு ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. சிரியாவில் தற்போதைய அரசு கவிழுமானால், பெரும்பான்மை சுன்னி முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்தவர்களே ஆட்சியைப் பிடிப்பார்கள் எனவும் 2011 இல் எதிர்பார்க்கப்பட்டது. அவர்கள் அதிகாரத்தைக் கைப்பற்றினால், அலாவி சமூகத்தினரை பழிவாங்குவதற்காக இனப்படுகொலையைக் கட்டவிழ்த்து விடலாம் எனவும் 2011இல் எதிர்பார்க்கப்பட்டது. எதிர்காலம் குறித்த அச்சம் எல்லோர் மனதிலும் 2011இல் குடிகொண்டிருந்தது.

### சிரியா போர்க் களத்தின் போர்க் குற்றங்கள்






இங்கேயுள்ள படத்தில், மேற்கத்திய நாடுகளால் ஆதரிக்கப்படும், சிரியாவின் ''அல்கைதா தீவிரவாதிகள்'', சிரிய கிறிஸ்தவப் பெண் ஒருவரை வன்புணர்ச்சி செய்து, கோரமாக கொலை செய்த காட்சி. இந்தச் செய்திகள், உலகில் எந்த கிறிஸ்தவரது மனச்சாட்சியையும் உலுக்கவில்லை. சிரியாவில் நடக்கும் உள்நாட்டுப் போரில், சிரிய அரச படைகளும், கிளர்ச்சிக் குழுக்களும் மனித உரிமைகளை மீறுவதுடன், பொது மக்களையும் துன்புறுத்தி, பலி வாங்கி வருவதும் ஏற்கனவே தெரிந்த விடயங்கள். போரில் ஈடுபடும் பல தரப்பினரும் பாரிய போர்க்குற்றங்களை புரிந்துள்ளன. ஆனால், மேற்கத்திய ஊடகங்கள் ஒரு பக்கச் சார்பான தகவல்களை மட்டுமே உலகிற்குத் தெரிவித்து வந்தன.

### கிறிஸ்தவ மக்கள் இஸ்லாமிய மத அடிப்படைவாதிகளால் வேட்டையாடிக்கொலைசெய்யப்படுகின்றனர்

சிரிய உள்நாட்டுப் போருக்குக் காரணமான, மதரீதியிலான சமூகப் பிரிவினைகள், அவற்றுக்கு இடையிலான முரண்பாடுகள் யார் கண்ணுக்கும் தெரிவதில்லை. கிறிஸ்தவ சிறுபான்மையினர் சிரியாவின் ஆசாத் அரசை ஆதரவளிப்பதால், கிறிஸ்தவ மக்கள் இஸ்லாமிய மத அடிப்படைவாதிகளால் வேட்டையாடிக் கொலை செய்யப்படுகின்றனர். அல்குவைதா தீவிரவாதிகள், கிறிஸ்தவர்களைப் படுகொலை செய்த சம்பவங்கள் குறித்த செய்திகள் அடிக்கடி வெளியாகின்றன. ஆனால், ''கிறிஸ்தவ நாடுகள்'' என்று கருதப்படும் மேற்கத்திய நாடுகள், சிரிய கிறிஸ்தவர்களின் அவலங்களைப் புறக்கணித்து வருவதுடன், தொடர்ந்தும் இஸ்லாமிய அடிப்படைவாத அல்கைதா தீவிரவாதிகளை




ஆதரித்து வந்தன. உலகத்தில் எங்காவது கிறிஸ்தவர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டால், 'கிறிஸ்தவ நாடுகள்' தட்டிக் கேட்கும் என்ற மாயை இங்கே தான் உடைக்கப்பட்டது.

சிரியாவில் ஆசாத் ஆட்சி கவிழ்ந்தால், அங்கே அல்கைதா ஆட்சியைக் கைப்பற்றி விடும். அதற்குப் பிறகு, இஸ்ரேல் மீதான ஜிகாத் அறிவிக்கப்பட்டாலும் ஆச்சரியம் இல்லை. முகம் தெரியாத தேவதையை விட, இவ்வளவு காலமும் பழகிய பிசாசே பரவாயில்லை என்ற முடிவுக்கு இஸ்ரேலிய இராணுவம் வந்திருந்தது. ஆசாத் அரசு பலவீனமாக இருந்தாலும், இஸ்ரேலுடன் சமாதானமாக இருக்கும் என்று நினைக்குமளவிற்கு நிலைமை வந்திருந்தது. இதைத் தான், கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் செய்வது என்று சொல்வார்கள்.

எகிப்தில் ஆட்சியில் இருப்பதைப் போன்ற, முஸ்லிம் சகோதரத்துவக் கட்சி சிரியாவில் இயங்கிக் கொண்டிருந்தது. ஆனால், அது ஆசாத் (இன்றைய அதிபரின் தந்தை) காலத்தில் தடை செய்யப்பட்டிருந்தது. எண்பதுகளில், ஹோம்ஸ் நகரில் இடம்பெற்ற ஆயுதக் கிளர்ச்சி, ஈவிரக்கமின்றி நசுக்கப் பட்டது. ஆயிரக் கணக்கான முஸ்லிம் சகோதரக் கட்சி உறுப்பினர்கள் மாண்டனர். அதற்குப் பிறகு, அந்தக் கட்சி தலைமறைவாக இயங்கிக் கொண்டிருந்தது. குறிப்பாக, சிரியாவில் பெரும்பான்மை சமூகமான சுன்னி முஸ்லிம்கள் மத்தியில் அதன் ஆதரவுத் தளம் இருந்தது.

(கேள்வி தொடரும்...)


### Muslims in the Mideast

Less than 15 per cent of the world's Muslims are Shiite, or Shia; most Muslims are Sunni.


PER CENT OF POPULATION

| | SHIA MUSLIM | SUNNI MUSLIM |
|---|---|---|
| Bahrain | 70% | 30% |
| Egypt | – | 90% |
| Iran | 90% | 9% |
| Iraq | 63% | 34% |
| Jordan | 2% | 92% |
| Lebanon | 36% | 22% |
| Qatar | 14% | 86% |
| Saudi Arabia | 5% | 95% |
| Syria | 13% | 74% |
| Turkey | 15% | 85% |

SOURCE: Pew Forum on Religion and Public Life; CIA World Factbook; Adherents.com




MCT GRAPHIC






# தமிழ்த் தேசிய எழுச்சி

ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றி சிந்தனைப் புரட்சியை முன்னெடுத்தவர்களுள் விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கிய மானவர். அரசியல் ஞானம்மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழினத்தின் உயரிய வரலாற்றுப் பதிவு ஏடான 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின்றார். இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிடும் நுட்பமான – நுண்ணியமான – விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.



19

## இலங்கையில் இந்தியத் தலையீடு

கறுப்பு ஜூலை கலவரம், இலங்கையில் இந்திய அரசு தலையீடு செய்வதற்குத் தேவையான இடைவெளியையும் பொருத்தமான புறநிலையையும், தகுந்த நியாயப்பாட்டையும் உருவாக்கிக் கொடுத்தது எனலாம். 1983 ஜூலை இனக் கலவரத்தோடு ஆரம்பமாகிய இந்தியத் தலையீடு, 1990 மார்ச் மாத இறுதியில், இந்திய அமைதிகாக்கும் படையின் விலகலுடன் முடிவுக்கு வந்தது. இத் தலையீடு, இந்திய - இலங்கை உறவில் மிகவும் நெருக்கடியான சர்ச்சைக்குரிய கால கட்டமாக அமைகிறது. ஏழு ஆண்டு கால நீட்சியைக் கொண்ட இந்திய தலையீடு, வெவ்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு வடிவங்களை எடுத்து, அரசியல், இராணுவ, கேந்திர பரிமாணங்களைக் கொண்ட மிகவும் சிக்கலான விவகாரமாக மாறியது.

அரசியல் மட்டத்தில் பார்க்கப் போனால், பாதுகாப்பற்ற அப்பாவித் தமிழ்ச் சமூகத்தின் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட இன அழிப்பு வன்முறையைத் தடைசெய்யும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்ட மனிதாபிமானத் தலையீடாக இது அமைந்தது. இந்த அரசியல் - இராஜதந்திர முயற்சி, நான்கு ஆண்டு காலமாக நீடித்த ஒரு மத்தியஸ்த விவகாரமாக மாறி, ஈற்றில் இந்திய - இலங்கை உடன்படிக்கையாக முடிவுற்றது. தமிழரின் இனப் பிரச்சினைக்குத் தீர்வாக அதிகாரப் பரவலாக்கத் திட்டம் ஒன்றையும் இந்த உடன்படிக்கை கொண்டிருந்தது.

இராணுவ மட்டத்தில் நோக்குமிடத்து, சிங்கள அரசுக்கு எதிராகத் தமிழரின் ஆயுதப் போராட்ட இயக்கத்தைக் கட்டி எழுப்புவதற்கு இரகசியமாக உதவி புரிந்தமையும் இந்தியத் தலையீட்டின் ஓர் அம்சமாக அமைந்தது. தமிழரின் தேசிய இனப் பிரச்சினைக்குச் சமாதானப் பேச்சுக்கள் வாயிலாகத் தீர்வுகாண வழிவகை செய்யுமாறு ஜெயவர்த்தன அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் நோக்குடனேயே தமிழ்ப் போராளி அமைப்புகளுக்கு இந்திய அரசு இராணுவப் பயிற்சியையும் ஆயுத தளபாடங்களையும் வழங்கியது. பின்னைய காலகட்டத்தில், விடுதலைப்புலிகளிடமிருந்து ஆயுதங்களைக் களையவும், இந்திய - இலங்கை ஒப்பந்த விதிகளை நிறைவு செய்யவும் இந்திய அமைதிப் படைகள் அனுப்பப்பட்டமையைத் தொடர்ந்து இந்தியத் தலையீடு நேரடியான இராணுவ மோதலாக வடிவம் எடுத்தது.

புவியியல் - கேந்திர மட்டத்தில் பார்த்தால், இந்தியத் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில் அந்நிய நாசகாரச் சக்திகள், அவ்வேளை இலங்கையில் ஊடுருவி நின்றன என இந்திய அரசு அஞ்சியது. இந்தியாவின் புவியியல் - கேந்திர உறுதிநிலைக்குப் பங்கம் விளைவிக்கக் கூடிய இந்த அந்நிய சக்திகளை இலங்கையிலிருந்து வெளியேற்ற வேண்டும் என்பதும் இந்தியத் தலையீட்டின் ஒரு முக்கிய நோக்கமாக இருந்தது. இந்திய - இலங்கை உடன்பாட்டுடன் இணைந்ததான கடிதப் பரிமாற்றத்தில் இலங்கை அரசைக் கட்டுப்படுத்தும் விதிகளை உள்ளடக்கியதன் மூலமாக இந்தியா தனது பாதுகாப்பை உறுதிப்படுத்தியது.

பல்வேறு பரிமாணங்களைக் கொண்டதாகப் பெரிய எடுப்பில் மேற்கொள்ளப்பட்ட இத்தலையீடு, இறுதியில் இந்திய வெளிவிவகாரக் கொள்கைக்கும், இராஜதந்திர முயற்சிக்கும் ஏற்பட்ட பெரியதொரு தோல்வியாகவே முடிந்தது. இந்திய - இலங்கை உடன்பாடும் சரி, இந்திய அமைதிப் படைகளின் செயற்பாடுகளும் சரி, தமிழரின் இனப்பிரச்சினையைத் தீர்த்து வைக்கவில்லை. வெவ்வேறு காரணங்களின் நிமித்தம், இந்திய - இலங்கை உடன்பாட்டையும், தமிழர் தாயகத்தில் இந்தியப் படைகளின் இருத்தலையும் தமிழர்களும் சிங்களவர்களும் விரும்பவில்லை. இந்திய இராணுவம் விடுதலைப் புலிகளின் ஆயுதங்களைக் களைவதற்கு எடுத்த முயற்சி ஒரு கெரில்லாப் போராக வெடித்தது. இந்தியப் படைகள் செய்த அட்டூழியங்கள் காரணமாகப் பெருந்தொகையான அப்பாவிப் பொது மக்கள் கொல்லப்பட்டனர். தமிழரின் சொத்துக்கள் பெருமளவு அழிக்கப்பட்டன. இந்திய அமைதிப்படைகள் ஆக்கிரமிப்பு இராணுவமாக மாறி, கொடிய போர்க்குற்றங்களைத் தமிழர் மீது இழைத்தது. இந்தியாவைத் தமது இரட்சகராகவும் பாதுகாவலராகவும் பூசித்து வந்த தமிழீழ மக்களுக்கு இந்திய இராணுவம் இழைத்த கொடுமைகள் ஆழ்ந்த அதிர்ச்சியையும் ஆத்திரத்தையும் கொடுத்தன.

> "பல்வேறு பரிமாணங்களைக் கொண்டதாகப் பெரிய எடுப்பில் மேற் கொள்ளப்பட்ட இத்தலையீடு. இறுதியில் இந்திய வெளிவிவகாரக் கொள்கைக்கும். இராஜதந்திர முயற்சிக்கும் ஏற்பட்ட பெரியதொரு தோல்வியாகவே முடிந்தது. இந்திய - இலங்கை உடன்பாடும் சரி. இந்திய அமைதிப் படைகளின் செயற்பாடுகளும் சரி. தமிழரின் இனப்பிரச்சினையைத் தீர்த்து வைக்கவில்லை. வெவ்வேறு காரணங்களின் நிமித்தம், இந்திய - இலங்கை உடன்பாட்டையும், தமிழர் தாயகத்தில் இந்தியப் படைகளின் இருத்தலையும் தமிழர்களும் சிங்களவர்களும் விரும்பவில்லை."

இந்திய - இலங்கை உடன்பாடு செய்யப்பட்டமையையும் தமிழர் தாயகத்தில் இந்தியப் படைகள் தரித்து நின்றமையையும் எதிர்த்துத் தென்னிலங்கையில் ஒரு கொந்தளிப்பான நிலைமை உருவானது. இலங்கை மண்ணில் இந்தியப் படைகள் ஆக்கிரமித்து நின்றமையை எதிர்த்துத் தீவிரவாதக் கம்யூனிஸ்ட் இயக்கமான ஜனதா விமுக்தி பெரமுனை (ஜே.வி.பி.) சிங்கள அரசுக்கு எதிராக ஆயுதக் கிளர்ச்சியில் குதித்தது. 1988 இல் ஜனாதிபதி பிரேமதாஸ ஆட்சிப்பீடம் ஏறியமையை அடுத்து, அவர் விடுதலைப் புலிளுடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பித்து இந்தியப் படைகளை நாட்டை விட்டு வெளியேறுமாறு வேண்டினார். இதனால் இந்திய - இலங்கை உறவில் பகைமையும் முறிவும் ஏற்படும் சூழ்நிலையும் உருவாகியது. இறுதியில் வி.பி.சிங் இந்தியப் பிரதமராகிய வேளையில் இந்தியப் படைகளை திருப்பி அழைக்க இந்திய அரசு முடிவெடுத்தது. 1990 மார்ச் மாதம் இந்திய இராணுவத்தின் கடைசிப் படையணிகள் இலங்கை மண்ணை விட்டு வெளியேறின. அத்துடன் மிகவும் சர்ச்சைக்கு ஆளாகியிருந்த இந்தியத் தலையீட்டுச் சம்பவம் முடிவுக்கு வந்தது. இந்தக் கசப்பான, அவமானத்துக்குரிய வரலாற்று அனுபவம் காரணமாக இலங்கையின் இனப் பிரச்சினையில் நீண்ட காலமாகவே ஒரு தலையிடாகக் கொள்கையை இந்திய அரசு கடைப்பிடித்து வருகிறது.



இலங்கையில் இந்தியத் தலையீடு குறித்து, பல்வேறு வட்டாரங்களிலிருந்து பல்வேறு வகையான கண்டன ஆய்வுகள் முன்வைக்கப்பட்டன. இந்தியாவில் இருந்தே மிகவும் மோசமான கண்டனக் குரல்கள் எழுந்தன. அயல் நாட்டினது உள்நாட்டு விவகாரத்தில் அவசியமின்றித் தலையிட்டு, உலக அரங்கில் இந்தியாவுக்கு அவப்பெயரைப் பெற்றுக்கொடுத்தது எனவும், இதனால் பாரத நாட்டின் அணிசேராக் கொள்கைக்குப் பாரதூரமான பங்கம் ஏற்பட்டது எனவும் பல இந்திய அரசியல் ஆய்வாளர்களும், கல்விமான்களும் ஊடகவியலாளர்களும் கண்டன விமர்சனங்களை முன்வைத்தனர். இன அழிப்பை நோக்காகக் கொண்ட கலவரத்தை மனிதாபிமானத்தின் அடிப்படையில் தடுத்து நிறுத்த வேண்டும் என்பதால் இந்தியத் தலையீடு தவிர்க்க முடியாதது எனச் சிலர் வாதிட்டனர். எனினும் இத் தலையீடு அரசியல் இராஜதந்திர மட்டத்தில் அமைந்திருக்க வேண்டும் என்பது இவர்களது கருத்து. அமைதி காக்கும் பணி என்ற சாக்கில் இந்திய இராணுவம் இலங்கைக்கு அனுப்பப்பட்டமையை இவர்கள் வன்மையாகக் கண்டித்தனர். இந்திய மத்தியஸ்துவ முயற்சி தோல்வியில் முடிந்தமைக்கு விடுதலைப் புலிகளின் விட்டுக் கொடாத கடும்போக்கையும் பிரேமதாஸ அரசின் நன்றிகெட்ட துரோகத்தையும் மூலகாரணமாகச் சுட்டிக் காட்டின இந்தியப் பத்திரிகைகள். நட்புறவுடைய ஒரு மக்கள் சமூகத்துடன் நல்லுறவு பேணி, அமைதி காக்க வேண்டிய இந்தியப் படைகள் எதற்காக ஒரு போரை நடத்தி, தமது தரப்பில் பெரும் உயிரிழப்பைத் தேடிக் கொண்டார்கள் எனத் தமது ஆய்வுகளில் சுயவிசாரணை செய்தார்கள் இந்தியத் தளபதிகள். சிங்கள தேசத்திலிருந்தும் பல கண்டன விமர்சனங்கள் வெளிவந்தன. பெரும்பாலும் சிங்களப் பத்திரிகையாளர்களால் எழுதப்பட்ட இந்த ஆய்வுக் கட்டுரைகள் தமிழரின் தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு எதிரானவையாக அமைந்தன என்பதுடன் விடுதலைப் புலிகளை ஒழித்துக்கட்டத் தவறியமைக்காக இந்திய இராணுவத்தைக் கடிந்துகொண்டன. 'இலங்கையில் இந்தியத் தலையீடு' என்ற தலைப்பில் றோகன் குணரத்னா எழுதிய புத்தகத்தை ஒரு கனமான வரலாற்று ஆய்வு நூலாகக் கொள்ள முடியாது. இந்தியப் புலனாய்வுத் துறையினர் இலங்கை அரசுக்கு எதிராக நிகழ்த்திய நிழல் யுத்தம் பற்றியே அவரது நூல் விவரிக்கிறது.

(தொடரும்...)

# சனி மாற்றம் உங்களுக்கு எப்படி?



ஜோதிட ஜோதி P.ராமன் பட்டாச்சாரியார்
ஸ்ரீ ஜெய மாருதி ஜோதிட நிலையம்
கும்பகோணம், தமிழ்நாடு.
(maruthi_jaya2003@yahoo.co.in)

**திருக்கணித பஞ்சாங்கப்படி எதிர்வரும் 26.01.2017 அன்று வியாழக்கிழமை இரவு 07.55 மணிக்கு சனி பகவான், விருச்சிக இராசியில் இருந்து தனுசு இராசிக்கு பெயர்ச்சியாகிறார். இனி ஒவ்வோர் இராசி அன்பர்களுக்கும் சனிப்பெயர்ச்சி எப்படி இருக்கும் என்பதையும் அத்துடன் ஒவ்வோர் இராசி அன்பர்களுக்கும் என்னென்ன பரிகாரம் செய்ய வேண்டும் என்பதையும் பற்றி விரிவாகப் பார்க்கலாம்.**

### மிதுன இராசி:

மிருகசீரிஷம் 3, 4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்.

இதுநாள்வரையில் 6 ஆம் இடத்தில் இருந்த சனி பகவான், இப்போது 7 ஆம் இடத்திற்கு வந்திருக்கிறார். உங்கள் இராசிக்கு 9 இற்குரிய சனி, 7 இல் வந்திருப்பது நன்மை தரும். பொதுவாக பாக்கியாதிபதி, சப்தமஸ்தானத்துக்கு வந்தால் எப்படிப்பட்ட பிரச்சினையாக இருந்தாலும் தீர்ந்துவிடும். உங்கள் திட்டங்கள் நிறைவேறும். கல்வியால் நல்ல யோகம் உண்டு. உயர்கல்வி அமையும்.

அடமானத்தில் இருந்த பொருள்கள் கைக்கு வந்துவிடும். புதிய வாகனம் வாங்கக்கூடிய சாதகமான நேரம் இது. ஆனாலும், ஜென்ம ராசியை சனி நோக்குவதால் அலைச்சல் அதிகரிக்கும். இதற்குக்காரணம், தொழில், வேலை என்று புதிதாக அமைத்துத் தந்துவிடுவார் சனிபகவான். அத்துடன் சற்றுப் பதற்றமும் அதிகரிக்கும்.

யாருக்கும் பிணைக் கையெழுத்துப் போடவேண்டாம். புது வீடு கட்டும் திட்டம் நிறைவேறும். பொதுவாகச் சப்தம சனி சாதகம் செய்யும். சாகசமும் செய்யவைக்கும். சோதனைகள் நீங்கிச் சாதனை படைப்பீர்கள்.

பரிகாரம்!

சோம வாரத்தில் (திங்கள்கிழமை) சோமேஷ்வரருக்கு வில்வ இலையால் அர்ச்சனை செய்யுங்கள்.

ஏழை முதியவர்களுக்கு அன்னதானம் செய்யுங்கள். சனி பகவானையும் சனிக்கிழமையில் வணங்கி வாருங்கள்.

### கடக இராசி:

புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயில்யம் உங்கள் இராசிக்கு 6 ஆம் இடத்திற்குச் சனி பகவான் வந்துவிட்டார். நினைத்ததை நடத்திவைப்பான் சனி பகவான். நீங்கள் போடும் திட்டங்கள் அத்தனையும் வெற்றிதான். 6 ஆம் இடத்தில் அமர்ந்த சனி 9 ஆம் இடத்தையும், 12 ஆம் இடத்தையும் பார்வை செய்வதால் விரோதிகள், விரோதங்கள் பஞ்சு போல் பறந்து விடும். இதுநாள்வரை இருந்த வீண்விரயங்கள் இனிமேல் இருக்கா. பணவரவு தாராளமாக இருக்கும். 3 ஆம் இடத்தைப் பார்வை செய்வதால் தைரிய லஷ்மியே உங்கள் வசம்தான். புதிய தொழில் பெரியளவில் அமையும்.

வெளிநாட்டுப் பயணமும், வெளிநாட்டவர்களால் லாபமும் உண்டு. தூங்கிக் கொண்டு இருந்தவர்களை இனி 6 ஆம் இடத்துச் சனி பகவான் தட்டி எழுப்புவான். புதிய நண்பர்களால் மிகுந்த ஆதாயம் உண்டு. வீட்டில் சுபநிகழ்ச்சிகள், திருமணங்கள் நடைபெறும். சுபநிகழ்ச்சிக்காக கடன் வாங்க வைக்கும். ஆகவே திட்டமிட்டுச் செலவு செய்யுங்கள். வேலைக்கு அலைந்து திரிந்தவர்களுக்கு நல்ல வேலை வாய்ப்பு அமையும். பொதுவாக, 8 இற்குரிய சனி 6 ஆம் இடத்தில் அமர்ந்ததால், கெட்டவன் கேட்டில் கிட்டிடும் இராஜயோகம் என்பதற்கேற்ப இனி உங்களுக்கு இராஜயோக வாழ்க்கைதான்.

பரிகாரம்!

ஸ்ரீ ஆஞ்சநேயருக்கு வெற்றிலை மாலை அணிவித்து வணங்குங்கள். சனி பகவானை சனிக்கிழமையில் வணங்கி வாருங்கள்.

## தினசரி ராசி பலன் 07.01.2017

| | | |
|---|---|---|
| சுபநேரம் | : காலை | : 10.30 – 11.30 |
| | மாலை | : 4.30 – 5.30 |
| ராகு காலம் | : 9.00 – 10.30 | |
| குளிகன் | : 6.00 – 7.30 | |
| எமகண்டம் | : 1.30 – 3.00 | |

ஜோதிட ஜோதி P.ராமன் பட்டாச்சாரியார்
ஸ்ரீ ஜெய மாருதி ஜோதிட நிலையம்
கும்பகோணம், தமிழ்நாடு.
(maruthi_jaya2003@yahoo.co.in)

சம நோக்கு நாள்

**மேஷம்:** முயற்சி - நம்பிக்கையுடன் ஈடுபடும் அனைத்துக் காரியங்களும் முன்னேற்றம் காண்பீர்கள்.

**ரிஷபம்:** தொல்லை- செய்யும் செயல்கள் யாவிலும் மற்றவர்களால் தொல்லைகள் சூழும் நாள்.

**மிதுனம்:** சிக்கல்- சிதறிய சிந்தனைகளாலும் அலட்சியங்களினாலும் அவதிப்படும் நாள்.

**கடகம்** : பக்தி- தெய்வ வழிபாடுகள் செய்ய முயற்சிகள் முன்னேற்றம் காண்பீர்கள்.

**சிம்மம்** :லாபம்- அதிஷ்டங்கள் மறைமுக வரவுகளாக வளம் நல்கும்.

**கன்னி:** நிம்மதி- இன்று உங்களுக்கு சந்திராஷ்டமம் என்பதால் வீண் அலைச்சலைக் குறைத்து நிம்மதி தேடும் நாள். சந்திராஷ்டமம்-அஸ்தம், சித்திரை,1,2 ஆம் பாதங்கள்.

**துலாம்:** பரிவு- உங்களின் இதயத்தில் கருணை மிகுந்து அனைவரிடத்திலும் அன்பு காட்டுவீர்கள்.

**விருச்சிகம்:** ஆக்கம்- இன்று உங்களுடைய செயலிலும் நல் முன்னேற்றம் தோன்றும்.

**தனுசு:** இன்பம்- மன உளைச்சல்கள் குறைந்து குடும்பத்தில் குதூகலம் தரும் நன்னாள்.

**மகரம்:** நற்செயல்- எண்ணங்களும், செயல்களும் வெற்றியையே தரும்.

**கும்பம்:** நஷ்டம் - அளவான ஆசைகள் இருப்பது இழப்பின் அளவைக் குறைக்கும்

**மீனம்:** உற்சாகம்- அனைத்துக் காரியத்திலும் மிகுந்த ஆர்வத்துடன் செயற்படுவீர்கள்.

## நுவரெலியா சீதையம்மன் ஆலயம் புதுப்பொலிவுடன்



நுவரெலியா, ஜன.07

உலக வரலாறுச் சிறப்புப் பெற்ற நுவரெலியா சீதையம்மன் ஆலயம் தற்போது அனைத்து நிர்மாணப் பணிகளும் முடிவுற்ற நிலையில் புதுப்பொலிவுடன் காணப்படுகின்றது.

இந்த ஆலயம் தற்போது புனர் நிர்மாணம் செய்யப்பட்டு, வர்ணப் பூச்சுகளால் அலங்கரிக்கப்பட்டு, சிற்ப வேலைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தச் சிற்ப வேலைகள் அனைத்தும் இந்தியாவில் இருந்து அழைத்து வரப்பட்ட சிற்ப வர்ணக் கலைஞர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கடந்த வருடம் இந்த ஆலய மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

உலகலாவிய ரீதியில் பக்தர்கள் நாளாந்தம் இந்தக் கோயிலுக்கு வந்து செல்கின்றனர். குறிப்பாக இந்தியாவில் இருந்து வரும் பக்தர்களின் எண்ணிக்கை முன்னரைவிடத் தற்போது அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

## அரிசிக் கொள்வனவில் மக்கள் கவனம் தேவை

### நுகர்வோர் விவகார அதிகாரசபை கோரிக்கை

கொழும்பு, ஜன.07

அரிசியைக் கொள்வனவு செய்யும் போது அதன் தரம் தொடர்பில் அவதானம் செலுத்துமாறு நுகர்வோர் விவகார அதிகார சபை பொதுமக்களிடம் கோரியுள்ளது.

மனித நுகர்வுக்குத் தகுதியற்ற 14 ஆயிரம் கிலோ கிராம் அரிசி, அதிகார சபையால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கொழும்பு - 11 மற்றும் கொழும்பு 12 ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்களின் போதே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக, நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவர் ஹசித திலகரத்ன சுட்டிக் காட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு;

''எமக்குக் கிடைக்கப் பெற்ற முறைப்பாட்டுக்கு அமையவே இந்தச் சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மேலும் இதன்போது கைப்பற்றப்பட்ட அரிசிகளின் மாதிரிகள் பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய இதுதொடர்பில் வழங்கப்படும் அறிக்கையின் படியே அடுத்தகட்ட சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.''-என்றார். (எ)

## மரக்கறி மற்றும் பழ வகைகளை பெறுமதிசேர்க்க மத்திய நிலையம்

கொழும்பு, ஜன.07

இலங்கையில் மரக்கறி மற்றும் பழவகைகளுக்குப் பெறுமதி சேர்க்கும் மத்திய நிலையம் ஒன்றை அமைக்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதுதொடர்பில் அமைச்சர் தயாகமகே சமர்ப்பித்த ஆவணத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது.

மேலும், பொதியிடல், களஞ்சியப் படுத்தும் வசதிகள் ஆகியன இந்த மத்திய நிலையத்தில் ஏற்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, விசேட சந்தையை இலக்காகக் கொண்டு வெளிநாடுகளில் உள்ள தரத்துக்கும் தேவைக்கும் அமைவாக உள்ளூர் விவசாயிகளுக்கு வசதிகளைச் செய்து கொடுப்பதே அரசின் நோக்கம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

## சூழலைப் பேணாத உரிமையாளர்கள் 8 பேருக்குத் தண்டம்

யாழ்ப்பாணம், ஜன.07

டெங்கு நுளம்பு பரவும் வகையில் சூழலை வைத்திருந்த 8 பேருக்குச் சாவகச்சேரி நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் தலா 4 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து நேற்று முன் தினம் தீர்ப்பளித்தார்.

கொடிகாமம் சுற்றுச்சூழல் பொலிஸார் கடந்த மாதம் 20 ஆம் திகதி கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் சுற்றாடல் கடமையில் ஈடுபட்டிருந்தனர். இதன்போது சில பொதுஇடங்கள், வளவுகள் சோதனையிடப்பட்டன.

இளநீர்க் கோம்பைகள், ரயர்கள், சிரட்டைகள், வெற்று பியர் ரின்கள் என்பவற்றைச் சோதனையின் போது மீட்டிருந்தனர். அவை மீட்கப்பட்ட காணிகளின் உரிமையாளர்கள் 8 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தபோது நீதிவான் இவ்வாறு தண்டம் விதித்தார். (எ-9)

# இனவாதச் செயற்பாடுகள் தொடர்ந்தால் வடமாகாண சபைக்கு எதிராக வழக்கு

## எச்சரிக்கிறது ஜாதிக ஹெல உறுமய

கொழும்பு, ஜன.07

வட மாகாண சபையின் இனவாதச் செயற்பாடுகள் நிறுத்தப்படாவிட்டால் வழக்குத் தொடர நேரிடும் என்று ஆளும் நல்லாட்சி அரசின் கூட்டணிக் கட்சியான ஜாதிக ஹெல உறுமய எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஜாதிக ஹெல உறுமய கட்சியின் இணைத் தவிசாளர் வண. ஹெடிகல்லே விமலசார தேரர்இதனைத்தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லவில் அமைந்துள்ள கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்ற போது இந்த எச்சரிக்கையை அவர் விடுத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

வட மாகாணசபை இனவாத மற்றும் பிரிவினை வாதப் பொருளாதாரக் கொள்கைகளைப் பின்பற்றி வருகின்றது. இந்த நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு அரசு முயற்சிக்க வேண்டும்.

அரசு உரிய நடவடிக்கை எடுக்கத் தவறினால், மாகாண சபைக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தொடர நேரிடும்.

வட மாகாண சபையின் இனவாதச் செயற்பாடுகளைத் தடுக்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்ரம சிங்கவும் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால் போர் வெற்றியின் பலன்களை நாட்டுக்கு வழங்க முடியாது போகும்.

வடமாகாணசபை எல்லைக்குள் பௌத்த விகாரைகள் அமைப்பது தொடர்பில் மாகாண சபையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்துக்கு எதிராக வழக்குத் தொடர்வதற்கான ஆரம்பக் கட்ட நடவடிக்கைகள் பூர்த்தியாகியுள்ளன.

தெற்கின் கள் வகைகள் வடக்கில் தடை செய்யப்படும் வகையிலான தீர்மானம் பொருளாதாரப் பிரிவினைவாதமாகும்.

இவ்வாறு நாட்டின் ஏனைய மாகாணங்களிலும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் நாட்டில் பண்டங்கள், சேவைகள் பரிமாற்றம் செய்வதில் நெருக்கடி நிலைமை ஏற்படும்.

வட மாகாணசபை தொடந்தும் இனவாத, கடும்போக்கு வாத அடிப்படையில் செயற்பட்டு வருவதை மீளவும் மீளவும் உறுதி செய்து வருகின்றது .-என்றார். (ஐ)

# கடலில் தத்தளித்த மீனவர்களுக்கு உதவிய கடற்படை

கொழும்பு, ஜன.07

அந்தமான், நிக்கோபர் தீவுகளில் இருந்து கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களுக்கு இலங்கைக் கடற்படை உதவி செய்துள்ளனர்.

அந்தமான், நிக்கோபர் தீவுகளில் இருந்து சென்ற 6 மீனவர்கள் சுமார் 10 நாள்கள் கடலில் தங்கியிருந்து மீன் பிடிக்கும் நோக்குடன் சர்வதேசக் கடற்பரப்புக்குள் நுழைந்துள்ளனர்.

இந்த நிலையில் படகின் எஞ்சினில் கடல் நீர் புகுந்தமையால் அவர்களின் படகு பழுதடைந்துள்ளது.

இதனையடுத்து தமது சொந்த இடத்துக்குத் திரும்ப முடியால் அவர்கள் சுமார் 30 நாள்கள் வரை கடல் நடுவில் உயிருக்குப் போராடியவாறு தத்தளித்துள்ளனர்.

இந்த நிலையில் மீன் பிடிக்கச் சென்ற புல்மோட்டை மீனவர் கள், பாதிக்கப்பட்ட மீனவர்கள் தொடர்பாக இலங்கை மீனவர்களுக்கு எடுத்துக் கூறியுள்ளனர்.

இந்த விடயம் இலங்கைக் கடற்படைக் குத் தெரியப்படுத்தப்பட்டது. இதனையடுத்து அங்கு விரைந்த கடற்படை, அவர்களுக்குத் தேவையான உணவு மற்றும் நீர் ஆகியவற்றை வழங்கியுள்ளது. அத்துடன் அவர்களது படகினைப் பழுது பார்க்கும் நடவடிக்கையிலும் ஈடுபட்டது.

அந்த மீனவர்கள் தமது படகில் பயணிக்கத் தேவையான ஆயிரத்து 500 லீற்றர் டீசலையும் இலங்கை கடற்படை வழங்கியுள்ளது. (ஐ)

# நாடாளுமன்றின் அனுமதியின்றி 'எட்கா' கைச்சாத்தாக மாட்டாது

## மனோ கணேசன் சுட்டிக்காட்டு



கொழும்பு, ஜன.07

நாடாளுமன்றின் அனுமதியின்றி இந்தியாவுடன் பொருளாதார, தொழில்நுட்ப ஒத்துழைப்பு (எட்கா) உடன்படிக்கை கைச்சாத்தாக மாட்டாது என்று அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகம் ஒன்றுக்கு அளித்த நேர்காணலில் அவர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

'எட்கா' தொடர்பில் நாடாளுமன்றின் ஏகமனதான அனுமதியுடனும், நாட்டு மக்களிடம் கலந்தரையாடியதன் பின்னருமே உடன்படிக்கை கைச்சாத்திடப்படும்.

நாம் அரசு என்ற ரீதியில் மக்களுக்கு எதனையும் மூடி மறைத்து விட்டு உடன்படிக்கைகளில் கைச்சாத்திடப் போவதில்லை.

'எட்கா' உடன்படிக்கை கைச்சாத்திடப் படுவதால் எமது நாடே அதிகளவில் நன்மை அடையும்.

உத்தேச உடன்படிக்கையின் மூலம் இந்திய சந்தைகளில் பிரவேசிக்க எமக்குச் சந்தர்ப்பம் கிட்டும். சரியான விவரங்களைப் புரிந்து கொள்ளாது சில தரப்பினர் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர்.

இந்தியர்கள் இலங்கையில் தொழில்களில் ஈடுபடப்போவதில்லை. நாமே இந்தியாவில் தொழில் வாய்ப்பு பெற்றுக்கொள்ளவுள்ளோம்.

இந்த உடன்படிக்கையின் ஊடாக இந்தியாவுக்குக் கூடுதல் நன்மை கிடைக்கும் என்றால் அதற்காக முதலில் எதிர்ப்பு குரலை வெளியிடுபவன் நானாகத்தான் இருப்பேன்.


புத்த பெருமான் முதல் விஜயன் வரையில் பெரும் எண்ணிக்கை யானவர்கள் இந்தியாவிலிருந்தே இலங்கைக்கு வந்தார்கள்.

இந்திய உதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட நோயாளர் காவு வண்டி தொடர்பிலும் பொய்ப் பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் தற்போது அப்பிரசாரங்கள் அனைத்தும் பொய்ப்பிக்கப்பட்டுள்ளன.

அரசியல் நோக்கில் சிலர் கருத்து வெளியிட்டு வருகின்ற போதிலும் 'எட்கா' உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டால் அதன் ஊடாக இலங் கைக்கு கூடுதல் நன்மை ஏற்படும். - என்று தெரிவித்துள்ளார். (ஐ)

# உள்ளூராட்சித் தேர்தல்களை தொடர்ந்து ஒத்திவைப்பதற்கு இடமளிக்க முடியாது

## வாசுதேவ நாணயக்கார கூறுகிறார்



கொழும்பு, ஜன.07

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களைத் தொடர்ந்தும் ஒத்திவைக்க இடமளிக்க முடியாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையில் இந்த விடயத்தை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

பல்வேறு தந்திரங்களைச் செய்து உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களை ஒத்திவைக்க அரசுக்குத் தேவை ஏற்பட்டுள்ளது.

எனினும் இவ்வாறு உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்தி வைப்பதற்கு இடமளிக்கப்பட முடியாது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை ஒத்தி வைக்கும் அவசியம் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கே உண்டு.

தமிழ் மற்றும் முஸ்லிம், சிறிய அரசியல் கட்சிகள் புதிய தேர்தல் முறைக்கு எதிர்ப்பு வெளியிடக் கூடும் என்பதால், அதனைக் காரணம் காட்டிப் பிரதமர் தேர்தலை ஒத்தி வைக்க முயற்சிக்கின்றார். தொடர்ந்தும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் ஒத்தி வைக்கப்பட்டால் பெரியளவில் மக்கள் கிளர்ச்சி ஏற்படும்.

வாக்கு உரிமைக்காக மேற்கொள்ளப்படும் போராட்டங்களை அடக்கி விட முடியாது. இவ்வாறு தேர்தலை ஒத்தி வைத்தால், அரசுக்கு உதவிவரும் உள்நாட்டு, வெளிநாட்டு சிவில் அமைப்புக்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்க முடியாத நிலைமை ஏற்படும்.

மக்களின் ஜனநாயக உரிமை மறுக்கப்பட்டால் அது ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவைவரையில் செல்லக் கூடும். -என்றார். (ஐ)

# மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரம் வழங்குவது ஆபத்தை விளைவிக்கும்

## அரசை எச்சரிக்கிறார் முன்னாள் டி.ஐ.ஜி.

மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரங்களை வழங்குவது ஆபத்தானது என்று முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி குணவர்தன அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

உத்தேச அரசமைப்புச் சட்டத்தின் பரிந்துரைகளுக்கு அமைய தேசிய பொலிஸ் மற்றும் மாகாணப் பொலிஸ் என்று இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டால், பொலிஸ் திணைக்களத்தின் ஒட்டுமொத்த நடவடிக்கைகளும் ஸ்தம்பிதம் அடையும்.

35 ஆண்டுகளாக பொலிஸ் சேவையில் ஈடுபட்ட அனுபவத்தின் ஊடாக இதனைக் கூறுகிறேன்.

நெடுந்தீவில் பாடசாலை மாணவி வித்தியா கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபரைக் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்ய முடிந்தமைக்குப் பிரதான காரணம் பிளவடையாத பொலிஸ் சேவையேயாகும்.

உத்தேச அரசமைப்பு பரிந்துரைகளுக்கு அமைய இலங்கைப் பொலிஸ் திணைக்களம் ஒன்பது துண்டுகளாகப் பிளவடையும். புதியமுறை நடை முறைக்கு வந்தால் பொலிஸ் மா அதிபரால் மாகாணப் பொலிஸ் விவகாரங்களில் தலையீடு செய்ய முடியாத நிலைமை ஏற்படும்.- என்று தெரிவித்துள்ளார்.

சிங்களப் பத்திரிகை ஒன்றுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இந்த விடயத்தைச் சுட்டிக் காட்டியுள்ளார். (ஐ)


# சன சமூக நிலையம் சிவநகரில் நாளை திறப்பு

கரைச்சிப் பிரதேச சபைக்கு உட்பட்ட சிவநகர் சனசமுக நிலையத் திறப்பு விழா நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு தலைவர் ச.சுதர்சன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வின் முதன்மை விருந்தினராக தமிழ் தேசிய மக்கள் முன்னணி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ந.பிரபாகரன், கரைச்சிப் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ச.பி.அமலராசா ஆகியோரும் கலந்துகொள்வர். (ஐ-70)

# இலங்கையின் போர்க்குற்றங்கள் குறித்து குற்றவியல் நீதிமன்ற விசாரணை தேவை

## அதற்கான தீர்மானத்தை இந்தியா நிறைவேற்ற வேண்டும் என்று ராமதாஸ் வலியுறுத்து



சென்னை, ஜன.07

இலங்கை மீதான போர்க்குற்றச்சாட்டுகள் குறித்துச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் அல்லது அதற்கு இணையான அதிகாரம் கொண்ட, நீதிமன்றத்தில் விசாரணை நடத்துவதற்கான தீர்மானத்தை இந்தியா நிறைவேற்ற வேண்டும் என்று பாட்டாளிகள் மக்கள் கட்சியின் நிறுவுநர் எஸ்.ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

''இலங்கையில் ஒன்றரை இலட்சம் அப்பாவித் தமிழர்கள் கொலை செய்யப்பட்டமை குறித்த விசாரணையில் என்ன நடக்கக் கூடாது என்று உலகம் முழுவதும் உள்ள தமிழர்களும், மனித உரிமை ஆர்வலர்களும் எதிர்பார்த்தார்களோ அது தான் நடந்திருக்கிறது.

2009 ஆம் ஆண்டில் முடிவடைந்த போரில் அனைத்துப் போர்க் குற்றங்களையும் கட்டவிழ்த்து விட்ட ராஜபக்ஷ அரசு, ஒன்றரை இலட்சத்துக்கும் அதிகமாக தமிழர்களைக் கொடூரமாகக் கொன்றழித்தது.

தமிழர்கள் படுகொலைக்கு நீதி விசாரணை கோரி உலகம் முழுவதும் உள்ள தமிழர்கள் தொடர்ந்து சட்டப் போராட்டம் நடத்தி வந்த நிலையில், அதுகுறித்து ஐ.நா.மனித உரிமை பேரவை விசாரணை நடத்துவதற்கான தீர்மானம் ஐ.நா.மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்டது.

அந்த விசாரணைக்கு இலங்கைத் தரப்பில் பல்வேறு முட்டுக்கட்டைகள் போடப்பட்ட நிலையில், அவற்றைக் கடந்து விசாரணை நடத்தி முடிக்கப்பட்டது. அந்த விசாரணையில் தெரியவந்த குற்றச்சாட்டுக்களை விசாரித்துத் தீர்ப்பளிக்கப் பன்னாட்டு நீதிமன்ற விசாரணைக்கு ஆணையிட வேண்டும் என்று தமிழ்க் கட்சிகளும், தமிழர் அமைப்புகளும் வலியுறுத்தியிருந்தன.

எனினும், அதற்கு மாறாக சர்வதேச நீதிபதிகள் மற்றும் சட்ட வல்லுநர்கள் அடங்கிய இலங்கை நீதிமன்றமே இதுபற்றி விசாரிக்கும் என்று இலங்கை உள்ளிட்ட நாடுகள் கொண்டு வந்த தீர்மானம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் 2015 ஆம் ஆண்டு செப்ரெம்பரில் நிறைவேறியது. அதனடிப்படையில் கலப்பு நீதி விசாரணை நடத்தப்பட்டிருக்க வேண்டும்.

எனினும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட சில வாரங்களிலேயே அதை ஏற்க முடியாது என்றும், முழுக்க முழுக்க இலங்கை நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகளைக் கொண்ட நீதிமன்றம்தான் விசாரணை நடத்தும் என்றும் இலங்கை அரசு கூறியுள்ளது.

சர்வதேச நீதிபதிகளைக் கொண்ட நீதிமன்றமே போர்க்குற்றங்கள் குறித்து விசாரணை நடத்த வேண்டும் என்று நல்லிணக்கச் செயலணி பரிந்துரைத்திருந்தது.

எனினும், இந்தப் பரிந்துரையை ஏற்க இலங்கை அரசு மறுத்துவிட்டது. அரசின் சார்பில் அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகளை ஏற்பதும், ஏற்காததும் அரசின் விருப்பம். சர்வதேச நீதிபதிகள் கொண்ட நீதிமன்றம் தான் போர்க்குற்றங்களை விசாரிக்க வேண்டும் என்ற பரிந்துரையை இலங்கை நிராகரிப்பது இது இரண்டாவது முறையாகும்.

இலங்கை அரசின் மீதான போர்க்குற்றங்கள் பற்றி இனி உள்நாட்டு நீதிமன்றமே விசாரணை நடத்தும். இந்த விசாரணையில், பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு எந்த நீதியும் கிடைக்காது. அது மட்டுமின்றி, தமிழர்களைத் திட்டமிட்டுப் படுகொலை செய்த போர்க் குற்றவாளிகள் அனைவரும் தப்பிவிடுவார்கள்.

இதைத்தடுக்க வேண்டிய பெரும் பொறுப்பும் கடமையும், இந்திய அரசுக்கு உள்ளது. இலங்கை போர்க்குற்றங்கள் மீதான நீதிவிசாரணை குறித்த இறுதி அறிக்கையைத் தாக்கல் செய்வதற்காக ஐ.நா. மனித உரிமைகள் பேரவை கூட்டம் அடுத்த மாதம் 27 ஆம் திகதி முதல் மார்ச் மாதம் 24 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

சர்வதேச நீதிபதிகளைக் கொண்டு விசாரணை நடத்துவதாக மனித உரிமை ஆணையத்தில் தீர்மானம் கொண்டு வந்த நாடுகளில் இலங்கையும் ஒன்று. ஆனால், தனது தீர்மானத்தைத் தானே மதிக்காத இலங்கையிடம் சர்வதேச நீதிபதிகளைக் கொண்டு விசாரணை நடத்தும்படி மீண்டும் மீண்டும் வலியுறுத்துவதில் பயனில்லை.

இலங்கை மீதான போர்க்குற்றச்சாட்டுகள் குறித்துச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் அல்லது அதற்கு இணையான அதிகாரம் கொண்ட நீதிமன்றத்தில் விசாரணை நடத்துவதற்கான தீர்மானத்தை இந்தியா நிறைவேற்ற வேண்டும்.''- என்றார். (எ)

## 'பாரத ரத்னா' விருது வழங்க நீதிமன்று உத்தரவிட முடியாதாம்



சென்னை, ஜன.07

மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவுக்குப் பாரத ரத்னா விருது வழங்கக்கோரி தொடர்ந்த வழக்கை சென்னை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

உடல்நிலை பாதிக்கப்பட்டு சிகிச்சை பயனளிக்காத நிலையில் ஜெயலலிதா கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 5 ஆம் திகதி உயிரிழந்தார்.

இந்த நிலையில் ஜெயலலிதாவுக்குப் பாரத ரத்னா விருது வழங்க மத்திய அரசுக்கு உத்தரவிடக்கோரி மதுரையைச் சேர்ந்த ரமேஷ் என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கை நேற்று விசாரித்த உயர்நீதி மன்றம், பாரத ரத்னாவிருது வழங்க நீதிமன்றம் உத்தரவிடமுடியாது என்று கூறி மனுவை தள்ளுபடி செய்தது. (எ)

## விவசாயிகளின் தொடர் மரணம் குறித்து தமிழக அரசிடம் விளக்கம் கோரப்படுகிறது

### மனித உரிமை ஆணையம் கடிதம்

சென்னை, ஜன.07

விவசாயிகள் தொடர் மரணம் குறித்து விளக்கம் அளிக்கக்கோரி தமிழக அரசுக்கு தேசிய மனித உரிமைகள் ஆணையம் கடிதம் அனுப்பியுள்ளது.

தமிழகத்தில் பருவ மழை பொய்த்துப்போனதால் விவசாயம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

வாடிய பயிர்களைக் கண்டு மனம் நொந்த விவசாயிகள் பலர் மாரடைப்பாலும், தற்கொலை செய்து கொண்டும் தங்களது உயிர்களை மாய்த்துக் கொண்டுள்ளனர்.

இந்தநிலையில் விவசாயிகள் மரணம் குறித்து விளக்கம் அளிக்கக்கோரி தமிழக அரசுக்கு தேசிய மனித உரிமைகள் ஆணையம் கடிதம் அனுப்பியுள்ளது.

ஊடகங்களில் வெளியான செய்தியை அடிப்படையாகக் கொண்டு 6 வாரங்களுக்குள் பதிலளிக்குமாறு தமிழக தலைமை செயலாளருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. (எ)

## 5 மாநிலங்களுக்கான தேர்தல் திகதி அறிவிப்பு

டில்லி, ஜன.07

உத்தரப் பிரதேசம், மணிப்பூர், உத்தரகாண்ட், பஞ்சாப், கோவா ஆகிய 5 மாநிலங்களுக்கான சட்டசபைத் தேர்தல் திகதியை தலைமைத் தேர்தல் ஆணையர் நஜீம் ஜைதி அறிவித்துள்ளார்.

அதன்படி உத்தரப் பிரதேசத்துக்கு 7 கட்டங்களாகத் தேர்தல் நடைபெறும். மணிப்பூரில் மார்ச் மாதம் 4, 8 ஆம் திகதிகளில் இரண்டு கட்டங்களாகத் தேர்தல் நடைபெறவுள்ளது. பஞ்சாப் மற்றும் கோவா மாநிலங்களில் எதிர்வரும் 4 ஆம் திகதியும் உத்தரகாண்ட் மாநிலத்தில் எதிர்வரும் 15 ஆம் திகதியும் தேர்தல் நடைபெறும்.

இதேவேளை, 5 மாநிலங்களிலும் பதிவான வாக்குகள் மார்ச் மாதம் 11 ஆம் திகதி எண்ணப்படும் என்றும் தலைமை தேர்தல் ஆணையர் அறிவித்தார். (எ)

## பொங்கலுக்கு முன் தமிழக மீனவரை விடுவிக்குமாறு சசிகலா வற்புறுத்தல்!

### இலங்கைக்கு எதிரான அவரது முதலாவது அறிக்கை



சென்னை, ஜன.07

இலங்கைக் கடற்படையினரால் சிறைப்பிடிக்கப்பட்ட தமிழக மீனவர்களை விடுவிக்க இந்திய மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரி இலங்கைக்கு எதிரான தனது முதலாவது அறிக்கையை வெளியிட்டார் அ.தி.மு.கவின் பொதுச் செயலாளர் சசிகலா நடராஜன்.

இதுதொடர்பில் அந்த அறிக்கையில் அவர் தெரிவித்துள்ளவை வருமாறு:-

''அத்துமீறி மீன்பிடித்தனர் என்று கூறி கடந்த 4ஆம் திகதி இலங்கைக் கடற்படையினரால் 10 தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டனர்.

அண்மையில் இராமேஸ்வரம் மீனவர்கள் 584 படகுகளில் கச்சதீவை அண்மித்த பகுதியில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த வேளை இலங்கைக் கடற்படையினரால் திருப்பி அனுப்பப்பட்டனர். இது கண்டிக்கத்தக்கது.

தமிழகக் கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரமான கடற்றொழிலைப் பாதுகாத்துத் தரவேண்டிய பொறுப்பு இந்திய மத்திய அரசுக்கு உள்ளது.

தமிழக மீனவர்கள் தொடர்ந்து இலங்கையில் தடுத்து வைக்கப்படுகின்றமையால் பல்லாயிரக் கணக்கான குடும்பங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் எதிர்வரும் தைப்பொங்கலுக்கு முன்னதாக இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்துத் தமிழக மீனவர்களையும் விடு விப்பதற்கான நடவடிக்கைகளை இந்திய மத்திய அரசு எடுக்க வேண்டும்.''- என்றுள்ளது. (எ)

## தமிழகத்தில் 5 கோடி 92 லட்சம் வாக்காளர்கள்!

வாக்காளர் பட்டியல் திருத்தத்தை அடுத்து தமிழகத்தில் 5 கோடியே 92 லட்சம் வாக்காளர்கள் உள்ளனர் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள அறிவிப்பில்-

''தமிழகத்தில் கடந்த வருடத்தை விட இவ்வருடம் 10 லட்சம் வாக்காளர்கள் அதிகமாக உள்ளனர்.

''இதேவேளை, அடுத்த மாதம் 10 ஆம் திகதி முதல் புதிய வாக்காளர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்படும்.''- என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## சர்வதேச பயங்கரவாதிகள் பட்டியலில் பின்லேடனின் மகன்



வொஷிங்டன், ஜன.07

அல்கொய்தாவின் முன்னாள் தலைவரான பின்லேடனின் மகன் ஹம்ஸா பின்லேடனைச் சர்வதேச பயங்கரவாதிகள் பட்டியலில் அமெரிக்கா உத்தியோகபூர்வமாகச் சேர்த்துள்ளது.

2015ஆம் ஆண்டு அகொய்தா இயக்கத்தின் உறுப்பினராக அறிவிக்கப்பட்டவர் ஹம்ஸா பின்லேடன். அதையடுத்து, 20வயதான அவர் மேலைத்தேய நாடுகளின் தலைநகரங்களில் தாக்குதல் நடத்த வேண்டும் என்று அறைகூவல் விடுத்திருந்தார்.

இதேவேளை, அல்கொய்தா இயக்கத்தின் அடுத்த தலைவராக அவர் உருவாகலாம் என்றும் எதிர்பார்ப்புகள் ஏற்பட்டுள்ளன. இந்த நிலையிலேயே அவரைச் சர்வதேச பயங்கரவாதியாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

மேலும், ஹம்ஸா பின்லேடன் பயங்கரவாதச் செயற்பாடுகளுடன் தொடர்புபட்டவர் என்றும், அமெரிக்காவுடன் எந்தவிதமான வர்த்தகத்திலும் அவர் ஈடுபடக்கூடாது என்றும், அமெரிக்காவில் அவர் எந்தவிதமான சொத்துக்களையும் வைத்திருக்கக்கூடாது என்றும் அமெரிக்கா திட்ட வட்டமாகத் தெரிவித்துள்ளது. (எ)

## அமெ.கடற்படையில் முதன்முதலாக பெண்கள்

நியூயோர்க், ஜன.07

அமெரிக்கக் கடற்படையில், முதன்முதலாக 3 பெண் வீராங்கனைகள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இதுவரை காலமும் ஆண்களுக்காக மட்டுமே ஒதுக்கப்பட்டிருந்த கடற்படையின் ஆயுதப் படையிலேயே அவர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். அதில் மேற்படி 3 பெண்களும் ரைபிள், இயந்திரத்துப்பாக்கி மற்றும் எறிகணைகளை இயக்கும் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

ஆபத்துக்கள் நிறைந்த கொமாண்டோப் பிரிவு உட்பட அனைத்து இராணுவப் பணிகளிலும் பெண்களும் இணைத்துக் கொள்ளப்பட வேண்டும் என்று 2015ஆம் ஆண்டு அமெரிக்கப் பாதுகாப்புச் செயலாளர் ஆஷ் கார்ட்டர் விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாகவே இந்தப் பணி நியமனம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (எ)

# மீண்டும் உருவாகுமா பனிப்போர்? ஐரோப்பிய பிராந்தியத்தில் அச்சம்

## ரஷ்ய எல்லையில் அமெரிக்க ராணுவம்





போல்டிக் நாடுகளின் எல்லையில் அண்மைக் காலமாக நேட்டோவைச் சேர்ந்த அதிகளவிலான அமெரிக்கத் தரப்பு விசேட அதிரடிப் படையினர் குவிக்கப்பட்டு வருகின்றனர். பதிலுக்கு ரஷ்யா தனது படைகளை அந்தப் பிராந்தியத்தில் குவித்து வருகிறது எனவும் தெரிய வந்துள்ளது. இதனால் மீண்டும் பனிப்போர் ஏற்படுவதற்கான அச்சம் ஐரோப்பியப் பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ளது.

லிதுனியா மற்றும் எஸ்டோனிய உள்ளிட்ட போல்டிக் கூட்டணி நாடுகளுக்கு அவற்றின் அந்நிய நாடுகளிலிருந்து பாதுகாப்புப் பிரச்சினை இருக்கிறது எனவும் நேட்டோ அமைப்பு கூறி வந்தது.

இந்தநிலையில் அந்த நாடுகளின் கிழக்கு எல்லையான ரஷ்ய எல்லைப் பகுதியில் நேட்டோவைச் சேர்ந்த அதி களவிலான அமெரிக்க விசேட அதிரடிப்படையினர் குவிக்கப்பட்டு வருகின்றனர்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ரஷ்யா ஊடுருவியதாகக் குற்றங்கள் சுமத்தப்பட்ட நிலையில் தற்போது அதிரடிப்படைகளை ரஷ்ய எல்லைப் பகுதியில் குவித்துள்ளமை ஐரோப்பிப் பிராந்தியத்தில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

மேலும் அமெரிக்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள ரொனால்ட் ட்ரம்ப் அமெரிக்க நேட்டோப் படைகளுக்கான கட்டுபாடுகளை அதிகரிக்கப் போகிறார் எனவும் ரஷ்ய போல்டிக் நாடுகளுக்கான உறவைப் பலப்படுத்துவதற்கு தான் செயற்படுகின்றார் எனவும் கூறி வந்தார்.

இந்தநிலையில் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு இணங்க போல்டிக் பிராந்தியத்தில் நேட்டோப் படைகள் குவிக்கப்பட்டு வருகின்றன.


2014 ஆம் ஆண்டு தொடரப்பட்ட உக்ரைனின் கிரிமியா வகையான தாக்குதல் திட்டத்திலிருந்து தம்மைப் பாதுகாக்கவே அமெரிக்கப் படைகள் தமது நாட்டில் நிலை கொண்டுள்ளன என்று லித்துவேனிய ஜனாதிபதி அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் போல்டிக் நாடுகளுடன் ரஷ்யாவின் உறவை வலுப்பெறச் செய்வதாகக் கூறிவந்த நிலையில் தற்போது நேட்டோவின் அமெரிக்க அதிரடிப்படையை போல்டிக் நாடுகளின் எல்லைப் பகுதியில் குவித்துள்ளமை மற்றும் ரஷ்யாவின்பதில்படை குவிப்புகள் என்பவை மீண்டுமொரு பனிப்போரை உருவாக்குமோ எனும் அச்சத்தை ஐரோப்பிய பிராந்தியத்தில் ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)



மாதேசி மக்களுக்கும் சம உரிமை அளிக்கும் வகையில் நேபாள நாட்டின் அரசமைப்புச் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அந்த நாட்டின் எதிர்க்கட்சிக் கூட்டணியான நேபாள கம்யூனிஸ்ட் கட்சிதலைமையில் பல கட்சிகளைச் சேர்ந்த தொண்டர்கள் தலைநகர் காத்மண்டுவில் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# கியூபா - அமெ. வணிக ஒப்பந்தம் 50 வருட பகைக்கு முற்றுப்புள்ளி



ஹவானா, ஜன.07

அரை நூற்றாண்டு கால பகைமைக்கு முற்றுப் புள்ளி வைக்கும் விதமாக அண்டை நாடுகளான கியூபா - அமெரிக்கா இடையே வணிக ரீதியிலான புதிய ஒப்பந்தம் கைச்சாத்தாகியுள்ளது.

அமெரிக்காவும், அதன் அண்டை நாடான கியூபாவும் அரை நூற்றாண்டுக்கும் மேலாக பரம எதிரிகளாக இருந்தன. 1959 ஆம் ஆண்டு அமெரிக்காவின் ஆதரவுடன் அங்கு நடைபெற்று வந்த ஆட்சியை பிடெல் காஸ்ட்ரோ தலைமையிலான கம்யூனிஸ்ட் புரட்சிப்படை தூக்கியெறிந்த பின்னர் இருநாடுகளுக்கும் இடையில் தீராப் பகை நிலவிவந்தது.

அதன்பின்னர், அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவும், கியூபாவின் தற்போதைய ஜனாதிபதி ரவுல் காஸ்ட்ரோவும் செய்த தொடர்முயற்சியால் இரு நாடுகளுக்கு இடையே உள்ள உறவில் சமரசம் ஏற்பட்டது.


இந்தநிலையில், சுமார் 55 வருடங்களுக்குப் பின்னர் கியூபாவில் இருந்து அமெரிக்காவுக்கு காய்கறிகளின் படிமங்களால் உருவாக்கப்படும் மரக்கரி ஏற்றுமதி செய்ய இரு நாடுகளுக்கு இடையே வணிக ரீதியிலான ஒப்பந்தம் கையொப்பமாகியுள்ளது.

ஒரு தொன் மரக்கறி 420 அமெரிக்க டொலர் என்ற விலையில், முதல் கட்டமாக 40 தொன் மரக்கரி ஏற்றுமதி செய்யப்பட உள்ளது.

இந்த ஒப்பந்தம் கியூபா - அமெரிக்கா உறவில் புதிய பாலமாக இருக்கும் என்று கருதப்படுகிறது. (எ)

# தன் தூதரக அதிகாரிகளை திரும்ப அழைத்தது ஜப்பான்

## தென்கொரிய தூதரகத்தில் சர்ச்சைக்குரிய பெண் சிலையால்



ரோக்கியோ, ஜன.07

தென் கொரியாவின் பூசன் சிட்டி நகரில் உள்ள ஜப்பான் தூதரகத்தில் சர்ச்சைக்குரிய பெண் சிலை ஒன்று அமைக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் தனது தூதரக அதிகாரிகள் இருவரை அங்கிருந்து ஜப்பான் திரும்பப் பெற்றுள்ளது.

தென் கொரியாவின் பூசன் சிட்டி நகரில் ஜப்பானின் தூதரக அலுவலகம் அமைந்துள்ளது. அந்த அலுவலகத்தின் வெளிப்பகுதியில், கடந்த டிசெம்பர் மாதம் அந்த நாட்டைச் சேர்ந்த சிவில் உரிமைகளுக்கான குழு ஒன்று 'சுகம் தரும் பெண்' எனப்படும் சிலை ஒன்றை நிறுவியது.

இந்தச் சிலை 2 ஆம் உலகப்போரின்போது ஜப்பான் இராணுவ வீரர்களின் பாலியல் தேவைகளை நிறைவேற்றுவதற்காக, கொரியப் பெண்கள் வலுக்கட்டாயமாக பாலியல் அடிமைகளாகப் பயன்படுத்தப்பட்ட சம்பவத்தை நினைவுகூரும் விதமாக உள்ளது என்று ஜப்பான் கருதியது.

இந்த நடவடிக்கை இருநாடுகளுக்கு இடையேயான உறவில் கசப்பை உண்டாக்கின்றது எனக் கூறிய ஜப்பான், அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் விதமாக, அந்தநாட்டில் பணியாற்றிவந்த தென் கொரியாவுக்கான ஜப்பானியத் தூதர் மற்றும் அங்குள்ள தூதரக அதிகாரி இருவரையும் திரும்பப் பெற்றுக் கொண்டுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையே நடைபெற இருந்த பணப்பரிமாற்ற ஒப்பந்தம் மற்றும் உயர் மட்ட அதிகாரிகள் அளவிலான பொருளாதாரப் பேச்சு ஆகியவையும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன என்று ஜப்பானிய அமைச்சரவையின் தலைமைச் செயலாளர் யோஷிதே சுகா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஜப்பானின் இந்த நடவடிக்கை வருத்தம் அளிப்பதாகத் தென்கொரிய வெளியுறவுத்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)







சாவகச்சேரி சரசாலை வடக்கு உதயநிலா விளையாட்டுக் கழகம் மற்றும் நித்திலா மகளிர் சங்கம் என்பன இணைந்து சரசாலை வடக்கு ஜே/317 கிராம அலுவலர் பிரிவில் கிராம சேவகராகப் பல வருடங் களாக கடமையாற்றிய க.முல்லைமாறனைக் கௌரவித்தன.

நித்திலா மகளிர் சங்கத்தினரின் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

தற்போது இவர் இடமாற்றம் பெற்று வேறு பகுதியில் கடமையில் அமர்த்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.


கிராம அலுவலர் மங்கல வாத்தியங்களுடன் விழா மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டார். அவருடைய சேவைகளைப் பாராட்டி நினைவுக் கேடயம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. (ஐ-21)





யாழ்.மாவட்ட வலிகாமம் தென்மேற்கு பிரதேச செயலகத்துக்குட்பட்ட சில்லாலை கிராமத்துக்கு அக்கிராம மக்களதும் பங்குத்தந்தையினதும் வேண்டுகோளுக்கிணங்க அண்மையில் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டார் வடக்கு மாகாண அமைச்சர் பா.டெனிஸ்வரன். அவ்வேளை சில்லாலை கதிரை மாதா ஆலயப் பங்குத்தந்தை அருட்தந்தை அகஸ்டினும், நற்கருணை சபையின் பாதிரியார் அருட்தந்தை மங்களதாஸும் கிராம மட்ட அமைப்புக்களான மாதர் மற்றும் கிராம அபிவிருத்தி சங்கங்களின் தலைவர்கள், நிர்வாக சபை உறுப்பினர்கள் ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். சில்லாலை கதிரைமாதா ஆலயத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. (இ)






சாவகச்சேரி பிரதேச சபையின் உள்ளூராட்சி மாத நிறைவுநாள் விழா கடந்த 29 ஆம் திகதி சாவகச்சேரி பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. சாவகச்சேரி பிரதேச சபை செயலாளர் திருமதி முகுந்தினி கோடீஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கொடிகாமம் பிரதேச வைத்தியசாலை பிரதேச வைத்திய அதிகாரி பசுபதி அச்சுதன் கலந்து கொண்டார். நிகழ்வில் அண்மையில் இடம்பெற்ற நீச்சல், படகுப்போட்டி, துடுப்புப் படகுப் போட்டி போன்றவற்றில் வெற்றியீட்டிய இளைஞர்கள், விளையாட்டுக் கழகத்தினரால் கௌரவிக்கப்பட்டனர். (ஐ-21)

வடமாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன் பிரமான அடிப்படையில் தமக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் மாணவர்களுக்கு சைக்கிள்களை வழங்கியுள்ளார். கைதடி விநாயகர் ஆலய மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்ற நிகழ்வில் வைத்து இவை வழங்கப்பட்டன. (ஐ)





மடு கல்வி வலயத்துக்கு உட்பட்ட ஆண்டான்குளம் ரோமன் கத்தோலிக்கத் தமிழ்க் கலவன் பாடசாலையில் 2016 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 06 மாணவர்களுக்கு, அவர்களை மேலும் ஊக்குவிக்கும் நோக்கோடு வடக்கு கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரன் சைக்கிள்களை வழங்கினார். (ஐ)




நோயுற்ற மூத்த கலைஞர்களை அண்மையில் வீடு தேடிச் சென்று அவர்களின் சேம நலன்கள் குறித்து அறிந்து கொண்டனர் யாழ். பிரதேச செயலாளரும் கலாசார அதிகார சபையினரும், கலைஞர்களைச் சந்தித்து உறவாடும் நிகழ்வை ஏற்பாடு செய்யுமாறு கலாசாரத் திணைக்களம் விடுத்திருந்த அறிவுறுத்தல்களுக்கு அமையவே இந்தச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டது. (இ-19)



# டோனிதான் எப்போதும் என்னுடைய தலைவர்!

## விராட் கோஹ்லி கூறுகிறார்



மும்பை, ஜன.07

நீங்கள்தான் எப்போதும் என்னுடைய தலைவராக இருக்கிறீர்கள் என விராட் கோஹ்லி தனது டுவிட்டரில் டோனிக்குப் புகழாரம் சூட்டியுள்ளார்.

இந்திய கிரிக்கெட் ஒரு நாள் மற்றும் 20 ஓவர் அணித் தலைவர் பதவியில் இருந்து விலகும் முடிவை டோனி திடீரென அறிவித்துள்ளார்.


இது ரசிகர்களுக்கு பெரும் அதிர்ச்சியை அளித்துள்ளது. தலைவர் பதவியில் இருந்து டோனி செய்த சாதனைகளை முன்னாள் மற்றும் இந்நாள் வீரர்கள் பாராட்டி வருகிறார்கள்.

இந்நிலையில், வீராட் கோஹ்லி டுவிட்டரில் டோனிக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அதில், ''நீங்கள்தான் எப்போதும் என்னுடைய தலைவராக இருக்கிறீர்கள். எப்போதும் இளம் வீரர்களுக்குத் தலைவராக இருப்பதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்''.- என்று புகழ்ந்துள்ளார்.

# டோனி கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்றிருந்தால் அவரது வீட்டுக்கு முன் ஆர்ப்பாட்டம் செய்திருப்பேன்!

## கிரிக்கெட் மேதை சுனில் காவஸ்கர் கூறுகிறார்




மும்பை, ஜன.07

கிரிக்கெட் விளையாட்டிலிருந்து டோனி ஓய்வு பெற்றிருந்தால், அவரை மீண்டும் கிரிக்கெட்டில் ஈடுபடுமாறு அழைப்பதற்கு அவரது வீட்டின் முன்பாக முதலாவது ஆளாக ஆர்ப்பாட்டம் செய்திருப்பேன் என்று இந்தியாவின் கிரிக்கெட் மேதைகளில் ஒருவரான சுனில் காவஸ்கர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இருவகை சர்வதேச மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் போட்டிகளுக்கான தலைமைப் பதவியிலிருந்து டோனி ஓய்வுபெற்ற போதிலும் கிரிக்கெட் விளையாட்டிலிருந்து ஓய்வு பெறாதமையை நான் வரவேற்கிறேன்.

இந்தியக் கிரிக்கெட்டுக்கு இன்னும் சில காலம் சேவையாற்றக்கூடிய ஆற்றல் மஹேந்த்ர சிங் தோனிக்கு இருக்கிறது.

கிரிக்கெட் வீரர் என்ற வகையில் எதிரணிகளை துவம்சம் செய்யும் ஒரு வீரராக அவர் இன்னும் காணப்படுகின்றார். தனி ஓர் ஓவரில் போட்டியின் தன்மையை மாற்றக்கூடிய ஆற்றல் மிக்கவர் தோனி. வீரராக அவர் இந்தியாவுக்கு மிகவும் அவசியமாகத் தேவைப்படுகின்றார்.

இந்திய அணியில் அவர் ஒரு வீரராகத் தொடர்ந்து விளையாட எடுத்த தீர்மானத்தை வரவேற்கின்றேன்.- என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# 11 நாடுகளில் சதம் அடித்தார் யூனுஸ்கான்!



சிட்னி, ஜன.07

சிட்னியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற டெஸ்ட் போட்டியில் மூத்த வீரரான யூனுஸ்கான் 208 பந்துகளில், 11 பவுண்டரிகள், ஒரு சிக்ஸருடன் 33 ஆவது சதத்தை அடித்தார்.


ஆஸ்திரேலிய மண்ணில் யூனுஸ்கான் சதம் அடிப்பது இதுவே முதல்முறையாகும்.

மேலும் டெஸ்ட் அந்தஸ்து பெற்ற அனைத்து அணிகளுக்கு எதிராகவும் சதம் அடித்தவர் என்ற சாதனையையும் யூனுஸ்கான் படைத்தார்.

அத்துடன், டெஸ்ட் போட்டிகள் நடைபெற்ற 11 நாடுகளில் சதம் அடித்த முதல் வீரர் என்ற சாதனையையும் யூனுஸ்கான் நிகழ்த்தி உள்ளார்.

அவர் ஐக்கிய அரபு எமிரேட் சில் நடை பெற்ற டெஸ்ட் போட்டியிலும் சதம் அடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

ராகுல் ராவிட், ஜயவர்த்தன, சங்கக்கார, முகமது யூசுப் ஆகியோர் 10 நாடுகளில் நடைபெற்ற டெஸ்ட் போட்டிகளில் சதம் அடித்துள்ளனர்.



# டேவிட் வோர்னர் புதிய சாதனை!

சிட்னி, ஜன.07

பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட்டில் ஆஸ்திரேலிய வீரர் டேவிட் வோர்னர் 23 பந்துகளில் அரை சதம் அடித்து சாதனை படைத்துள்ளார்.

இதன் மூலம் டெஸ்ட் போட்டிகளில் 2 ஆவது அதிவேக அரை சதம் அடித்து சாதனை படைத்த வீரர் என்ற பெருமையை வோர்னர் பெற்றுள்ளார்.

பாகிஸ்தான் பந்து வீச்சை அடித்து நொருக்கிய வோர்னர் 23 பந்துகளில் அரை சதம் எட்டினார். இதில் 7 பவுண்டரிகள், 3 சிக்சர்கள் அடங்கும்.

இதற்கு முன்பு தென்னாபிரிக்க வீரர் காலிஸ் 24 பந்துகளில் அரை சதம் அடித்து 2 ஆவது இடத்தில் (ஸிம்பாப்வேவுக்கு எதிராக, 2005 ஆம் ஆண்டு) இருந்தார். அதை வோர்னர் முறியடித்தார்.

முதல் இடத்தில் பாகிஸ்தான் அணித் தலைவர் மிஸ்பா - உல் ஹொக் உள்ளார். அவர் 21 பந்துகளில் அரை சதம் (ஆஸ்திரேலியாவுக்கு எதராக, 2015) அடித்துள்ளார்.

# சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து அப்போட், ரோசவ் திடீர் விலகல்!






கேப்டவுன், ஜன.07

தென்னாபிரிக்கக் கிரிக்கெட் அணியின் வீரர்களான அப்போட், ரோசவ் ஆகியோர் சர்வதேச கிரிக்கெட்டுக்கு முழுக்குப் போட முடிவு செய்துள்ளனர்.

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் வேகப் பந்து வீச்சாளர் கைல் அப்போட் (வயது 29) திடீரென சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற முடிவு செய்துள்ளார்.

அவர் இங்கிலாந்தின் கவுண்டி அணியான ஹாம்ப்ஷைர் அணிக்காக விளையாட 3 ஆண்டுகளுக்கு ஒப்பந்தம் ஆகி இருக்கிறார். இனி முழுக்க முழுக்க அந்த அணிக்காக ஆடுவார் என்று தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம், நிறைவடைந்த இலங்கைக்கு எதிரான 2 ஆவது டெஸ்ட்டே, தென்னாபிரிக்க அணிக்காக அவர் ஆடிய கடைசி சர்வதேசப் போட்டியாகும்.

அவரை தொடர்ந்து தங்களது அணியிலேயே நீடிக்க வைக்க தென்னாபிரிக்கக் கிரிக்கெட் சபை தவறி விட்டது.

இதேபோல் தென்னாபிரிக்க அணிக்காக இதுவரை 36 ஒரு நாள் போட்டிகளில் ஆடியவரான முன்னணி துடுப்பாட் வீரர் ரைலீ ரோசவும் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து விலகுகிறார்.

அவரும் இதே கவுண்டி அணிக்காக ஆடுவதற்கு ஒப்பந்தம் ஆகியுள்ளார். இதையொட்டி 27 வயதான ரோசவ் தென்னாபிரிக்காவில் இருந்து இங்கிலாந்துக்கு குடியேற இருப்பதாக தெரிவித்துள்ளார்.

அப்போட், ரோசவின் முடிவு தென்னாபிரிக்க கிரிக்கெட் சபையை அதிர்ச்சிக்குள்ளாக்கி இருக்கிறது. தங்களுடனான ஒப்பந்தத்தை முறித்துக் கொண்ட இருவரும் இனி தேசிய அணிக்கான தேர்வில் பரிசீலிக்கப்பட மாட்டார்கள் என்று தென்னாபிரிக்கக் கிரிக்கெட் சபை கூறியுள்ளது.

# அணித் தலைவர் பொறுப்பை ஏற்க விராட் கோஹ்லி தயாராக உள்ளார்!

## இந்திய கிரிக்கெட் அணியின் தேர்வுக்குழு தலைவர் தகவல்




டில்லி, ஜன.07

இந்திய அணியின் தலைவர் பொறுப்பை ஏற்க விராட் கோஹ்லி தயாராக இருக்கிறார் என்று இந்திய கிரிக்கெட் அணியின் தேர்வுக்குழு தலைவர் எம்.எஸ்.கே.பிரசாத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தலைவர் பதவியில் இருந்து விலகுகிறார் என 6 மாதங்களுக்கு முன்போ, அல்லது ஓர் ஆண்டுக்கு முன்போ டோனி அறிவித்திருந்தால் நான் கவலைப் பட்டிருப்பேன்.


ஏனெனில், அப்போது விராட் கோஹ்லி தலைவர் பொறுப்பை ஏற்கும் அளவுக்கு தயாராக இல்லை.

ஆனால், இப்போது அணித் தலைவர் பொறுப்பை ஏற்க, கோஹ்லி தயாராகிவிட்டார். எனவே அப்பதவியில் இருந்து டோனி விலகியுள்ளார். சரியான நேரத்தில் இந்த முடிவை எடுத்ததற்காக அவரை வணங்குகிறேன். இந்திய கிரிக்கெட்டின் மீது அவருக்கு உள்ள அக்கறையை இது உணர்த்துகிறது.

அணித்தலைவர் என்ற முறையில் டோனி பல சாதனைகளை புரிந்துள்ளார். இருபதுக்கு 20 உலகக் கோப்பை, ஒருநாள் போட்டிக்கான உலகக் கோப்பை, சம்பியன்ஸ் கோப்பை என்று பல கோப்பைகளை அவர் வென்றுள்ளார். இதைவிட அவர் சாதிக்க வேறெதுவும் இல்லை. அவர் ஒரு மிகச் சிறந்த தலைவர்.

விக்கெட் காப்பு மற்றும் துடுப்பாட்டம் என்ற வகையில் இன்னும் 2 ஆண்டுகளாவது ஆடக் கூடிய திறமை அவரிடத்தில் உள்ளதாக கருதுகிறேன். அணியின் வெற்றிக்கு தேவையான பங்களிப்பை அளிப்பதற்கான ஆற்றல் அவரிடம் இருக்கிறது என்றும் தெரிவித்துள்ளார்.

## பிராவோவுக்கு பதிலாக திசர



மெல்போர்ன், ஜன.07

இலங்கை அணியின் முன்னணி சகலத்துறை வீரர் திசர பெரேரா ஆஸ்திரேலியாவில் இடம் பெற்று வருகின்ற 'பிக் பேஷ் லீக்' தொடரில் விளையாடவுள்ளார். இந்தத் தொடரில் மெல்போர்ன் ரினேகாட்ஸ் அணிக்காக இவர் விளையாடவுள்ளார்.

போட்டியின் போது உபாதைக்குள்ளான மேற்கிந்திய தீவுகளின் பிராவோவுக்கு பதிலாக இவர் அணிக்குள் அழைக்கப்பட்டுள்ளார்.

பிக் பேஷ் லீக்கில் ஹோபார்ட் ஹரிக்கன்ஷ் அணிக்காக இலங்கை அணியின் குமார் சங்கக்கார விளையாடி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## தோல்விக்குக் காரணம் கூறுகிறார் மத்யூஸ்!

கொழும்பு, ஜன.07

துடுப்பாட்ட வீரர்களின் செயல்பாடு சிறப்பாக இல்லாதமையே தோல்விக்கு முக்கிய காரணம் என்று இலங்கை அணித் தலைவர் மத்யூஸ் கூறியுள்ளார்.

மத்யூஸ் தலைமையிலான இலங்கை அணி தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப்பயணம் செய்து 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது.

இதில் எலிசெபத்தில் நடந்த முதல் டெஸ்டில் 206 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோற்ற இலங்கை, கேப்டவுனில் இடம்பெற்ற 2 ஆவது டெஸ்டிலும் 282 ஓட்டங்கள் வித்தியாசத்தில் படுதோல்வியடைந்தது.


இதன் மூலம் 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரை தென்னாபிரிக்கா 2-0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

இந்தத் தோல்வி குறித்து இலங்கை அணித்தலைவர் மத்யூஸ் கூறுகையில், நாணய சுழற்சியில் வென்றும், இலங்கை அணிக்கு சாதகமான நிலை இருந்தும், தோல்வியடைந்திருப்பது ஏமாற்றம் அளிக்கிறது.

மீண்டும் ஒரு முறை எங்கள் துடுப்பாட்ட வீரர்கள் அணியை மோசமான நிலைக்குக் கொண்டு சென்றுவிட்டனர்.

பந்து வீச்சாளர்கள் சிறப்பாக செயல்பட்டாலும், துடுப்பாட்ட வீரர்கள் சொதப்பி விட்டனர்.- என்று தெரிவித்துள்ளார்.

## பங்களாதேஷுக்கு எதிரான இருபதுக்கு 20: அபார வெற்றியை பெற்றது நியூசிலாந்து!




பேஓவல், ஜன.07


பங்களாதேஷ் அணிக்கு எதிரான 2 ஆவது இருபதுக்கு 20 போட்டியில் நியூசிலாந்து அணி 48 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றுள்ளது.

நியூசிலாந்து - பங்களாதேஷ் அணிகள் மோதும் 2 ஆவது இருபதுக்கு 20 போட்டி நேற்று பேஓவலில் இடம்பெற்றது. முதலில் விளையாடிய நியூசிலாந்து அணி 20 ஓவரில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 195 ஓட்டங்களைக் குவித்தது. அந்த அணி வீரர் கோசின் முன்ரோ சதம் அடித்து அசத்தினார். அவர் 101 ஓட்டங்களை எடுத்து (54 பந்துகளில் 7 பவுண்டரிகள், 7 சிக்சர்கள்) ஆட்டமிழந்தார்.

பின்னர் 196 ஓட்டங்கள் இலக்குடன் விளையாடிய பங்களாதேஷ் அணி நியூசிலாந்தின் அபார பந்து வீச்சில் திணறியது. அந்த அணி 18.1 ஓவர்களில் 148 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. இதன் மூலம் நியூசிலாந்து அணி 48 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

3 போட்டி கொண்ட இருபதுக்கு 20 ஐ நியூசிலாந்து அணி 2-0 என்ற கணக்கில் கைப்பற்றியுள்ளது. முதல் போட்டியிலும் அந்த அணி வெற்றி பெற்று இருந்தது. 3 ஆவது மற்றும் கடைசிப் போட்டி நாளை இடம்பெறவுள்ளது.

## பாகிஸ்தான் அணிக்கு 465 ஓட்டங்கள் வெற்றி இலக்கு!



சிட்னி, ஜன.07

சிட்னியில் நடைபெற்று வரும் 3 ஆவது டெஸ்ட் போட்டியில் ஆஸ்திரேலிய அணி 465 ஓட்டங்களை வெற்றி இலக்காக பாகிஸ்தானுக்கு நிர்ணயித்துள்ளது.

ஆஸ்திரேலியா - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான 3ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் சிட்னியில் நடைபெற்று வருகிறது. நாணயச் சுழற்சியில் வென்று துடுப்பாட்டத்தை தேர்வு செய்த ஆஸ்திரேலியா, முதல் இன்னிங்சில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 538 ஓட்டங்களைக் குவித்து டிக்ளேர் செய்தது.

பின்னர் முதல் இன்னிங்சை தொடங்கிய பாகிஸ்தான் 315 ஓட்டங்களில் சுருண்டது. ஆஸ்திரேலியாவை விட 223 ஓட்டங்கள் பின்தங்கியதால் பாகிஸ்தான் அணியை பொலோ-ஒன் செய்யக்கூடிய வாய்ப்பு கிட்டியது. ஆனால், பொலோ -ஒன் கொடுக்காமல் ஆஸ்திரேலியா 2 ஆவது இன்னிங்சைத் தொடங்கியது.

ஆஸ்திரேலியா அணி 32 ஓவரில் 2 விக்கெட் இழப்பிற்கு 241 ஓட்டங்கள் குவித்து 2 ஆவது இன்னிங்சை 'டிக்ளேர்' செய்தது.

முதல் இன்னிங்சில் 223 ஓட்டங்கள் முன்னிலை பெற்றிருந்ததால், ஆஸ்திரேலியா ஒட்டுமொத்தமாக 464 ஓட்டங்கள் பாகிஸ்தானைவிட அதிகம் பெற்றது. இதனால், பாகிஸ்தான் அணியின் வெற்றிக்கு 465 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயித்தது.

இமாலய இலக்கை நோக்கி பாகிஸ்தான் 2 ஆவது இன்னிங்சை தொடங்கியது. அணியின் ஓட்ட பெறுதி 51 ஆக இருக்கும்போது பாகிஸ்தான் அணி முதல் விக்கெட்டை இழந்தது.

பாகிஸ்தான் அணி 4 ஆவது நாள் ஆட்டம் முடிவில் 1 விக்கெட் இழப்பிற்கு 55 ஓட்டங்களை எடுத்துள்ளது.

இன்னும் 410 ஓட்டங்கள் எடுக்க வேண்டிய நிலையில் பாகிஸ்தான் கைவசம் 9 விக்கெட்டுக்கள் உள்ளன. இன்று ஒருநாள் மட்டும் மீதமுள்ளது.

கடைசி நாளில் 410 ஓட்டங்கள் என்பது மிகக்கடினம். இதனால், பாகிஸ்தான் தோல்வியை அல்லது சமநிலையை எட்டவே வாய்ப்புள்ளது.

## தமிழர்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈ.பி.ஆர்.எல்.எவ். சார்பில் அதன் தலைவர் கே.சுரேஷ் பிரேமச்சந்திரன், செயலாளர் சிவசக்தி ஆனந்தன் எம்.பி, வடக்கு மாகாண சபை உறுப்பினர் கே.சர்வேஸ்வரன், கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இ.துரைரட்ணம் ஆகியோரும் –

ரெலோசார்பில்என்.ஸ்ரீகாந்தா, எம்.கே.சிவாஜிலிங்கம், ஹென்றி மகேந்திரன், கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஜனா ஆகியோரும் –

புளொட் அமைப்பின் சார்பில் ரி.சித்தார்த்தன் எம்.பி, ஆர்.இராகவன் ஆகியோரும் பங்கு பற்றினர்.

ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் செயலாளர் சிவசக்தி ஆனந்தனின் கோரிக்கைக் கடிதத்தின் பேரில் இக்கூட்டம் கூட்டப்படுகின்றது என்று தெரிவித்த தலைவர் சம்பந்தன் அதனடிப்படையில் உறுப்பினர்களின் கருத்துகளைக் கேட்டார்.

ஈ.பி.ஆர்.எல்.எவ். சார்பில் சிவசக்தி ஆனந்தனும் சுரேஷ் பிரேமச்சந்திரனும் தற்போது இடம்பெறும் அமைதிப் பேச்சுக்கள் குறித்து பல சந்தேகங்களை எழுப்பினர்.

"தமிழ் மக்களின் இறைமை, சுயநிர்ணய உரிமை ஆகியவற்றை அங்கீகரிக்கும் வகையில் சமஷ்டி அடிப்படையில் இணைந்த வடக்கு, கிழக்கில் – தமிழர் தாயகத்துக்கு – ஒரு தீர்வைக் காண்போம் என்ற ஆணையைப் பெற்றே நாம் பேச்சுக்குச்சென்றிருக்கிறோம். மக்களின் அனுமதி இல்லாமல் அந்த ஆணைக்குக் குறைந்த தீர்வை நாம் ஏற்க முடியாது.

ஆனால் அரசுத் தரப்பிலும் எதிரணி தரப்பிலும் – ஒட்டுமொத்தத் தென்னிலங்கைதரப்பிலும் – சமஷ்டி இல்லை, ஒற்றையாட்சி தான், வடக்கு–கிழக்கு இணைப்பு இல்லை, பௌத்தத்துக்கே முதலிடம் என்றெல்லாம் திட்டவட்டமாக அறிவிப்புகள் வருகின்றன.

"ஆனால் தமிழர் தரப்பில் பேச்சுக்களின் பங்குபற்றுவோரிடமிருந்து அதற்குத் தெளிவான பதிலோ விளக்கமோ இல்லை. இவ்விடயத்தில் நாங்களும் இருட்டில். மக்களும் இருட்டில் .

"பொதுமக்கள், போராளிகள் என்று மூன்று லட்சம் பேரை இழந்துதான் இந்த நிலைமைக்கு நாம் வந்திருக்கிறோம். அந்த இழப்பின் அடிப்படையில் தான் நாம் மக்களிடம் ஆணை பெற்றிருக்கிறோம்.

நீங்கள் அரசுடன் பேசுவது ஒற்றையாட்சிக்கு உட்பட்ட அதிகாரப் பரவலாக்கலா? அல்லது இறையாண்மை, சுயநிர்ணய உரிமை ஆகியவை அங்கீகரிக்கப்பட்டதன் அடிப்படையில் சமஷ்டி ஆட்சியின் கீழான அதிகாரப் பகிர்வா? எது என்பதைத் தெளிவுபடுத்துங்கள்." – இப்படி அவர்கள் சார்பில் கோரப்பட்டது.

இதேபோன்ற கருத்தே ரெலோ உறுப்பினர்களாலும் முன்வைக்கப்பட்டது.

புளோட் சித்தார்த்தன், தமிழரசுக் கட்சியின் மாவை சேனாதிராசா, சுமந்திரன் ஆகியோரும் விளக்கமளித்தனர்.

நீண்ட விவாதத்தின் பின்னர் தலைவர் இரா.சம்பந்தன் தமது கருத்தை வெளியிட்டார். அங்கு இடம்பெற்றவை குறித்து நேற்றிரவு 'காலைக்கதிருக்கு' அவர் விவரித்தார்.

" அனைத்துக் கட்சியினரும் தங்கள் கருத்துக்களை வெளிப்படையாகவும், மனம் திறந்தும் சுதந்திரமாகவும் பேசினார்கள். அதற்குமுழுவாய்ப்பு அளிக்கப்பட்டது.

கருத்துகளைப் பரிமாறிக் கொள்ளமுடிந்தது. தீர்வுமுயற்சிகளில் நேரடியாகச் சம்பந்தப்படுவோரும் தமது பக்கக் கருத்துகளை வெளிப்படையாகத் தெரிவித்தனர்.

நமது தமிழ் மக்களுக்கு திருப்தி தராத எந்தத் தீர்வையும் நாம் ஏற்றுக் கொள்ளவே மாட்டோம். எனவே நாம் இணங்கும் தீர்வு எதுவும் தமிழ் மக்களுக்கு ஏற்புடையதாக இருக்க வேண்டும்.

அதேசமயம் யதார்த்த சூழ்நிலைகளையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

நமது தமிழ் மக்கள் தங்கள் கருமங்களை தாங்களே ஆற்றக்கூடியதாக ஓர் ஏற்பாட்டுக்கே நாம் இணங்க முடியும்.

தீர்வு முயற்சியில் பல்வேறு பிரச்சினைகள் எழத்தான் செய்யும். நாம் அவற்றை உதாசீனம் செய்ய முடியாது.

தீர்வு காண்பதற்கான நல்ல சந்தர்ப்பம் இப்போது கிட்டியுள்ளது. அதனை நாம் சரிவரப் பயன்படுத்த முயற்சிக்க வேண்டும். அதை ஒதுக்கிவிட முடியாது.

ஒற்றையாட்சி முறைமை எமக்கு ஏற்புடையதன்று. அதற்கு மாற்றான மார்க்கத்தைக் காண்பதற்கு உலகில் பல உதாரணங்கள், வழிகள் உள்ளன. அவற்றைப் பற்றியெல்லாம் நாம் பேசவேண்டும்; முயல வேண்டும்.

இணைப்பும் எமக்கு அவசியம். எமது தமிழ் மக்கள் வடக்கு, கிழக்கில் – பிரிக்கப்படாத தங்கள் தாயகத்தில் – ஒன்றித்திருப்பது அவசியம். அதை நிலைநாட்டுவதில் உள்ள சிக்கல்கள், யதார்த்தப் பிரச்சினைகள் குறித்து நாம் ஆராய்ந்தோம்.

கிழக்கில் முஸ்லிம்களும் கணிசமாக இருக்கின்றார்கள். அவர்களையும் ஒருங்கிணைத்துச் சென்றால்தான் நாம் சாதிக்க முடியும். அதற்காகப் பேச வேண்டும். பல முயற்சிகளை எடுக்க வேண்டும்.

அரசு – தென்னிலங்கை– இன்னும் திட்டவட்டமான தீர்வுத் திட்டத்தை வெளிப்படையாக முன்வைக்கவில்லை. எனினும் அரசமைப்புக்கான வழிகாட்டல் குழுவில் ஆக்கபூர்வமான பல அம்சங்கள் குறித்தும் கருத்துப் பரிமாறப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும் தென்னிலங்கை ஒரு திட்டத்தை உத்தியோகபூர்வமாக வெளியிட முன்னர் – அறிவிக்க முன்னர் – நாம் ஒரு முடிவை எடுத்து, தீர்மானங்களைச் செய்ய முடியாது.

ஆகவே, நாங்கள் தொடர்ந்து பார்த்திருக்க வேண்டும்; தொடர்ந்து பேச வேண்டும்; தொடர்ந்து கலந்துரையாட வேண்டும்.

உரிய சமயம் வரும் போது தான் நாம் முடிவுகளை எடுக்கலாம். அத்தகைய முடிவுகளை எடுக்கக்கூடிய காலமும், சந்தர்ப்பமும், சூழ்நிலையும் ஏற்படவில்லை.

அதுவரை இந்த முயற்சியில் ஈடுபடத்தான் வேண்டும்; ஈடுபாடு காட்டத்தான் வேண்டும்.

கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளின் ஒருங்கிணைப்புக் குழுவை நாம் அவ்வப்போது கூட்டி இன்னும் விரிவாகக் கருத்துப் பரிமாறலாம்.

எது, எப்படியாயினும் நமது தமிழ் மக்கள் ஏற்காத ஒரு தீர்வை நாமும் ஏற்க மாட்டோம். அதில் உறுதியாக உள்ளோம். – என்றார் சம்பந்தன். (உ)

## எம்.பியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிளிநொச்சி கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் பொது நினைவுச் சமாதி அமைக்கும் பணி, மாவீரர்களின் உறவினர்கள், முன்னாள் போராளிகள் மற்றும் பொதுமக்களால் நேற்று முன்தினம் வியாழக்கிழமை தொடங்கப்பட்டது.

இதன்போது நேரடியாக அந்த இடத்திற்குச் சென்ற கரைச்சிப் பிரதேச சபைச் செயலாளர், பிரதேச சபையின் அனுமதியின்றி சுடலையில் சமாதி கட்டவேண்டாம் என்று தடுத்ததுடன் அந்தப் பணியில் ஈடுபட்டவர்களுடனும் முரண்பட்டார்.

அவர் அங்கு செல்லும்போது நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனின் ஊடக உதவியாளர் ஒருவரையும் தனது வாகனத்தில் அழைத்துச் சென்றார் என்று கூறப்பட்டது.

தனது பணிப்புரையையும் மீறி அங்கு சமாதி கட்டும் பணி இடம்பெற்றமையால் பிரதேச சபைச் செயலாளர் அது தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார். பொலிஸார் இந்த விடயம் தொடர்பாக கிளிநொச்சி நீதிமன்றில் வழக்குப் பதிவுசெய்தனர்.

இந்த வழக்கு நேற்று இடம்பெற்றபோது, பிரதேச சபைச் செயலாளர் மன்றில் ஆஜராகவில்லை. பொதுமக்கள் சார்பாக ஆஜரான சட்டத்தரணி ஒருவர், பிரதேச சபைச்செயலாளர் தன்னுடன் ஊடகவியலாளரை அழைத்துச் சென்ற விடயத்தை மன்றின் கவனத்திற்கு கொண்டுவந்தார்.

இதனையடுத்து பிரதேச சபைச் செயலாளரை மன்றில் ஆஜராக நீதிமன்று உத்தரவிட்டது. சற்று நேரத்தில் அங்கு ஆஜரான அவரிடம், ஊடக உதவியாளரை அழைத்துச் சென்ற விடயம் தொடர்பாக மன்று கேள்வி எழுப்பியது.

அதை ஒப்புக்கொண்ட பிரதேச சபைச் செயலாளர், தான் செல்லும்போது அந்த ஊடகவியலாளர் வழியில் நின்று தனது வாகனத்தை மறித்து உதவி கேட்டபோது தான் ஏற்றிச் சென்றார் எனக் கூறினார். ஆனாலும் அது தன்னில் தவறு என்றும் அவர் ஒப்புக்கொண்டார்.

இதனையடுத்து கடமை நேரத்தில் அரசியல்வாதி ஒருவரின் தனிப்பட்ட ஊடகவியலாளரை அழைத்துச் சென்றமைக்காக அவரை நீதிமன்று எச்சரிக்கை செய்தது. (ம-70)

## 51 தமிழக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதனடிப்படையில், ஊர்காவற்றுறை நீதிவான் மன்றில் நேற்றுக்காலை முன்னிலைப் படுத்தப்பட்ட 39 பேரையும் விடுவிக்குமாறு பதில் நீதிவான் ஆர்.சபேசனும் –

மன்னார் நீதிமன்றில் நேற்றுக்காலை முன்னிலைப்படுத்தப்பட்ட 12 பேரையும் விடுவிக்குமாறு நீதிவான் ஆ.கி.அலெக்ஸ் ராஜும் –


உத்தரவுகளை வழங்கினர். இதனையடுத்து இரண்டு இடங்களிலும் விடுவிக்கப்பட்ட மீனவர்கள் வாகனம் மூலம் யாழ்ப்பாணத்துக்குக் கூட்டிவரப்பட்டனர். யாழ்ப்பாணத்தில் விடுதி ஒன்றில் தங்கவைக்கப்பட்டுள்ள அவர்களை இன்று அல்லது நாளை இலங்கை கடற்படையினர் தமது படகுகளில் கூட்டிச் சென்று சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து இந்தியக் கடற்படையினரிடம் ஒப்படைப்பர் என்றும் –

இந்தியக் கடற்படையினர் அவர்களைத் தமது படகுகளில் இந்தியக் கரைக்குக் கூட்டிச் செல்வர் என்றும் கூறப்பட்டது.

(உ–59–112)

# குழாய்க் கிணற்றைக் காணவில்லை கண்டுபிடிக்க நடவடிக்கை எடுங்கள்

## வவுனியா நகர சபையிடம் கோரிக்கை



வவுனியா,ஜன.07

வவுனியா நகரின் மத்தியில், முன்னாள் இராணுவத் தளபதி டென்ஸில் கொப்பேகடுவவின் சிலைக்கு முன்பாக அமைக்கப்பட்டிருந்த குழாய்கிணறு கடந்த சில வருடங்களுக்கு முன்னர் காணாமற்போய்விட்டது என்றும் அதனைக் கண்டுபிடித்து மக்கள் பாவனைக்கு தந்து உதவுங்கள் எனவும் வவுனியா நகர சபையிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சமூக நலன்விரும்பி ஒருவர் வவுனியா நகரசபைச் செயலாளர் ஆர்.தயாபரனிடம் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

காணாமல்போன கிணறு தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:–

வவுனியா நகருக்கு வருகின்ற பொதுமக்கள் மற்றும் அங்கு வியாபாரத்தில் ஈடுபடும் வர்த்தகர்களின் நலன் கருதி, வவுனியா நகர சபை, நகரமத்தியில் கொப்பேக்கடுவ சிலைக்கு முன்பாக கடந்த பல வருடங்களுக்கு முன்னர் குழாய்க்கிணறு ஒன்றை அமைத்திருந்தது.

ஆனால், கடந்த சில வருடங்களாக அந்தக் கிணறு இருந்த இடமே தெரியாமல் மறைக்கப்பட்டுள்ளது. இதனால் மக்களும் வர்த்தகர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையிலேயே கிணற்றைக் கண்டுபிடித்து தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இவ் விடயம் தொடர்பாக வவுனியா நகரசபைச் செயலாளரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது–

கிணறு தொடர்பாக முறைப்பாடு வந்தது உண்மை. கிணறு அமைக்கப்பட்ட இடத்துக்கு அருகில் வர்த்தக நிலையம் வைத்திருக்கும் எவரேனும் இரகசியமான முறையில் அந்தக் கிணற்றைப் பயன்படுத்துகின்றனரா என்பது தொடர்பாக சந்தேகம் உள்ளது.

எவ்வாறிருப்பினும் பொது மக்களின் தாகத்தை தீர்ப்பதற்காக அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட குழாய்க் கிணற்றை எவரேனும் மூடிமறைத்து தமது சொந்த தேவைக்கு மட்டும் பயன்படுத் துவார்களாயின் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். – என்றார். (ம –100)

# ஆசிரியை தாக்கியதால் பாதிக்கப்பட்ட 6 வயது மாணவி வைத்தியசாலையில்

ஆசிரியை ஒருவரால் தாக்கப்பட்டார் எனக் கூறப்படும் மாணவி சுவாசிப்பதில் சிரமம் ஏற்பட்ட நிலையில் யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கோண்டாவில் பகுதியைச் சேர்ந்த ஒரு பாடசாலையில் தரம் 6 இல் கல்வி கற்கும் மாணவியே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளார்.

மாணவி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள் ளமையை அறிந்து அங்கு சென்று அவரைப் பார்வையிட்ட வடக்கு மாகாண சபையின் எதிர்க் கட்சித் தலைவர் சி.தவராசா, இந்த விடயத்தை மாகாணக் கல்வி அமைச்சர் த.குருகுலராசா, கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.ரவீந்திரன் ஆகியோரின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்.

இதனையடுத்து வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர், இந்த விடயம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்கு குழு ஒன்றை அமைத்துள்ளார் எனத் தெரியவருகின்றது.

மேற்படி சம்பவம் தொடர்பாக மாணவியின் பெற்றோர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். (ம)

## கனகபுரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயற்பாட்டைத் தடுத்து நிறுத்தியிருந்தார்.

இது தொடர்பான வழக்கு நேற்று கிளிநொச்சி நீதிமன்றில் இடம்பெற்றது. இதன்போது, பிரதேச சபைச் செயலாளர் மன்றில் முன்னிலையாகாத நிலையில் அமர்வு நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, மன்று அவரை ஆஜராகுமாறு அழைப்பு விடுத்தது.

அங்கு ஆஜராகிய அவரிடம், கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லக் காணி தொடர்பான ஆவணங்களை அடுத்த வழக்குத் தவணையான எதிர் வரும் 20 ஆம் திகதி மன்றில் சமர்ப்பிக்கவேண்டும் என்று நீதிமன்று உத்தரவிட்டது.

(ம–70)

## இறந்தவர்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மானப் பணிகளில் ஈடுபடுவ தாயின் உரிய அனுமதிகளைப் பெற்றுக்கொண்டு அவற்றை மேற்கொள்ள முடியும் என்று தெரிவித்த நீதிமன்று, அனுமதி பெறாமல் சமாதி அமைக்கும் பணிகளில் ஈடுபட்டனர் என்று கூறப்படும் ஐந்து பேரையும் தலா 50 ஆயிரம் ரூபா சரீர பிணையில் செல்ல அனுமதித் தது.

உரியமுறைப்படி அனுமதிகளைப் பெற்று கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளுங்கள் எனவும் நீதி மன்றம் அவர்களை அறிவுறுத்தியது. வழக்கு எதிர் வரும் 20 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்படது. (ம–70)

காலைக்கதிர்
Kalaikkathir

# க.பொ.த. (உ.த) பரீட்சை பெறுபேறு அடுத்த வாரம்

கடந்த ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகள் அடுத்த வாரம் வெளியிடப்படும் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் ஜயந்த புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

சுமார் மூன்று லட்சம் மாணவர்கள் இந்தப் பரீட்சைக்குத் தோற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, க.பொ.த. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளுடன் பல்கலைக்கழக அனுமதிக்கான வழிகாட்டல் கையேடும் வெளியிடப்படும் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்தக் கையேட்டை பயன்படுத்தி மாணவர்கள் தமக்கு விருப்பமான பாடவிதானங்களைத் தெரிவு செய்ய முடியும் என்று ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் மொஹான் சில்வா கூறியுள்ளார்.

பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கும் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தி எய்திய மாணவர்களுக்கு உதவும் வகையில், 300 விசேட ஆசிரியர்கள் சேவையில் இணைக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார். (ம)

# வடக்கு, கிழக்கு மேம்பாடு தொடர்பாக கனடாவில் 15, 16, 17 இல் உயர் மாநாடு


றொறன்ரோ, ஜன.07

வடக்கு மற்றும் கிழக்கின் கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட விடயங்களைப் பிரதானப்படுத்தும் அபிவிருத்தி மாநாடொன்று கனடாவில் எதிர்வரும் 15, 16, 17ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் உள்ளிட்ட வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் உள்ள போரின் பாதிப்புக்கள் மற்றும் அனைத்துப் பிரச்சினைகளும் கிழக்கு மாகாணத்திலும் காணப்படுவதால் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கான சுகாதாரம் மற்றும் கல்வி அபிவிருத்தி தொடர்பான சர்வதேச மாநாடாக இது நடத்தப்படவுள்ளது.

இந்த மாநாட்டில் வடக்கு மாகாணத்தின் சுகாதாரம் மற்றும் கல்வி அமைச்சர்கள், அந்த அமைச்சுக்களின் செயலாளர்கள், யாழ். பல்கலைக்கழகத்தின் பேராசிரியர்கள், யாழ் போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர்கள், கிழக்கு மாகாணத்தின் சுகாதாரம் மற்றும் கல்வி அமைச்சின் அதிகாரிகள், மாகாண சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட 20 பேர் கொண்ட குழுவினர் கலந்து கொள்ளவுள்ளனர்.



கனடா, ஐக்கிய இராச்சியம், அமெரிக்கா, ஆஸ்திரேலியா, நோர்வே போன்ற நாடுகளில் இருந்து துறை சார் நிபுணர்கள், நிதி வழங்கும் அமைப்பின் பிரதிதிகள், பல்கலைக்கழகங்களின் பிரதிநிதிகள் பங்குபற்றவுள்ளார்கள்.

# யாழ். பல்கலைக்கழகத்தின் 32ஆவது பட்டமளிப்பு விழா

## ஜனவரி 10 மற்றும் 11 ஆம் திகதிகளில்

யாழ். பல்கலைக்கழகத்தின் 32ஆவது பட்டமளிப்பு விழா எதிர்வரும் 10ஆம் மற்றும் 11ஆம் திகதிகளில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது என யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் தெரிவித்துள்ளார்.

யாழ். பல்கலைக்கழகத்தின் 32ஆவது பட்டமளிப்பு நிகழ்வு தொடர்பாக நேற்று நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இவ்வருடம் 2151 மாணவர்கள் பட்டம் பெறவுள்ளனர். இவர்களில் 164 மாணவர்கள் பட்டப்படிப்பின் தகைமைச் சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளவுள்ளனர். 1275 மாணவர்கள் உள்ளக மாணவர்களாகப் பட்டம் பெற்றுக் கொள்ளவுள்ளனர். வவுனியா வளாகத்திலிருந்து 196 உள்ளக மாணவர்கள் பட்டம் பெறவுள்ளனர். 484 மாணவர்கள் வெளிவாரிப் பட்டதாரிகளாகப் பட்டம் பெறவுள்ளனர். இதேவேளை 32 மாணவர்கள் டிப்ளோமா பட்டதாரிகளாகப் பட்டம் பெறவுள்ளனர்.

பட்டமளிப்பு விழாவை இரண்டு நாள்கள் ஒன்பது அமர்வுகளாக நடத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

முதல் நாள் அமர்வுகள் காலை 9 மணிக்கும், 10.30 மணிக்கும், 11.30 மணிக்கும் பிற்பகல் 2 மணிக்கும், 3.30 மணிக்கும் நடைபெறவுள்ளன.

இரண்டாம் நாள் அமர்வுகள் காலை 9 மணிக்கும், 10.30 மணிக்கும், பிற்பகல் 1.30 மணிக்கும், 3 மணிக்கும் நடைபெறும்.

பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெறுவோர் தொடர்பான விவரங்கள் உட்பட மேலதிக தகவல்கள் யாழ். பல்கலைக்கழகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளன எனவும் துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம் கூறினார்.

# ஊடகங்களே அரசைக் கவிழ்க்க முயற்சி

## – ரணில் குற்றச்சாட்டு

அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு ஊடகங்களே முயற்சிக்கின்றன என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குற்றம் சுமத்தியுள்ளார். மகிந்த ராஜபக்ஷ ஆட்சி அமைத்து, அவர் பிரதமரானால் தங்களுக்கு சிறந்த வரப்பிரசாதங்கள் கிடைக்கும் என்றும் சில ஊடகங்களின் ஆசிரியர்கள் கனவு காண்கிறார்கள் எனவும் ரணில் கூறினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் களனி பிரதான காரியாலயத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று இடம்பெற்றபோது, அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்–,

கடந்த இரண்டு மூன்று வாரங்களாக அரசாங்கத்தைக் கவிழ்க்கப் பார்த்தது மக்கள் அல்லர், சில ஊடகங்களே ஆகும். சில சம்பவங்கள் ஊடகங்களால் பெருப்பித்துக் காட்டப்பட்டன. அதன்மூலம் எங்களை வீழ்த்துவதற்கு இவர்கள் நினைத்தார்கள்.

நாமும் அனைத்தையும் பார்த்துக்கொண்டுதான் இருந்தோம். – என்று கூறினார். (ம)

## இறக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யப்படும் 1கிலோ அரிசிக்கு அறவிடப்பட்ட 80 ரூபா வரி 15 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது.

இறக்குமதி செய்யப்படும் சம்பா, நாடு, சிவப்புப் பச்சை ஆகிய அரிசி வகைகளுக்கே இந்த வரிக்குறைப்பு செய்யப்பட்டுள்ளது.

இறக்குமதி செய்யப்படும் பாசுமதி அரிசிக்கு இந்த வரிக்குறைப்பு பொருந்தாது என்றும் நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

## நாட்டைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடாக வழங்குவதற்கு இடமளிக்கமாட்டோம் என்றும் அறிவித்துள்ளனர்.

இலங்கை ஐக்கிய பிக்குகள் சங்கத்தின் கண்டிக் கிளையை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் அஸ்கிரிய மகா விகாரையின் பலேபான சிறி சந்திரானந்த மகாநாயக்கர் ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய மல்வத்த பீடத்தின் இரண்டாம் நிலையிலுள்ள மகாநாயக்கரான வண. திம்புல்கும்புரே விமலனந்த தேரர் இவ்வாறு கூறியுள்ளார்.

அங்கு தேரர் மேலும் தெரிவிக்கையில்–

புதிய அரசமைப்பின் ஊடாக மிகவும் பயங்கரமான சட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கு நல்லாட்சி அரசு முயற்சித்து வருகின்றது.

முன்னர் அரச சார்பற்ற சர்வதேச அமைப்புக்கள் இலங்கைக்கு வந்து மக்களுக்குச் சில நிவாரணங்களை வழங்கின. இன்று அவை வித்தியாசமான செயற்பாடுகளை இங்கு செய்கின்றன. அவர்கள் இங்கு வந்து இந்த நாட்டில் சட்டங்களை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர். இந்த நாட்டுக்கு அவசியமான சட்டங்களை அல்ல, வெளிநாடுகளுக்குத் தேவையான சட்டங்களையே அவர்கள் இங்கு வந்து இயற்றுவதற்கு ஆரம்பித்துள்ளனர்.

எமது நாட்டின் அரசியல்வாதிகளும் அமைச்சர்களுமே சட்டங்களை நன்றாகத் தெரிந்து வைத்துள்ளனர். ஆனால் நாட்டிலுள்ள ஏனைய பாமர மக்கள் இவர்கள் முன்வைக்கின்ற எல்லா விடயங்களும் சரி என்று அறியாமல் கையை உயர்த்தி அதற்கு ஆதரிக்கின்றனர். இது பெருந்தவறாகும்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தன அன்று உறுப்பினர்களின் கையெழுத்துக்களைப் பலவந்தமாகப் பெற்று, தனது பையில் இட்டுக்கொண்டு, ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்தியே தற்போதுள்ள அரசமைப்பை நிறைவேற்றியிருந்தார்.

ஆனால் இன்று பாரிய மாற்றங்களைச் செய்து மிகவும் பயங்கரமாக புதிய அரசமைப்பை உருவாக்கி நிறைவேற்றுவதற்கு முயற்சிக்கின்றனர். எனவே மகாநாயக்கர்களும், தலைவர்களும் இதனைக் கூர்மையாகக் கவனிக்க வேண்டும்.

அதுமட்டுமன்றி காணி அதிகாரம், பொலிஸ் அதிகாரம், ஆளுநரின் அதிகாரங்களை இரத்து செய்தல் உள்ளிட்டவற்றை மாற்றியமைத்தலை தேசிய குற்றச்செயலாகவே நான் பார்க்கின்றேன். இவை மிகவும் பயங்கரமான சட்டங்களாகும்.

இந்தச் சிறிய சிங்கள நாட்டில் இரண்டு கோடி மக்கள் வாழ்கின்றனர். இந்த நாட்டைப் பிரித்து, மாகாண சபை, பிரதேச சபை எனக்கூறி சில அதிகாரங்களை அதிகரித்துக் கொள்வதற்காக புதிய அரசமைப்பைக் கொண்டு வருவதற்கு முயற்சித்தால் அதனை ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நினைவுபடுத்து கின்றேன். – என்றார்.

இந்த நிகழ்வில் அஸ்கிரிய பீடத்தின் செயலாளர் வண. மெதகம தம்மானந்த தேரர் உரையாற்றுகையில்–

பௌத்த மதத்துக்கும், சிங்கள மக்களுக்கும், நாட்டுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் எந்தவொரு அரசமைப்பையும் நிறைவேற்ற இடமளிக்கமாட்டோம்.

புதிய அரசமைப்பின் ஊடாக பிரதேச மற்றும் மாகாண சபைகள் மட்டத்தில் வெவ்வேறு வலயங்கள் உருவாகும். தமிழ் மக்கள் வடக்கு, கிழக்கு இணைந்த இராச்சியத்தைக் கோருகின்றனர். விசேடமாக முஸ்லிம் மக்களுக்கு ஒன்றிணையாத புறம்பான வலயங்கள் அமைக்கும் யோசனையும் புலப்படுகின்றது.

2000ஆம் ஆண்டில் அநுரத்த ரத்வத்த அரசமைப்பு உருவாக்கம் தொடர்பான யோசனையை எம்மிடம் சமர்பித்த போது அதில் பௌத்த மதத்துக்கு முன்னுரிமை என்ற பதம் நீக்கப்பட்டிருந்தது. அதனை நாங்கள் சுட்டிக்காட்டியபோது அதன் மீது இன்னுமொன்றை ஒட்டிவிட்டு சரிப்படுத்திவிட்டோம் என்று கூறினர். பின்னர் அதனை நிறைவேற்ற விடாமல் ஐக்கிய தேசியக் கட்சியே தீ வைத்துக் கொளுத்தியது.

ஆனால் நல்லாட்சி அரசு ஆட்சிப் பீடம் ஏறியபோது உரையாற்றிய முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, இந்த அரசமைப்பை நிறைவேற்றுவோம் என்றே அறிவித்திருந்தார். இந்த நிலையில் மிகவும் பயங்கரமான சூழ்நிலையில் நாங்கள் இருக்கின்றோம். பொறுப்பு வாய்ந்த பிக்குகள் என்ற வகையில் பௌத்த மதத்துக்கும், சிங்கள மக்களுக்கும், நாட்டுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் எந்தவொரு அரசமைப்பையும் நிறைவேற்ற இடமளிக்க மாட்டோம்.

ஐக்கிய இலங்கை மற்றும் ஒற்றையாட்சி என்பவற்றுக்கு இடையில் வித்தியாசம் உள்ளது. ஐக்கிய அமெரிக்கா என்பது பிராந்தியங்கள் இணைந்த ஒன்றாகும். எனவே ஒற்றையாட்சி என்பதற்கு அமைய நாட்டைக் காத்துக்கொள்வதற்குக் கடமைப்பட்டுள்ளோம். – என்றார்.

# கல்முனை மீனவர்களை மீட்பதற்கு அமைச்சர் ஹரீஸ் மாலைதீவுக்கு

காணாமல் போய் இன்னும் கண்டுபிடிக்கப்படாமல் உள்ள நான்கு மீனவர்கள் உள்ளிட்ட இயந்திரப் படகினை மாலைதீவுக் கடற்பரப்பில் தேடுவதற்கான நடவடிக்கை எடுப்பதற்கும் மாலைதீவு அரசின் பாதுகாப்பில் உள்ள மீனவர்கள் இருவரையும் ஆழ்கடல் இயந்திரப் படகினையும் மீட்பதற்கும் உரிய நடவடிக்கைகளை அந்நாட்டு உயர் அதிகாரிகளை சந்தித்து முன்னெடுப்பதற்காக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும் விளையாட்டுத்துறை பிரதி அமைச்சருமான சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரீஸ் இன்று அதிகாலை மாலைதீவு பயணமாகிறார்.

கல்முனை பிரதேசத்திலிருந்து மீன் பிடிக்க கடலுக்குச் சென்று காணாமல் போன இரண்டு ஆழ்கடல் மீன்பிடி இயந்திரப் படகுகள் மற்றும் 6 மீனவர்களுள் இரண்டு மீனவர்கள் மற்றும் ஓர் இயந்திரப் படகு என்பன மாலைதீவில் கரையொதுங்கி தற்போது அம்மீனவர்கள் மாலைதீவு அரசின் பாதுகாப்பில் உள்ளனர். ஏனைய நான்கு மீனவர்களுடன் அவர்களின் இயந்திரப்படகு மாலைதீவு கடற்பரப்பில் தத்தளிப்பதாக தகவல் கிடைத்துள்ளது.

மேற்குறித்த விடயம் தொடர்பாக அமைச்சர் எச்.எம்.எம். ஹரீஸ் இன்று அதிகாலை மாலைதீவு நாட்டுக்கு பயணிக்கவுள்ளார். இவ்விஜயத்தின் போது அந்நாட்டு அரச உயர் அதிகாரிகளைச் சந்தித்து மாலைதீவு அரசின் பாதுகாப்பில் உள்ள இரண்டு மீனவர்கள் மற்றும் ஒரு இயந்திரப் படகு என்பவற்றை நாட்டிற்கு கொண்டு வருவதற்கும் ஏனைய நான்கு மீனவர்கள் உள்ளிட்ட இயந்திரப்படகினை மாலைதீவு நாட்டு கடற்படை மற்றும் கடலோர பாதுகாப்பு பிரிவின் உதவியுடன் மாலைதீவு கடற்பரப்பில் தேடுவதற்கும் அவர் நடவடிக்கை எடுக்கவுள்ளார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.01.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.